மலர் : 49

# சத்தியத்தின் குரல்

# THE VOICE OF TRUTH INTERNATIONAL

TAMIL EDITION

Volume - 49

# ✯ சத்தியத்தின் குரல் ✯


## Editorial Team

Founding Editor
**J.C.Choate**

Managing Editor
**S.Rajanayagam**

Translating Editor
**B.Benny Martin**

Guest Editors
Byron Nichols
Jerry Bates
Louis Rushmore
P.R. Swamy
P.C. Philemon rajah
B. Arjunan

Staff Writers
Wayne Barrier
Paula Bates
Shane Fisher
Emily Fisher
Kingsly rajah
Abel R. Nayagam

Publishing Consultant
**Betty Choate**



தேவையான பிரதிகளுக்கு...
**தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டம்**
86-A, தாராபுரம் ரோடு, காங்கயம் - 638701.
தமிழ்நாடு, இந்தியா.
**Cell : 98427 30382, 99655 30385**

Copies can be had from
**Tamil World Soul Winning Campaign**
**86-A, Dharapuram Road,**
**Kangayam - 638701. TN. India.**
**Cell : 98427 30382, 99655 30385**

**Gracious Word**
Post Box 15, Arasaradi,
Madurai - 625 016.
**Cell : 92 4421 4421, 92 4420 4420**

**The Word Of Christ**
Post Box 5,
Batlagundu, - 624 206
**Cell : 94435 58041**



# வண்ணம் தெளித்தல்

## Spray Paint

Louis Rushmore

I **தீ**மோத்தேயு 2:10 ன் தகுதியான என்பதற்கான அடிப்படை அர்த்தம், "**ஒழுங்கான** அல்லது **பொருத்தமான**" என்பதாகும். ஆம், அப்படி என்றால் தகுதியான என்பது அரைகுறையாக ஆடை அணிவதையும் குறிக்காது, அதே நேரத்தில் அளவுக்கு அதிகமாக ஆடை அணிவதையும் குறிக்காது. மாறாக, பொருத்தமான அல்லது ஒழுங்கான ஆடை தரிப்பதைத்தான் குறிக்கும். ''தகுதியான'' என்பதற்கு ஒருவருடைய தோரணை, வார்த்தை, செயல்கள் என விரிவான விளக்கமும் உண்டு. வஸ்திரம் சம்மந்தமாக தகுதியான என்று வரும்போது ஒரு காரியத்தை நினைவில் கொள்ள வேண்டும். ஆரம்பத்தில் ஆடை என்பது இரண்டு நோக்கங்களுக்காக உண்டாக்கப் பட்டது. சரீரத்தை மறைக்க மற்றும் கால நிலையிலிருந்து பாதுகாத்துக் கொள்ள [ஆதியாகமம் 3:7, 21]. தேவன் ஆதாமுக்கும், ஏவளுக்கும் அவர்கள் அத்தி இலை உடைக்குப் பதிலாக மிருகத்தோலினால் உண்டாக்கப்பட்ட ஆடைகளை கொடுத்தார். இத்தகைய ஆடைகள் அவைகள் எப்படிப்பட்ட பொருள்களிலிருந்து உண்டாக்கப்பட்டிருந்தாலும் அவைகள் பொதுவாக தோளிலிருந்து கணுக்கால்வரை நீண்டிருக்கும். தேவன் ஒரு ஆணுக்கும், பெண்ணுக்கும் தகுதியான வஸ்திரம் எது என்பதை ஏதேன் தோட்டத்திலேயே வரையறுத்து விட்டார்.



ஆனால், இன்றைய நாட்களில் பெரும்பாலும் ஆடைகள் சரீரத்தை மறைப்பதற்காகவோ அல்லது காலநிலைகளிடமிருந்து பாதுகாப்பதாகவோ தெரியவில்லை. ஆடைகளினால் மனித சரீரம் மறைக்கப்படவில்லை என்றால் சரீரம் அதிகமாக வெளிகாட்டப்படுகிறது அல்லது ஆடைகள் ஒருவருடைய சரீரத்தில் சாயம் பூசப்பட்டது போல் காட்சியளிக்கிறது. ஆடைகள் என்ன நோக்கத்திற்காக உண்டாக்கப்பட்டதோ அதற்கு நேர் எதிராக விளைவுகள் ஏற்படுகின்றன. இதுதான் தகுதியில்லாத வஸ்திரம் என்று விவரிக்கப்படுகிறது.

I கொரிந்தியர் 12:23 சரீர அவயவங்களில் கனவீனமாய்க் காணப்படுகிறவைகளுக்கே அதிக கனத்தைக் கொடுக்கிறோம். நம்மால் இலட்சணமில்லாதவைகளே அதிக அலங்காரம் பெறும் என்று சொல்கிறது.

சில தலைமுறைகளாக ஜனங்களால், அதுவும் குறிப்பாக கிறிஸ்தவர்களால் அணியப்படும் ஆடைகள் தேவ வாக்கியங்களில் விவரிக்கப்பட்டிருக்கும் தகுதியான வஸ்திரங்களுக்கு நேர் எதிராக உள்ளது. வேறுவிதமாகச் சொன்னால், இன்றைய நாட்களில் அணியப்படும் ஆடைகள் சரீரத்தை வெளிச்சம் போட்டுக் காட்டுவதாகவே உள்ளது.

இறுக்கமான ஆடைகள், வெளிப்படையாகத் தெரியும் சட்டைகள், குறுகிய ஸ்கர்ட்கள், அரைகுறை பேண்ட்டுகள், நீச்சல் உடைகள், கிழித்து விடப்பட்ட ஜீன்ஸ்சுகள் போன்றவைகள் வேதாகம அடிப்படையில் தகுதியான வஸ்திரங்கள் அல்ல. இத்தகைய ஆடைகளை பொதுவாகவே யாரும் அணியக்கூடாது. அதிலும் குறிப்பாக, கிறிஸ்தவர்கள் அணியவே கூடாது.

மேலும், இன்றைய நாட்களில் நாம் காணும் காரியம் என்னவென்றால் ஜனங்களால் தெரிந்தெடுக்கப்படும் ஆடைகள், துரதிஷ்டவசமாக கிறிஸ்தவர்களால் தெரிந்தெடுக்கப்படும் ஆடைகள் வேதாகம அடிப்படையில் தகுதியான வஸ்திரங்களல்ல. தகுதியற்ற வஸ்திரங்களின் வரிசையில் பெண்கள் அணியும் லெகிங்ஸ் போன்ற ஆடைகள் சரீரத்தை மிகவும் மோசமான முறையில் வெளிக்காட்டுகின்றன. ஸ்ப்ரே பெயிண்ட் ஒரு இடத்தில் அடித்தால் எப்படி ஓர் அங்குலம் கூட தப்பாமல் அடிக்கப்படுமோ அது போல் ஒட்டுமொத்த சரீரமும் ஓர் இடமும் விடாமல் வெளிக்காட்டப்படுகிறது. கற்பனை செய்து பார்ப்பதற்கே கசப்பாக இருக்கிறது. எப்படி

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் வேதாகம போதனைக்கு புறம்பாக இருக்க விரும்புகிறார்கள். கணவன்மார்களே, உங்கள் மனைவிகள் தகுதியற்ற முறையில் வஸ்திரங்களைத் தரித்து வெளியில் போக ஏன் நீங்கள் அனுமதிக்கிறீர்கள்? தகுதியான வஸ்திரம் என்பதற்கு யாருடைய விளக்கத்தை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்கள்? ஒரு கணவனாக அல்லது தகப்பனாக ஆதாமும், ஏவாளும் உடுத்தியதுபோல் அத்தி இலைகளால் தைக்கப்பட்ட ஆடைகளை உங்கள் குடும்பத்தினர் உடுத்திக்கொள்ள அனுமதிப்பீர்களா அல்லது தகுதியான வஸ்திரம் என்பதற்கு தேவன் கொடுக்கும் விளக்கத்தை ஏற்றுக்கொள்வீர்களா? உங்கள் குடும்ப ஆடை வடிவமைப்பாளர் யார் ? தேவனா அல்லது சாத்தானா? இன்றைய அசிங்கமான ஆடைக்கும்,வேசியின் உடைக்கும் வேசியின் உள்ள வித்தியாசம் என்ன? [நீதிமொழிகள் 7:10].

✝

---

**சபை ஏன் மகிமையான ஒன்றாக இருக்கிறது?**

1. சபை மகிமையான ஸ்தாபகரைப் பெற்றிருக்கிறது.
[மத்தேயு 16:18]

2. சபை கிறிஸ்துவின் இரத்தத்தினாலே வாங்கப்பட்டது.
[அப்போஸ்தலர் 20: 28]

3. சபை மகிமையான பெயரை உடையதாக இருக்கிறது.
[ரோமர் 16:16]

4. சபை மகிமையான பணியை கொண்டிருக்கிறது.
[ மாற்கு 16:15,16]



# தேவ வசனமாகவே ஏற்றுக்கொண்டார்கள்!

# Received The Word Of God as The Word Of God!

E.Z.S. Rajanayagam

தேவ வசனத்தைத் தேவ வசனமாகவே ஏற்றுக் கொள்ளுகிற காரியத்தில், முதல் நூற்றாண்டில் வாழ்ந்த தெசலோனிக்கே பட்டணத்து சபையார் இதற்கு ஓர் எடுத்துக்காட்டாக உள்ளனர். அவர்கள் பற்றி ஆவியானவர் பவுலைக் கொண்டு கூறுவதைக் கவனியுங்கள். ஆகையால், நீங்கள் தேவ வசனத்தை எங்களாலே கேள்விப்பட்டு ஏற்றுக்கொண்டபோது, அதை மனிதர் வசனமாக ஏற்றுக் கொள்ளாமல், தேவ வசனமாகவே ஏற்றுக் கொண்டதினாலே நாங்கள் இடைவிடாமல் தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறோம். அது மெய்யாகவே தேவவசனந்தான், விசுவாசிக்கிற உங்களுக்குள்ளே அது பெலனும் செய்கிறது''. (1 தெச 2:13) பவுலும், பவுலடியாருடைய கூட்டாளிகளும் அவர்கள் மத்தியில் நற்செய்தியைப் பிரசங்கித்த போது, அதை எந்த வகையாகப் பார்த்து ஏற்றுக்கொள்வது என்ற கேள்வி வந்தது. அவர்கள் வாயின் வார்த்தைகளை மனிதர் வார்த்தைகளாகப் பார்த்து நிராகரிப்பதா அல்லது தேவ வார்த்தைகளாகப் பார்த்து ஏற்றுக் கொள்வதா என்று. தெசலோனிக்கேயர் நீதியான முடிவை எடுத்து, விசுவாச வாழ்க்கையில் மிகுந்த பலனைத் தந்தனர்.

அப்போஸ்தலன் பவுல் மேற்கொண்ட மூன்று நற்செய்திப் பயணங்களில், இரண்டாவது பயணத்தின் போது ஆரம்பிக்கப் பட்டது தான் இந்த தெசலோனிக்கே பட்டணத்து சபை. பவுலடியார். ஒரு மூன்று வாரங்கள் அவர்கள் மத்தியில் தங்கியிருந்து வேத வாக்கியங்களின் நியாயங்களை ஆழமாக எடுத்துப் போதித்து, இயேசுவே கிறிஸ்து என்று உறுதிபடுத்திக் காண்பித்தான் (அப். 17:1–3) இங்கே பவுலும், அவனோடிருந்தவர்களும் செய்த ஊழியத்திற்கான பலன் மிகுதியாய் இருந்தது. யூதர்களில் சிலரும், பக்தியுள்ள கிரேக்கரில் திரளானவர்களும், கனம் பொருந்திய அநேக ஸ்திரீகளும் நற்செய்திக்குக் கீழ்ப்படிந்து சரியானதைத் தெரிந்து கொண்டு, கிறிஸ்துவின் நற்செய்திக்குத் தங்களை ஒப்புக்கொடுத்தனர். ஆயினும், நீதியை எட்டியாக எண்ணின எத்தர்கள் கூட்டம், வீணர்களைத் தங்களோடு சேர்த்துக் கொண்டு, கூட்டங்கூடி பெருங் கலக

முண்டாக்கி, பவுலையும், சீலாவையும் வலுக்கட்டாயமாக வெளியேற்றினர் [அப் 171 4-10] கொஞ்ச காலமே தெசலோனிக்கேயரோடு தங்கியிருந்தாலும், அவர்களிடம் அடைந்த ஆவிக்குரிய அனுபவம் அலாதியானதாக இருந்தபடியால் அவர்களை எப்படியாவது மறுபடியும் சந்திக்க வேண்டுமென்று இரண்டு முறை முயற்சித்தார். ஆனால் இரண்டு முறையும் தடையுண்டாயிற்று [1 தெச. 2:17,18]. ஆயினும், புதிதாகப் பக்தி வாழ்க்கையைத் தொடங்கின அந்த இளம் சபையார்கள் தங்கள் ஆவிக்குரிய வாழ்வில் எப்படியிருக்கிறார்களோ என்று அறியும் படியான ஆவல் பவுலடியாருக்கு அடங்கினபாடில்லை.

இப்படிப்பட்ட நல்ல சபையாருக்கு எழுதின நிருபத்தின் ஊடே வருவது தான் நம்முடைய இம்மாத தலைப்பிற்கு ஆதாரமாக இருக்கும் 1 தெச 2:13ம் வசனம். இந்த வசனத்தின்படி தெசலோனிக்கேயர், தேவ வசனத்தை மனிதர் வார்த்தைகளாகப் பார்க்காமல், தேவனுடைய வார்த்தைகளாகவே ஏற்றுக் கொண்டபடியால், வல்லமையுள்ள தேவ வசனம் அவர்களுக்குள்ளே பலமான கிரியை நடப்பித்திருக்கிறது. ஆயினும், அது மட்டும் தான் காரணம் என்று சொல்ல முடியாதபடி வேறு சில உண்மைகளும் உள்ளதென்பதை இதற்கு முந்தின வசனங்களிலிருந்து [7-12] தெரிந்து கொள்ள முடியும். ஆவியானவர் இப்படி வெளிப்படுத்தியிருக்கும் இவ்வுண்மைகளை நாம் எளிதில் ஒதுக்கிவிட முடியாது. ஆகவே, தெசலோனிக்கே கிறிஸ்தவர்கள் பவுலடியாரின் வார்த்தைகளை வேத வசனமாகவே ஏற்றுக் கொண்டதற்கும், அவைகள் அவர்களுக்குள்ளே பெலன் செய்ததற்குமான உண்மைகள் எவைகளென்று தெரிந்து கொண்டு, நமக்குத் தேவையான பாடங்களைக் கற்றுக் கொள்ள இப்பொழுது முயற்சிப்போம்.

## ஒரு பாசள்ள தாயாகப் பவுலடியார் (1 தெச 2:7-8)

இங்கே பவுலடியாரின் வார்த்தைகளை கவனியுங்கள். உங்களிடத்தில் பட்சமாய் நடந்துகொண்டோம். பால் கொடுக்கிற தாயானவள் தன் பிள்ளைகளைக் காப்பாற்றுகிறது போல, நாங்கள் உங்கள் மேல் வாஞ்சையாயிருந்து, தேவனுடைய சுவிசேஷத்தை உங்களுக்குக் கொடுத்ததுமல்லாமல், நீங்கள் எங்களுக்குப் பிரியமானவர்களானபடியினாலே, எங்கள் ஜீவனையும் உங்களுக்குக் கொடுக்க மனதாயிருந்தோம்'' [1 தெச.2:7,8]. ஆவிக்குரிய ரீதியில் அவர்களைப் பெற்ற அக்கறையோடு, கரிசனையோடு கவனித்திருப்பார் என்று எண்ணிப் பாருங்கள். நிச்சயமாகவே அவர் ஆவிக்குரிய ரீதியில் ஓர் ஒப்புமை அற்ற தாயாகவே இருந்திருப்பார். அந்த ஆரம்ப நாட்களில், பவுல் ஒருதாயாக, அதுவும் பால் கொடுக்கிற

ஒரு தாயாக நடந்து கொண்டேன் என்கிறார். ஒரு தாய்க்கு இணை தாய்தான். தாய்க்கு இணையாக இப்பூமியில் யாரையாவது குறிப்பிட முடியுமா? முடியவே முடியாது. அப்படியானால், அவர்களை எப்படிப் பாசத்தோடு அக்கறையோடு, கரிசனையோடு கவனித்திருப்பார் என்று எண்ணிப் பாருங்கள். நிச்சயமாகவே, அவர் ஆவிக்குரிய ரீதியில் ஓர் ஒப்புமை அற்ற தாயாகவே இருந்திருப்பார்.

அப்படியானால் அன்பானவர்களே, நாம் வாழும் இக்கால கட்டத்தில், ஆவிக்குரிய ரீதியில் பெற்றெடுக்கப்படும் ஆத்துமாக்கள் இப்படிப்பட்ட கரிசனையையும், பராமரிப்பையும், பாதுகாப்பையும் பெறுகிறார்களா என்று எண்ணிப் பார்க்கவேண்டும். உலகெங்கிலும் அறுவடை செய்யப்படும் ஏராளமான ஆத்துமாக்கள், ஏற்றுக் கொண்ட சத்தியத்தில் நிலைத்திராமலும், விசுவாசத்தில் வளர்ந்து பலன் கொடுக்காமலும் போவதற்கான காரணம் இதுவாக இருக்கலாமோ? கர்த்தருடைய கனமான ஊழியத்தைச் செய்பவர்கள் இந்த உண்மையை வெகுவாகப் புரிந்து செயல்படுவது அவசியம்.

**ஓர் உண்மை ஊழியனாகப் பவுலடியார் (1தெச, 2:9-10)**

அவர்களை ஆவிக்குரிய ரீதியில் பெற்றெடுத்த பவுலடியார், ஒரு பால் கொடுக்கிற தாயைப் போல் அவர்களை அணைத்துப் பாதுகாத்து வளர்த்ததோடு நில்லாமல், அவர்கள் கண்களுக்கு முன்பாக எல்லா வகையிலும் தன்னை ஒரு தேவ ஊழியனாக வெளிப்படுத்திக் காட்டினார். அவர் கூறுவதைப் பாருங்கள். '' சகோதரரே, நாங்கள் பட்ட பிரயாசமும் வருத்தமும் உங்களுக்கு ஞாபகமாயிருக்கும், உங்களில் ஒருவனுக்கும் பாரமாயிராதபடிக்கு, இரவும் பகலும் நாங்கள் வேலை செய்து, தேவனுடைய சுவிசேஷத்தை உங்களிடத்தில் பிரசங்கித்தோம் (1 தெச, 2:9) என்று, அப்போஸ்தலனாகிய பவுலடியார் தெசலோனிக்கேயருக்கு மத்தியில் ஊழியம் செய்தபோது, தான் அவர்களோடிருப்பது எந்த வகையிலும் அவர்களுடைய விசுவாச வாழ்க்கைக்குப் பாதிப்பாகி விடக்கூடாது என்பதில் மிகவும் கவனமாக இருந்துள்ளார். இந்நோக்கத்திற்காக தேவனால் தனக்குக் கொடுக்கப்பட்ட உரிமையை யும், சிலாக்கியத்தையும் தூக்கி ஓரமாக வைத்துவிட்டார். எப்படி யெனில், அந்தப்படியே சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்களுக்குச் சுவிசேஷத்தினாலே பிழைப்பு உண்டாக வேண்டுமென்று கர்த்தரும் கட்டளையிட்டிருக்கிறார்'' (1 கொரி. 9:14) என்றும், ' திருவசனத்தில் உபதேசிக்கப்படுகிறவன்

உபதேசிக்கிறவனுக்குச் சகல நன்மைகளிலும் பகிர்ந்து கொடுக்கக்கடவன்'' (கலா6:6) என்றும் செல்லப்பட்டுள்ளபட்டுள்ள தேவ வார்த்தைகள் தனக்குக் கொடுத்த அனுமதியை அவர் தனக்காக ஒரு நாழிகையாகிலும் பயன்படுத்தவில்லை. தங்கள் நிமித்தம் அவர்களுக்கு ஏதாவது ஓர் இடறல் ஏற்பட்டு, அதினிமித்தம் அவர்களுடைய ஆத்துமா கெட்டுப்போய் விடக்கூடாது என்பதில் கண்ணும் கருத்துமாக இருந்துள்ளார். அதற்காக ஊழிய நேரம் போக கண்ணும் கருத்துமாக இரவும், பகலும் உழைத்துள்ளார்.

## ஒரு நல்ல தகப்பனாகப் பவுலடியார் (1 தெச. 2:11,12)

தெசலோனிக்கே கிறிஸ்தவர்களுக்கு நடுவே ஒரு பாசத் தாயாக, ஓர் உண்மையுள்ள ஊழியனாகப் பணியாற்றிய பவுலடியார், அவர்களுடைய ஆவிக்குரிய தேவையினிமித்தம் இங்கே தன்னை ஒரு நல்ல தகப்பனாக மாற்றிக் கொள்ளுகிறார். இது சம்பந்தமாக, ஆவியானவரின் வெளிப்பாட்டைப் பாருங்கள், மேலும், தம்முடைய ராஜ்ஜியத்திற்கும், மகிமைக்கும் உங்களை அழைத்த தேவனுக்கு நீங்கள் பாத்திரராய் நடக்கவேண்டுமென்று, தகப்பன் தன் பிள்ளைகளுக்குச் சொல்லுகிறதுபோல, நாங்கள் உங்களில் ஒவ்வொருவனுக்கும் புத்தியும், தேறுதலும், எச்சரிப்பும் சொன்னதை அறிந்திருக்கிறீர்கள் (1 தெச. 2:11,12). திருமண உறவின் வாடை கூடப்படாத பவுலடியார், இப்படித் தன்னை ஒரு தாய் என்றும், ஒரு தகப்பன் என்றும் பேசுவது உண்மையாகவே பிரமிப்பை ஏற்படுத்துகிறது. பவுலடியார் கொரிந்தி யருக்கு எழுதின நிருபத்தில், ''...எப்படியாகிலும் சிலரை இரட்சிக்கும்படிக்கு நான் எல்லாருக்கும் எல்லாமானேன்'' (1கொரி, 9:33) என்பதின் பொருளில் இதுவும் அடக்கமோ? இந்த தேவமனிதர், பிறருடைய ஆத்தும மேம்பாட்டுக் காகப் படுகிற பாட்டைப் பார்க்கும் போது வியப்பாய் உள்ளது.

பவுலடியார் தன்னை ஒரு தகப்பன் இடத்தில் வைத்துக் காரிய மாற்றியதற்கு ஆதாரமாக மூன்று தேர்ந்த வார்த்தைகளைப் பயன் படுத்தியுள்ளார். 1. புத்தி 2. தேறுதல், 3. எச்சரிப்பு, இந்த மூன்று வார்த்தைகளின்படி ஒவ்வொருவனுக்கும் ஊழியம் செய்துள்ளார். தெசலோனிக்கே சபையில் எத்தனை அங்கத்தினர்கள் இருந்தார்களோ தெரியாது. ஆனால், ஒவ்வொருவரையும் தனித்தனியாகக் கவனித்து வளர்த்துள்ளார். இரண்டு பிள்ளைகள், மூன்று பிள்ளைகள் என்று வைத்திருக்கக் கூடிய சரீரப்பிரகாரமான தகப்பன்மார்களால் கூட இப்படித் தனித்தனியாக கவனிக்க முடிவதில்லை. ஆனால், பவுலடியார், உங்களில் ஒவ்வொருவனுக்கும் என்று குறிப்பிடுகிறார். அவர் எப்படிப்பட்ட ஓர் ஆவிக்குரிய தகப்பனாக இருந்திருக்கிறார் பாருங்கள்!

நம்முடைய நாட்களில் தங்களை ஆவிக்குரிய தகப்பன் என்று பெருமையோடு சொல்லிக் கொள்ள விரும்புபவர்கள் இப்படி இருக்கிறார்களா? விசுவாசிகள் விசுவாசத்தில் வளர்ந்து பலன் கொடுக்காமலிருப்பதற்கான காரணம் இன்னுமா புரியவில்லை! இக்காரியத்தில் சிந்தை மாற்றம், செயல் மாற்றம் தேவை, அதுவும் உடனடியாகத் தேவை.

உண்மையும், நன்மையுமான இருதயமுள்ளவர்களிடத்தில் விடுக்கப்படும் எச்சரிப்புக்கு எப்பொழுதும் நல்ல பலன் கிடைக்கும், தெசலோனிக்கே பட்டணத்தார் எச்சரிப்பை சரியான விதத்தில் ஏற்றுக் கொண்டு விசுவாசத்தில் வளர்ந்து பலன் தந்திருக்கிறார்கள். அப்படி யானால், பவுலடியாரின் இந்த ஊழியப் பாணி நம்முடைய நாட்களில் பின்பற்றப்படுகிறதா? எச்சரிப்பு கொடுத்தால் ஓடி விடுவார்களே, அப்பொழுது கூட்டம் குறையுமே, காணிக்கை குறையுமே, ஒரு சிறப்புக் கூட்டம் போட்டால் வரமாட்டார்களே என்றெல்லாம் கணக்குப் போட்டு ஊழியம் செய்தால் ஊழியம் தேவனுக்குப் பிரியமானதாக இருக்காது. விசுவாசிகளுக்கு எந்தவொரு ஆவிக்குரிய நன்மையையும் ஏற்படுத்தாது.

ஆகையால், அருமையானவர்களே, தேவ வசனத்தை தேவ வசனமாகவே ஏற்றுக்கொண்டு, விசுவாசத்தில் வளர்ந்து பலன் கொடுப்பதற்கு, தெசலோனிக்கே சபையாரின் மனநிலையை விசுவாசி கள் ஒவ்வொருவரும் பெற்றுக்கொள்வோம். விசுவாசிகள் அப்படி எல்லாவகையிலும் வளர்ந்து மிகுந்த பலனைக் கொடுப்பதற்கு பவுலடியாரின் ஊழியப் பாணியை கர்த்தருடைய ஊழியர்கள் எல்லோரும் பின்பற்றுவோம்.

தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக! ஆமென். ✝

---

**பரிசுத்த வேதாகமத்தில் வழிகள்**

1. சத்திய வழி [ வெளி 15:3]
2. ஜீவனுக்குப் போகிற வழி [மத்தேயு 7:14]
3. பூர்வ வழி [எரேமியா 6:16]
4. நீதிமான்களின் வழி [சங்கீதம் 1:6]

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| வண்ணம் தெளித்தல் | Louis Rushmore | ... 1 |
| தேவ வசனமாகவே ஏற்றுக்... | E.Z.S. Rajanayagam | ... 4 |
| நான் பூமியிலிருந்து... | Jerry Bates | ... 11 |
| பின்நோக்கி பார்த்தல் | J.C. Choate | ... 15 |
| கல்லை எவன் நமக்காக... | E.Z. Selvanayagam | ...19 |
| வெறுப்பும், கசப்பும்... | P.C. Philemon Rajah | ... 23 |
| தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் | B. Arjunan | ... 27 |
| இயேசுவை பின்பற்றுபவர்... | Benny Martin | ... 31 |

**தேவன் – God**

| | | |
|---|---|---|
| கிறிஸ்து சரீரத்தின் இரட்சகராய்... | Sunny David | ...34 |
| இன்று நீங்கள் ஏதாவது... | Russ Vickers | ...37 |
| கடைசி ஏழு வார்த்தைகள் | Mark N. Posey | ...39 |
| இருவருக்கிடையில் நிற்கும்... | Michael L. King | ...41 |
| அதரிசனமானவரை தரிசித்தல் | Brian Kenyon | ...44 |
| நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து | Vance Tiutton | ...46 |

**சாட்சியங்கள் – Evidences**

| | | |
|---|---|---|
| நேரம் என்னும் கேள்வி | Rex Banks | ...48 |

**தேவனுடைய வார்த்தை – The Word of God**

| | | |
|---|---|---|
| சங்கீதம் 119 | Cecil May .JR | ...50 |
| நம் கோடாரிகளை கூர்மை... | Denny Petrillo | ...53 |
| ஒற்றுமைக்காக வேதாகமத்திற்கு... | Gary C. Hampton | ...55 |

**இரட்சிப்பு – Salvation**

| | | |
|---|---|---|
| ஞானஸ்நானத்திற்கு முன்பாக... | Alvin Jennings | ...57 |
| தர்சு பட்டணத்து சவுல் சவாரி... | Raymond Elliott | ...60 |
| ஆயத்தமாக இல்லாதவர்கள் | Bradley S. choate | ...62 |
| ஞானஸ்நானம் அதன் முறை | Ben Bailey & S. Fisher | ...64 |

| | | |
|---|---|---|
| சபை – | The Church | |
| கர்த்தருடைய சபை இன்னி... | R.C. Lupo | ...67 |
| மீட்டமைப்பின் வரலாறு | James Vinzant | ...69 |
| செயலில் கிறிஸ்தவம் – | Christianity In Action | |
| நீங்கள் யாருடையவர்கள்... | Curtis D. Burton | ...72 |
| அனுதின கிறிஸ்தவ ஜீவியம் – | Daily Christian Living | |
| காலி இருக்கைகள் | Charles R. Rose | ...75 |
| துக்கத்தை சுகமாக்குதல் | Sheila Gibson | ...78 |
| கிறிஸ்தவ இல்லம் – | The Christian Home | |
| மகிழ்ச்சியற்ற திருமணங்கள்... | Clarence Lavender | ...83 |
| சிறு பிள்ளைகள் என்னிடத்தில்... | Dean Kelly | ...85 |
| ஒரு நபரா அல்லது வெறுமனே... | Victor M. Eskew | ...88 |
| வசனரீதியான பாடங்கள் – | Textual Studies | |
| ஏழாம் நாளின் தெய்வீக... | Ronald D. Reeves | ...90 |
| ஒலிபெயர்ப்பா அல்லது... | David R. Kenney | ...93 |
| வேதாகம கதாப்பாத்திரங்கள் – | Bible Characters | |
| ஸ்தேவானுக்கு தேவன்... | Royce Frederick | ...97 |
| பர்னபாவைப் போலிருங்கள் | Patrick Morrison | ...99 |
| வேதாகம கேள்விகள் – | Bible Questions | |
| புதிய வானங்களும், புதிய... | Louis Rushmore | ...102 |
| கிறிஸ்துவின் சபையின்... | R.C. Lupo | ...105 |
| காலங்களின் இரகசியம் | B.B. Choate | ...107 |



# நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டபோது


# IF I BE LIFTED UP

JERRY BATES

யோவான் 12:32–33 வசனங்களில் தம்முடைய சீஷர்களிடம் சில ஆச்சரியமான அதே நேரத்தில் மனதை வாட்டும் வார்த்தைகளைப் பேசியிருக்கிறார். நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும்போது எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக்கொள்ளுவேன் என்றார். தாம் இன்னவிதமான மரணமாய் மரிக்கப்போகிறாரென்பதைக் குறிக்கும்படி இப்படிச் சொன்னார். இவ்வாக்கியத்தில் உயர்த்தப்படுவது என்று தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை மேன்மையான இடத்திற்கு கொண்டு செல்லுதல் என்னும் பொருள்படும்படியாக த் தான் புதிய ஏற்பாட்டில் பல இடங்களில் பயன் படுத்தப்பட்டிருக்கிறது. ஆனால், உயர்த்தப்படுவது என்னும் வாக்கியத்தை சிலுவையில் அறையப்படுதலை குறிக்கும் விதத்தில் பயன்படுத்திய ஒரே புதிய ஏற்பாட்டு எழுத்தாளர் யோவான் தான். இருந்தபோதிலும் இவ்வாக்கியத்தில் கிறிஸ்து தம்முடைய உயிர்த்தெழுதலிலும் பரமேறுதலிலும் வருங்காலத்தில் உயர்த்தப்படுவதை குறிக்கும் விதத்தில்தான் இப்பதம் பயன் படுத்தப்பட்டிருக்கிறது என்று நான் நினைக்கிறேன். இயேசுவின் வார்த்தைகளைக் கேட்டவர்களால் இப்போதனையை புரிந்து கொள்ள முடியவில்லை. வசனங்கள் மேசியாவும், அவருடைய ராஜ்யமும் என்றென்றும் நிலைத்திருக்கும் என்பதை அவர்கள் அறிந்திருந்தார்கள். கிறிஸ்துவின் ராஜ்யம் பூமிக்குரிய ராஜ்யம் என்று அவர்கள் புரிந்து கொண்டபடியால் மேசியா மரிக்கவே மாட்டார் என்று நினைத்தார்கள். இருந்தபோதிலும், இயேசு தம்முடைய மரணத்தைப் பற்றிதான் பேசுகிறார் என்பதை மிகச்சரியாக புரிந்து கொண்டார்கள்.

இந்த வசனங்களில் மூன்று ஆச்சரியமான கருத்துக்களை நம்மாலே காணமுடியும். இக்கருத்துக்கள் எல்லாம் பொதுவாக உலகத்தாலே தவறாகப் புரிந்து கொள்ளப்படுகிறது. முதலிடத்தில் சிலுவை என்பது இவ்வுலகத்தின் நியாயத்தீர்ப்பு என்று காண்கிறோம். (12:31) பெரும்பலான மக்களின் மனதில் சிலுவை என்பது இரட்சிப்பைக் கொண்டு வருகிறது. ஆனால், இயேசு கிறிஸ்து

சிலுவை நியாயத்தீர்ப்பைக் கொண்டுவரும் என்று சொன்னார். இயேசு கிறிஸ்து சிலுவையில் நமக்காக மரித்தபடியால், தேவன் யாரையும் நரகத்திற்கு அனுப்பமாட்டார் என்று நம்புகிறார்கள். இவ்வுலகம் இயேசுவை சிலுவையில் நியாயந்தீர்க்கிறது என்று நினைத்தது. ஆனால், உண்மையில் சிலுவை அவர்களுக்கு நியாயத்தீர்ப்பைப்பைக் கொண்டுவந்தது. இந்த எண்ணங்களை எல்லாம் கருத்தில் கொண்டால், சிலுவை நியாயத்தீர்ப்பை கொண்டுவரும் என்று எப்படிச் சொல்ல முடியும்?



ஒளி இருள்மீதான நியாயத்தீர்ப்பாயிருக்கிறது : ஒளியானது உலகத்திலே வந்திருந்தும் மனுஷருடைய கிரியைகள் பொல்லாதவைகளாயிருக்கிறபடியால் அவர்கள் ஒளியைப் பார்க்கிலும் இருளை விரும்புகிறதே அந்த ஆக்கினைத் தீர்ப்புக்குக் காரணமாயிருக்கிறது. பொல்லாங்கு செய்கிற எவனும் ஒளியைப் பகைக்கிறான். தன் கிரியைகள் கண்டிக்கப்படாதபடிக்கு, ஒளியினிடத்தில் வராதிருக்கிறான். சத்தியத்தின்படி செய்கிறவனோ, தன் கிரியைகள் தேவனுக்குள்ளாய்ச் செய்யப்படுகிறதென்று வெளியாகும்படிக்கு, ஒளியினிடத்தில் வருகிறான் என்றார் (யோவான் 3:19-21).

இவ்வுலகம் இயேசுவை நிராகரித்தது. அதன் உண்மையான சுபாவத்தையும், தேவனுக்காக யார் நின்றார் என்பதையும் காட்டியது. மேலும், இவ்வுலகம் இயேசுவை நிராகரித்தது அது நித்திய ஜீவனை பெற்றுக்கொள்ள தகுதியற்றது என்பதையும் காட்டியது. மேலும், இவ்வதிகாரத்தின் பிற்பகுதியில் இயேசு கிறிஸ்து இவ்வுலகத்தை நியாயந்தீர்க்கிறதொன்றிருக்கிறது அவர் சொன்ன வசனமே கடைசி நாளில் நியாயந்தீர்க்கும் என்று சொன்னார் (யோவான் 12:48). உலகம் இயேசுவை நிராகரித்தபோது அது இரட்சிப்பை பெற்றுக் கொள்வதற்கான ஒரே வழியை நிராகரித்தது. எனவே, இயேசுவின் வார்த்தைகளை ஏற்றுக்கொள்பவர்களுக்கு சிலுவை இரட்சிப்பையும், இயேசுவை நிராகரிப்பவர்களுக்கு தண்டனையையும் கொண்டு வருகிறது.

இரண்டாவதாக, இயேசு கிறிஸ்து சிலுவை என்றால் இவ்வுலகத்தின் அதிபதியின் தோல்வி என்று பொருள்படும் என்றார் (12:31). இவ்வுலகத்தின் அதிபதி சாத்தான். இயேசுவின் சத்துருக்கள்

அவருடைய மரணத்திற்காக வெகுநாட்கள் சதி செய்தார்கள். மேலும், இயேசுவின் மரணம் அவர்களுடைய பெரிய வெற்றியாக பார்க்கப்பட்டது. அவர்கள் இயேசுவின் மரணத்தினால் வரும் இரத்தப்பழி தங்கள் மேல் இருக்கும் என்னும் எண்ணத்தையே பரிகாசம் செய்தார்கள்.

அவர்கள் அவனைச் சிலுவையில் அறைய வேண்டும் என்று அதிகமதிகமாய்க் கூக்குரலிட்டுச் சொன்னார்கள்.

மேலும், அவர்கள் “இவனுடைய இரத்தப்பழி எங்கள் மேலும் எங்கள் பிள்ளைகள் மேலும் இருப்பதாக” என்றார்கள். சாத்தானும் அவனைப் பின்பற்றுபவர்களும் இயேசுவை அழிக்க விரும்பினார்கள். ஆனால், அவர் ராஜாவாக, நியாயாதிபதியாக உயர்த்தப்பட்டத்தின் முதல்படி சிலுவையாக இருந்தது.

இயேசுவின் மரணம் சாத்தானுக்கும், அவனைப் பின் பற்றுபவர்களுக்கும் ஆரம்பத்தில் வெற்றியாகத்தான் தோன்றியது. ஆனால், உண்மையில் அது படுதோல்வியாகத்தான் அவர்களுக்கு இருந்தது. இயேசு சாத்தானின் அதிகாரத்தை அழித்தார். கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் கல்லறையின் வல்லமையையும், மரணத்தின் கூரையும் அழித்துப்போட்டது [I கொரி 15:54–57]. இயேசுவின் மரணம் நாம் சாத்தானை மேற்கொள்ள வழிவகுத்தது. “இவர்கள் தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள்” [வெளி 7:14] “ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலே தங்கள் சாட்சியுன் வசனத்தினாலும் அவனை ஜெயித்தார்கள்” [வெளி 12:11].

கடைசியாக, சிலுவை இயேசு எல்லாரையும் தம்மிடத்தில் இழுத்துக்கொள்ள வழி வகுத்தது [யோவான் 12:32]. இங்கே இயேசு சிலுவை மூலமாகத்தான் தேவன் எல்லா மனுஷரையும் இழுத்துக்கொள்வார் என்பதை கவனியுங்கள். பாடுபடும் தாசன் எல்லாரையும் தம்மிடத்தில் இழுத்துக்கொள்வார் என்று நாம் பார்க்கிறோம். இது உலகத்துக்கு சற்று விசித்திரமாகத் தோன்றலாம். உலகத்தின் தலைவர்கள் ஒருபோதும் பாடுகளை தங்களிடத்தில் ஜனங்களை இழுக்க பயன்படுத்தமாட்டார்கள். பொதுவாக, ஒருவர் ஜனங்களை தங்களிடத்தில் இழுக்க பொருளாதார உதவிகளை செய்ய வேண்டுமென்று நினைப்பார்கள். உண்மையாகவே, நம் ஆண்டவராகிய இயேசு இப்பூமியில் வாழ்ந்தபோது பலர் பொருளாதார நன்மைகளுக்காக அவரைப் பின்பற்றினார்கள். சிலர் அற்புத அடையாளங்களை காண்பதற்காகவே அவரைப் பின்பற்றினார்கள். பெரும்பாலான யூதர்கள் இயேசு ஓர் உலகப்பிரகாரமான ராஜாவாக

வருவார், அந்த ராஜ்ஜியத்தில் குடிமக்களாக இருப்பதன் மூலமாக பல நன்மைகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்று எதிர்பார்த்தார்கள். அவைகளையெல்லாம் இயேசு தரமாட்டார் என்று அவர்கள் உணர்ந்தபோது பின்வாங்கிப் போனார்கள்.

இயேசு கிறிஸ்து சிலுவை மூலமாக ஜனங்களை தம்மிடத்தில் இழுத்துக் கொள்வதாகச் சொன்னார். அதன்மூலம் இவ்வுலகத்திற்கு அந்த மாபெரும் அன்பை நிரூபித்தார். இத்தகைய அன்பை நம்மால் புரிந்து கொள்ளவே முடியாது. அன்றியும் நாம் பெலனற்றவர்களா யிருக்கும்போதே, குறித்த காலத்தில் கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார். நீதிமானுக்காக ஒருவன் மரிக்கிறது அரிது : நல்லவனுக்காக ஒருவேளை ஒருவன் மரிக்கத் துணிவான் (ரோமர் 5:6,7). எந்த ஒரு மனிதனும் தன் சத்துருக்களுக்காக மரிக்க மாட்டான். ஆனால், இயேசுவோ தம்முடைய சத்துருக்களுக்காகத்தான் மரித்தார். அதாவது, நாம் பாவத்தில் இழந்து போயிருந்த நிலையில் நாம் தேவனுக்கு சத்துருக்களாக இருந்தபோது அவர் நமக்காக மரித்தார். நாம் தேவனுடைய அன்பின் ஆழத்தை உணர்ந்து கொள்ளும்போது, அது அவருக்காக தம் ஜீவியங்களை அர்ப்பணிக்க நம்மை ஊக்கப்படுத்துகிறவராக இருக்க வேண்டும். இவ்வளவு அன்பான ராஜாவினிடத்தில் நாம் ஏன் திரும்புவதில்லை?

மேலும், இயேசு எல்லாரையும் தம்மிடத்தில் இழுத்துக் கொள்வதாக சொன்னார். இது முன் குறித்தல் அல்ல. ஆனால், இங்கே எல்லோரும் என்பது யூதர், புறஜாதி என்னும் வேறுபாடு இல்லாமல் எல்லா மக்களையும் உள்ளடக்கியதாகும். அதாவது, எல்லோரும் இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதைக் குறிக்கிறது. தேவனிடத்தில் வருவதற்கு எந்த இனப்பாகுபாடும் கிடையாது. இயேசுவின் மரணம் மனிதனை மனிதனிடத்திலிருந்து பிரிக்கும் எல்லாத் தடைகளையும் தகர்த்தெறிந்தது. நாம் தேவனோடும், ஒருவரோடு ஒருவரும் உண்மையான ஐக்கியத்தை வைத்துக் கொள்ள முடியும். (I யோவான் 1:7). இயேசு கிறிஸ்துவின் மரணத்தை ஒன்றுமில்லாமல் செய்துவிட வேண்டாம். நாம் இயேசுவின் வார்த்தைகளை நிராகரித்தால், இயேசுவின் மரணத்தை வியர்த்தமாக்கி, நம் ஆத்துமாக்களை அழித்துக் கொண்டு தேவனிடத்தில் இருந்து நித்திய நித்தியமாகி பிரிந்து விடுகிறோம். ✝



# பின்னோக்கிப் பார்த்தல்

# Looking Back

J.C. CHOATE

**நா**ம் இரட்சிக்கும்படியாகவும், நித்திய ஜீவனின் நம்பிக்கையை பெற்றுக் கொள்ளும்படியாகவும் இயேசு கிறிஸ்து இவ்வுலகத்தில் வாழ்ந்து சிலுவையில் மரித்து இரண்டாயிரம் ஆண்டுகள் ஆகி விட்டது. கிறிஸ்து தம்முடைய சபையைக் கட்டுவதாக வாக்குத்தத்தம் பண்ணினார். அப்போஸ்தலர் மூலமாக சுமார் கி.பி. 33 ல் எருசலேம் பட்டணத்தில் சபை ஆரம்பமானது. அந்த சபைக்கு ஒரு பிரதான கட்டளை கொடுக்கப்பட்டது. அக்கட்டளை இவ்வுலகில் உள்ள ஒவ்வொருவருக்கும் சுவிசேஷத்தைக் கொண்டு செல்லும்படியான கட்டளையாக இருந்தது (மத்தேயு 28:19,20; மாற்கு 16:15-16). அங்கே திட்டம் முதலில் இரட்சிப்பின் செய்தியை முதலில் எருசலேம் பட்டணத்திலும், பின்பு யூதாவிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும் கொண்டு செல்வதாக இருந்தது. கர்த்தருடைய வாக்குத்தத்தம் அவர்களோடு இருந்தபடியாலும் (மத்தேயு 28:20) பரிசுத்த ஆவியானவருடைய வழி நடத்துதலினாலும் அப்போஸ்தலர்களும், மனமாற்றமடைந்தவர்களும் அத்திட்டத்தை பின்பற்றினார்கள். அந்தச் சந்ததியிலேயே அவர்கள் சுவிசேஷத்தை வானத்தின் கீழிருக்கிற சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கித்தார்கள் (கொலே 1:23). மறுபடியும் நாம் அப்போஸ்தலனாகிய பவுலின் வார்த்தைகளை இவ்விதாமக கேட்கிறோம். இப்படியிருக்க அவர்கள் கேள்விபடவில்லையா என்று கேட்கிறேன்; கேள்விப்பட்டார்கள்: அவைகளின் சத்தம் பூமியெங்கும் அவைகளின் வசனங்கள் பூச்சக்கரத்துக் கடைசி வரைக்கும் செல்லுகிறதே (ரோமர் 10:18).

உலகம் அன்றிருந்தது போல இன்றில்லை. கிறிஸ்தவத்தில் பவுலும், சீலாவும் தாங்கள் செய்த பிரசங்கத்தினாலே உலகத்தை கலக்குகிறவர்கள் இங்கேயும் வந்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள் (அப்போஸ்தலர் 17:6) உண்மையாகவே, அவர்கள் உயிர்த்தெழுந்த கர்த்தரை, கிறிஸ்து என்று பிரசங்கித்தார்கள். கிறிஸ்து மீது விசுவாசம் வைத்தவர்களுடைய வாழ்க்கையில் மிகப்பெரிய மாற்றம் ஏற்பட்டது. அங்கே புதிய உலகம் ஆரம்பமானது. இன்னும் இவ்வுலகில் சுவிசேஷம் அறிவிக்கப்படாத இடங்கள் பல உண்டு, சுவிசேஷம் மனித இனத்தின் மீது மிகப்பெரிய மாற்றம் ஏற்பட்டது.

மனித இனத்தின் மீது மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தி இன்னும் உலகில் பலர் மாற்றத்தை உணர்கிறார்கள். ஒழுக்க நெறிகள், பெண்களின் நிலை, குடும்பம், மனித உறவுகள், அரசியல், நீதி முறைமை, கல்வி, கலை, இசை, அடிமைத்தனம், போர் மற்றும் பாவத்தின் மீதான மனப்பான்மையில் மிகப்பெரிய மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. உலகம் எவ்வளவு மோசமானதாக இருந்தாலும் கிறிஸ்துவினாலும், சுவிசேஷத்தினாலும் நன்றாக இருப்பதற்கான வாய்ப்புகள் உள்ளன.

மறுமுனையில், பொருளாதாரம், உற்பத்தி, தொழில் நுட்பம், தொலை தொடர்பு போன்றவற்றில் உலகம் மிகப்பெரிய சாதனைகளை நிகழ்த்தினாலும் கூட மனிதர்களாக நாம் தேவனில்லாமல் ஒன்றுமில்லை. எல்லாவற்றையும் நாமாகவே செய்ய முடியுமென்றால் தேவனுக்கு கீழ்ப்படிகிற காரியத்தில் மனித இனத்தால் என்ன செய்ய முடியுமென்று நினைத்துப் பாருங்கள். நம் சிருஷ்டிகள் இல்லையென்று மறுப்பது அவர் இருக்கிறார் எனினும் உண்மையை மாற்றப்போவதில்லை. இயேசுவையும், அவருடைய கிறிஸ்தவத்தையும் நிராகரிப்பது மனித இனத்தை உயர்வான இடத்துக்கு கொண்டு செல்லாது. மாறாக, மனித இனத்தை மிகவும் கீழான நிலைக்கு கொண்டு வந்து விடும்.

கிறிஸ்தவர்களின் ஒவ்வொரு தலைமுறையினரும் சுவிசேஷத்தை உலகமெங்கும் எடுத்துச் சென்றிருந்தால் சூழ்நிலை இன்று எவ்வளவு வித்தியாசமாக இருந்திருக்கும்! பல யுத்தங்கள் தடுக்கப்பட்டிருக்கும். இன்று பலரால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கும் பெரும்பாலான பாவங்ககள் காணாமல் போயிருந்திருகும். ஒட்டுமொத்த மனித இனமும் தேவ பக்தியாயிருந்திருக்கும். நாம் தேவ சித்தத்திற்கு கீழ்ப்படியத் தவறும்போது நாம் துன்பப்படுகிறோம். இன்று முழு உலகமும் பாவத்திற்கான மிகப்பெரிய விலையை கொடுத்துக் கொண்டு வருகிறது. நாம் விழித்துக்கொண்டு கீழ்ப்படிவதன் மூலமாக கர்த்தரிடத்தில் திரும்பவில்லை என்றால் இது வெறுமனே ஆரம்பம்தான். இவ்வுலகத்தை சுவிசேஷ மயமாக்குவதற்கு நம்மிடம் எல்லா வசதிகள் இருந்தும் நாம் போதுமான அளவு செய்யவில்லை. நாம் மாத்திரம் இரட்சிக்கப் பட்டிருக்கிறோம் என்பது வேதனையான ஒரு விஷயமாகும்.

இதன் விளைவாக, பல கிறிஸ்தவர்கள் ஆவிக்குரிய அறியாமையில் வேதாகமத்தின் சத்தியங்களை மறுத்து, பக்திரீதியாக தவறு செய்பவர்களோடு ஐக்கியம் வைத்துக்கொள்கிறார்கள். இதனால் சபை வளர்வதில்லை, கர்த்தர் நாம் செய்யும்படியாக கட்டளையிட்டதின்படி நாம் செய்திருந்தால் அநேக ஆசீர்வாதங்களை பெற்றுக்கொண்டிருப்போம். உலகின் பல நாடுகளுக்கு நாம் சுவிசேஷத்தை இன்னும் முழுமையாக எடுத்துச் செல்லவில்லை.

இன்று சபை உலகமுழுவதும் காணப்படுகிறது. உலக மக்கள் தொகையோடு ஒப்பிடும்போது நாம் மிகவும் குறைவான எண்ணிக்கையில் தான் உள்ளோம் என்பதை நாம் ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும். இருந்தபோதிலும், இந்த பிரதான கட்டளையை நிறைவேற்ற போதுமான கிறிஸ்தவர்கள் இருக்கிறார்கள்.

தொலைதூர தேசங்களில் சபைகள் ஆரம்ப நிலையில் இல்லை. மாறாக, சபைகள் இரண்டாம் மற்றும் மூன்றாம் தலைமுறைகளை உள்ளடக்கியதாக இருக்கிறது. அதன் பொருள் அங்கே ஆவிக்குரிய முதிர்ச்சி உண்டாகிறபடியால் உள்ளூர் சகோதரர்கள் அருகிலுள்ள பட்டணங்களிலும், கிராமங்களிலும் சுவிசேஷத்தைப் பரப்ப அது ஏதுவாயிருக்கும்.

பல தேசங்களில் வேதாகமப் பள்ளிகள், அச்சிடப்பட்ட புத்தகங்கள், கைப்பிரதிகள் ரேடியோ மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் இருக்கின்றன. இது அங்குள்ள கிறிஸ்தவர்கள் ஆத்துமாக்களைப் போய் சந்திக்க வாய்ப்பாயிருக்கும்.

ஆங்கில மொழியிலும், அவர்களுடைய தாய்மொழியிலும் புலமைப்பெற்ற கிறிஸ்தவர்கள் உலகமுழுவதும் இருக்கிறார்கள். இதன் காரணமாக புத்தகங்களும், கைப்பிரதிகளும், மிகத்துல்லியமாக செய்யப்படுகின்றன.

இன்று உலகில் பல வகையான போக்குவரத்து சாதனங்கள் உள்ளன. இதன் காரணமாக கிறிஸ்தவர்கள் தாங்கள் போக விரும்பும் இடத்திற்கு வேகமாகச் செல்ல முடிகிறது. இன்று சில மணி நேரங்களிலேயே உலகைச் சுற்றும் ஜெட்விமானங்களைப் பெற்றிருக்கும் காரணத்தால் நாம் உண்மையாகவே ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்தான். உள்நாட்டில் நமக்கு கார்கள், பேருந்துகள் மற்றும் ரயில்கள் உள்ளன அவைகளில் பெரும்பாலானவைகள் எல்லா இடங்களிலும் கிடைக்கின்றன.

இன்றைய நாட்களில் மிகப்பெரிய தகவல் தொடர்பு புரட்சியை அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். ரேடியோ, தொலைக்காட்சி, செயற்கைகோள்கள், தொலைபேசிகள், அச்சகம், தபால் நிலையங்கள், பேஸ்புக், இணையதளம், Youtube போன்றவைகள் உலகில் செய்திகளை வேகமாகப் பரப்ப உதவுகின்றன. கர்த்தருடைய ஜனங்களாகிய நாமும் இது போன்ற தகவல் தொடர்பு சாதனங்களை பயன்படுத்தி பலருக்கு துரிதமாக சுவிசேஷத்தைக் கொண்டு செல்ல வேண்டும். சுவிசேஷத்தை அறிவிக்க எண்ணற்ற எல்லையற்ற வாய்ப்புகள் உள்ளன. நாம் சுவிசேஷத்தை முன்னெடுத்துச் செல்ல என்னென்ன வாய்ப்புகள், வசதிகள் உள்ளதோ அவைகளை நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

மத உலகோடும், மனிதர்களுடைய உபதேசத்தோடும் நாம் கைக் கோர்த்து போகாமல் இருப்பது நமக்கு தடைகளை ஏற்படுத்தலாம் . ஆனால், மறுமுனையில் சபையின் ஒருமைத்தன்மையை, எல்லா விசுவாசிகளின் ஒற்றுமையையும், கர்த்தருடைய நாமத்தை தரித்துக்கொள்வதைப் பற்றியும் அன்புடன் பிரசங்கம் பண்ணியும் எல்லா காரியங்களிலும் வேதாகமத்தை விட்டு விலகாமல் இருப்பது அதற்னெ தனி முத்திரையைப் பதிக்கும். நிச்சயமாகவே, நாம் சுவிசேஷத்தை மேம்படுத்த முடியாது. எனென்றால், அது பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டு கொடுக்கப்பட்டது.

இவ்வுலகில் எழுநூறுகோடி மக்கள் வாழ்வதாக விவாதிக்கப்படுகிறது. இந்த எண்ணிக்கை இன்னும் பல வருடங்களில் இரட்டிப்பாகும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது. இருதத்தில் பலவீனமுள்ள சிலர் கர்த்தருடைய சபையாரால் இத்தனை பேருக்கும் எப்படி சுவிசேஷத்தை அறிவீப்பீர்கள் என்று கேட்கலாம். ஒரு நிமிடம் பொறுங்கள் தேவன் தம்முடைய பராமரிப்பின் ஒரு பகுதியாக சுவிசேஷத்தைப் பரப்புவதற்கு அவர் தந்த கருவிகளை நாம் ஏற்கனவே பார்த்திருக்கிறோம். இன்று உலகில் எத்தனைபேர் இருப்பார்கள் அவர்களுக்கு செய்தி போய்சேர என்ன அவசியப்படும் என்பதை தேவன் அறிவார். இப்பூமியில் உள்ள எல்லாருக்கும் போதிக்க தேவையான எல்லா கருவிகளையும் நமக்குத் தந்திருக்கிறார். எனவே, உலகின் மக்கள் தொகை இரண்டு மடங்கானாலும், மூன்று மடங்கானாலும் கவலையில்லை ஒவ்வொரு ஆத்துமாவையும் சுவிசேஷத்தைக் கொண்டு சந்திக்கும் கருவிகளை தொடர்ந்து தருவார்.

நாம் கர்த்தரையும், அவருடைய ஜனங்களையும், நம்மால் என்ன செய்யமுடியும் என்பதைப் பற்றியும் தரக்குறைவாக நினைக்கக்கூடாது. இதில் துக்ககரமான விஷயம் என்னவென்றால், தேவன் இவ்வுலகத்தை சுவிஷேச அடிமையாக்குவதற்கு அவசியமான கருவிகளை தேவனுடைய பிள்ளைகளுக்கு தந்திருக்கும்போது அதை மற்றவர்கள் பயன்படுத்த அனுமதித்தது தான். இன்னும் நாம் எதற்காக காத்துக் கொண்டிருக்கிறோம்? தேவனால் கொடுக்கப்பட்டிருக்கிற கருவிகளை பற்றிக்கொண்டு பிரதான கட்டளையை நிறைவேற்ற ஏன் பயன்படுத்தக்கூடாது?

இதைக் குறித்தும் கூட சிந்தியுங்கள். நாம் அதிக அதிகமாய் பிரசங்கிக்கும் போது அதிகமானோர் கீழ்ப்படிகிற காரணத்தால் கர்த்தருடைய வேலையை செய்வதற்கு பலர் தேவைப்படுவார்கள் அந்தச் செலவுகளை சமாளிக்க அதிக நிதியும் அவசியப்படும். அதை நாம் எப்படி செய்யப்போகிறோம்? ✝

# கல்லை எவன் நமக்காகப் புரட்டித் தள்ளுவான்?

# Who will Turn This The Stone For Us?

E.Z. Selvanayagam

**உ**லக வரலாற்றில் மாபெரும் போதகர் (Master teacher) என்று அறிஞர்களாலும், பண்டிதர்களாலும் ஒருங்கே பாராட்டப்படுகிற நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வேதபக்திக்கும், நல்லொழுக்கத்திற்கும் சீரான வாழ்க்கை நெறிக்கும் தேவைப்பட்ட ஏராளமான நல் உபதேசங் களையும், கட்டளைகளையும் கொடுத்திருக்கிறார். அவைகள் எல்லாவற்றையும் காற்றில் பறக்க விட்டு விட்டு **நீங்கள் உலகம் எங்கும் போய் சர்வ சிருஷ்டிகளுக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்** என்ற ஒரு கட்டளையை மாத்திரம் குரங்குப் பிடியாகப் பிடித்துக் கொண்டு வாய்ப் பந்தல் போட்டு, சொற்சிலம்பம் ஆடிக் கொண்டிருக்கிறோம்.

வயல் இல்லாமல் நெல் விளைவிக்கும் இவ்வீண் முயற்சியால் கிறிஸ்தவத்துக்கோ, கிறிஸ்தவர்களுக்கோ எவ்வித நற்பயனும் விளைவதில்லை. மாறாக, கிறிஸ்தவத்தையும், கிறிஸ்தவர்களையும் புற மதத்தர்கள் குறைவாக மதிப்பிடுவதற்கும் எள்ளி நகையாடுவதற்கும் இது வாய்ப்பு அளிக்கிறது என்று சொன்னால் அது தவறாகாது.

முதலாம் நூற்றாண்டில் கிறிஸ்தவத்தைப் பற்றியும் கிறிஸ்தவர் களைப் பற்றியும் மக்கள் மத்தியில் இருந்த மரியாதைக்கும், தற்காலத்தில் இருக்கிற நிலைக்கும் மலைக்கும், மடுவுக்கும் உள்ள வித்தியாசம் இருக்கிறது. தற்காலத்தில் மக்கள் கிறிஸ்துவுக்கு விரோதமாக மாறிவிட்டார்கள் என்றோ, சுவிசேஷத்தின் வலிமை குறைந்து விட்டது என்றோ சொல்லித் தப்பித்துக் கொள்ள முடியாது. பின் என்ன காரணம்? கிறிஸ்தவத்தைப் பின்பற்றுபவர்களிடையே காணப்படுகின்ற ஒழுங்கற்ற போக்கு, சுயநலம், மூட நம்பிக்கை, பிரிவினைப் போக்கு, மாய்மாலம் ஆகிய இழிகுணங்களே காரணம் என்பதைச் சிந்திக்க விரும்புகிற எவரும் எளிதில் புரிந்து கொள்ளலாம்.

இந்த அவல நிலைக்குப் பொறுப்பேற்க வேண்டிய முதல் குற்றவாளிகள் சபைகளைக் கண்காணிக்கிறவர்களும், அவைகளை நடத்துபவர்களுமே. ஏனெனில், சத்தியத்தை அவர்கள் அறிந்திருந்தும் தாங்களே அதைச் செய்யாமலும் மற்றவர்களுக்குப் போதியாமலும்,

கண் ஜாடையாக இருந்து வருகிறார்கள். சத்தியத்தைச் சொன்னால் சத்துருவாக வேண்டி வரும். பின்னர் நம்முடைய பலவீனங்களை, குறைகளைப் பெரிதுபடுத்திச் சபையிலே குழப்பம் விளைவிப்பார்கள் என்ற அச்சம் தேவனுடைய பூரண ஆலோசனைகளைச் சொல்ல விடாமல் செய்து விடுகிறதைப் பார்க்கிறோம். அவர்கள் தேவனால் வரும் மகிமையைப் பார்க்கிலும், மனுஷரால் வரும் மகிமையை அதிகமாக விரும்புகிறார்கள். [யோவா 12:43] **மனிதருக்குப் பிரியமாயிருக்க விரும்புகிறவர்களாய்ப் பார்வைக்கு ஊழியம் செய்கிறார்கள்** [எபேசி. 6:6] அப்படிப்பட்டவர்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்யாமல் தங்கள் வயிற்றுக்கே ஊழியம் செய்கிறார்கள்' [ரோமர் 15 : 18] என்றெல்லாம் பரிசுத்த ஆவியானவர் பலவிதமாக இடித்துரைத்தும் கூட நமது நிலைகளை மறுபரிசீலனை செய்யத் தொடர்ந்து மறுத்து வருகிறோம்.

அடுத்தபடியாக, தேவ ஊழியர்களில் பெரும்பாலோருடைய சொல்லுக்கும், செயலுக்கும் சம்பந்தமே இருப்பதில்லை. சொல் வினையும், செய் வினையும் வேறுபட்டால் கண்ணால் கண்டதைச் செய்வார்களே ஒழிய, காதால் கேட்டதை எண்ணார்கள் என்று வீரமாமுனிவர் எழுதுகிறார். நாம் பிரசங்கிக்கிறபடி வாழ்ந்து காட்டுகிறோமா? இல்லையே! பெரும்பான்மையான மக்களுக்கு வேத புத்தகத்தை வாசிக்கும் வாய்ப்புக் குறைவு. ஆனால், அதைக் குறித்துப் பிரசங்கிக்கிற நம்மை கவனித்து நோக்குகிறார்கள். நாம் தான் அவர்களுக்கு வேத புத்தகம். "நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறது போல நீங்கள் என்னைப் பின்பற்றுங்கள்' என்று அப்போஸ்தலனாகிய பவுல் கூறியதைப் போல் நீங்களும் நானும் கூறத்தைரியமுண்டா? கொரி 11 : 1இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தை மேற்கொண்டவர்களில் தலை சிறந்தவராகக் கருதப்படுவர் அப்போஸ்தலனாகிய பவுல் அவர் வெற்றிக்கு அஸ்திபாரம் அவரது சொல்லும் செயலும் ஒன்றாக இருந்ததுதான் என்று துணிந்து கூறலாம். அவர் எதை நம்பினாரோ அதையே சொன்னார். எதைச் சொன்னாரோ அதையே செய்தார். அவரிடத்தில் துளியும் மாய்மாலம் இருந்ததில்லை. மற்றவர்கள் மெச்ச வேண்டுமென்று காரியங்கள் செய்ததுமில்லை. சிறைச்சாலையிலிருந்து பிலிப்பியருக்கு. **சந்தோஷமாயிருங்கள், ஒன்றுக்கும் கவலைப் படாதிருங்கள்** எழுதினார். [பிலி 4 : 4,6] இதைக்கேட்பவர்களுக்கு இலேசில் நம்பிக்கை வராது. ஆனால் தன்னுடைய ஊழியத்தின் கடைசி நாட்களில் பட்டணங்கள் தோறும் பரிசுத்த ஆவியானவர் பவுலாருக்கு ஏற்படவிருக்கும் கட்டுகளைப் பற்றியும், உபத்திரவங்களைப் பற்றியும் எச்சரித்துக் கொண்டே

வருகிறார். அந்த நிலையிலும் **தான் ஒன்றைக் குறித்தும் கவலைப்படேன்** என்று உரைக்கிறார். அப் 20 : 23,24, சொல்வது சுலபம், செய்வது கடினம் என்பார்கள். ஆனால், பவுலடியார் இதற்கு விதிவிலக்கு. அவருடைய போதனையும், சாதனையும் ஒன்றுதான். உயிரைப் பணயம் வைத்து ஊழியம் செய்த வகையில் மட்டும் அல்ல. வாழ்க்கையின் எல்லா நிலைகளிலும் அதே கொள்கைகளைச் சுத்த நல் மனச் சாட்சியோடே கடைப்பிடித்தார்.

ஐசுவரியத்தின் அபாயத்தையும், பண ஆசையின் தீமையையும் குறித்து தீமோத்தேயுக்கு அறிவுரை கூறும்போது **போதும் என்ற மனதுடனே கூடிய தேவ பக்தியே மிகுந்த ஆதாயம்** என்றார். [1 தீமோ 6: 6, அதே போல சிறைச்சாலைக்குள் அடைக்கப்பட்ட நிலையில், பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் இருந்து கொண்டு ''**எல்லாவற்றிலும் மனரம்மியாக இருக்கக் கற்றுக் கொண்டேன்**'' என்று **இயம்புகிறார். [பிலி. 4 : 12]. 'தேவ ஊழியக்காரன் இழிவான ஆதாயத்தை இச்சியாதவனும், பண ஆசையில்லாதவனுமாயிருக்க வேண்டும்**'' என்று சட்டம் வகுத்தார். 1 தீமோ 3 : 3 அதை அவரே முழு மனதோடு கடைப்பிடித்தார்.''ஒருவனுடைய வெள்ளியையாகிலும், பொன்னையாகிலும் வஸ்திரத்தையாகிலும் நான் இச்சிக்கவில்லை என்று எபேசு பட்டணத்து மூப்பர்கள் முன்பு தன்னிலை விளக்கம் கொடுக்கிறார். [அப். 20: 33] சகோதரனே! நானும், நீங்களும் பிரசங்கிக்கிறவைகளைக் கடைப்பிடிக்க முடிகிறதா? அப்போஸ்தலனுடைய ஊழியத்தில் அவருக்கு ஏற்பட்ட மகத்தான வெற்றிக்குக் காரணம் புரிந்துவிட்டதா? பவுல் அப்போஸ்தலன் காலம் வேறு; இன்றைய சூழ்நிலை வேறு என்றெல்லாம் மழுப்பி நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ளக் கூடாது. பவுல் அப்போஸ்தலன் காலத்தில் இருந்த எந்த சூழ்நிலையும் இன்றைக்கு உள்ள நிலையைவிட சிலாக்கியமானதாக இருக்கவில்லை அல்லது அவர் ஒன்றும் தெய்வப் பிறவி இல்லை. பரிபூரணத்தை நோக்கி வாஞ்சையோடு தொடர்ந்து போராடித்தான் அந்த உன்னத நிலையை அடைந்தார். ரோமருக்கு எழுதின நிருபத்தின் ஏழாம் அதிகாரம் 14ம் வசனத்திலிருந்து 24–ம் வசனம் வரையில் உள்ள வசனங்களில் அவருடைய மனப் போராட்டத்தைச் சித்தரிக்கிறார். கொரிந்தியருக்கு எழுதிய முதலாம் நிருபத்தின் ஒன்பதாம் அதிகாரம் 27–ம் வசனத்தில் தன்னுடைய சரீரத்தை ஒடுக்கி தான் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரவானாக கடும் பிரயாசை எடுத்துக் கொள்வது பற்றி விவரிக்கிறார். பிலிப்பியருக்கு எழுதும்போது **ஒன்று செய்கிறேன்,பின்னானவைகளை மறந்து முன்னானவைகளை நாடி பந்தயம் பொருளாகிய இலக்கை நோக்கித் தொடர்கிறேன்.** பிலி 3:14, என்று தான் நடந்துவந்த பாதையில் ஏற்பட்ட தவறுகளைப் பற்றி எண்ணிப்

பார்த்து **நடந்தவைகள் நடந்தவைகளாக இருக்கட்டும், இனி நடப்பவைகள் நல்லவைகளாக இருக்கட்டும்** என்று இனிமேல் தவறு ஏற்படுவதற்கு அதிக வாய்ப்பு இருக்காது என்று நிலையெய்துகிறார். இறுதியாகத் தனது கடைசி நிருபமாகிய தீமோத்தேயுக்கு எழுதின இரண்டாம் நிருபத்தின் நான்காம் அதிகாரம் 7, 8-ம் வசனத்தில் தன் இரட்சிப்பின் நிச்சயத்தை உறுதிப்படுத்துகிறார். **நல்ல போராட்டத்தைப் போராடினேன். ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன்** என்கிறார்.

இதை வாசிக்கிற எனது உடன் ஊழியனே, இன்றைக்கு இருக்கும் எவ்விதமான வசதியும் இல்லாத அந்த நாளில் பனிரெண்டுக்கும் குறைவான அப்போஸ்தலர்கள், சுமார் ஐம்பது ஆண்டுகால இடை வெளிக்குள் ரோமைப் பேரரசின் எல்லா இடங்களுக்கும் சுவிசேஷத்தை எடுத்துச் செல்ல முடிந்தது. ஆனால், எனக்கும் உனக்கும் 300 ஆண்டுகள் ஆகியும் விஞ்ஞான யுகத்தின் சகல சௌகரியங்களையும் கைவசம் வைத்துக் கொண்டு இந்திய நாட்டின் மக்கள் தொகையின் மூன்று விழுக்காடு மக்களைக்கூடக் கிறிஸ்துவுக்குள் கொண்டு வரடியவில்லை. சிந்திப்போம், செயல்படுவோம். நம்முடைய வாழ்க்கையை ஆண்டவனுக்கு அர்ப்பணிப்போம். அவர்தம் அடிச்சுவட்டைப் பின்பற்றி நடப்போம். **கல்லறையின் வாசலிலிருக்கிற கல்லை எவன் நமக்காகப் புரட்டித் தள்ளுவான்?** (மாற் 16 : 3) திகையாதே நீ புறப்பட்டுப் போ. இதோ உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே இருக்கிறேன் என்றவர் உண்மையுள்ளவர், அவர் அப்படியே செய்வார்.

✝

---

**"சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்."**

இவ்வுலகம் நம்மை பகைக்கும்
சிலர் நம்மை விமர்சிப்பார்கள்
மற்றவர்கள் நம்மை துன்பப்படுத்துவார்கள்
சிலர் நம்மை பின்பற்றுவார்கள்
ஆனால் தேவன் நம்மை நேசித்து மகிழ்வார்.

# வெறுப்பும், கசப்பும் வேண்டாம்!

# Hatredness and Bitterness!

P.C. Philemon Rajah

**வெறுப்பு என்ன செய்யும்?**

எண். 23:8 தேவன் சபிக்காதவனை நான் சபிப்பதெப்படி? கர்த்தர் வெறுக்காதவனை நான் வெறுப்பதெப்படி? அன்பு என்பது நல்லதாயினும் அதனை நாம் யார் மீது, எதன் மீது வைத்திருக்கின்றோம் என்பதனை பொறுத்து விளைவுகள் அமைவது போல, வெறுப்பு என்பது ஒரு உணர்ச்சியாயினும் அதனை நாம் எதற்கு பயன்படுத்துகின்றோம் என்பதனை பொறுத்து அதின் விளைவுகள் இருக்கும்.

வெறுப்பும், கசப்பும் என்பது ஒரு உணர்ச்சி: இது என்ன தப்பாகிவிட போகின்றது என யோசிக்கலாம். வெறுப்பும், கசப்பும் நல்ல உணர்ச்சி அல்ல. காமவிகாரத்தினை போல மோசமான உணர்ச்சி, ஏன்? அதைவிட இன்னும் கொடிய குணம் என்றே சொல்லலாம். நம்மில் சிலர் எனக்கு வரும் வெறுப்பும், கசப்பும் என்ன பெரிதாக செய்துவிட போகின்றது அது என்ன பெரிய பாதிப்பை ஏற்படுத்த போகின்றது. எனக்கு ஒன்றும் அப்படி தெரியவில்லை என நாம் யோசிக்கலாம். இன்னும் சிலர், எனக்கு வெறுப்பு வந்தால், நான் அமைதியாக இருப்பேன். நான் உண்டு என் வேலை உண்டு. யார் மீதும் வெறுப்போ அவர்களிடம் பேச மாட்டேன் அவர்களை சுண்டுக்க மாட்டேன் நான் என் வேலையை பார்க்கின்றேன். அவர்கள் அவர்களுடைய வேலையை பார்க்கட்டும். இதெல்லாம், நமக்கு ஒத்துவராது என ஒதுங்கி விடுவேன். அது நல்லது தானே அது நல்லதாக தானே இருந்திருக்கின்றது என நாம் எண்ணலாம்.

நாம் ஒன்றை சிந்திக்க வேண்டும், இந்த சிந்தனைகள் இது போன்ற சிந்தனைகள் எல்லாம் தேவ அன்பிற்கு முற்றிலும் எதிரானதே. ஏனெனில், வெறுப்பு என்பது தேவ அன்பு உண்டாக்கும் விளைவுகளுக்கு எதிரான விளைவுகளை உண்டாக்குவதாக இருக்கின்றது. இறை அன்பு ஒருவருக்குள் இருந்தால் அது உண்டாக்கும் விளைவுகளுக்கு, எதிரான விளைவுகளை வெறுப்பும் கசப்பும் உண்டாக்கும் என்பது நிச்சயம். ஏனெனில், அது தேவ அன்பிற்கு முற்றிலும் எதிரான ஒரு குணமாகும்.

வெறுப்பும், கசப்பும் வந்தால் நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்றோ. நான் என்ன செய்கின்றேன். என்றோ சொல்வதைவிட வெறுப்பின்

ஆவியால் பிடிபட்டவர்கள், அதாவது வெறுப்பிற்கு தங்களை ஒப்புக்கொடுத்தவர்கள் என்ன செய்தார்கள் என வேதாகமத்திலிருந்தே படிப்போம்.

## காயீனின் வெறுப்பு

இந்த உலகத்தின் முதல் கர்ப்ப பிறப்பு மனிதனான காயீன், தன் சகோதரனை குறித்த வெறுப்பு வந்த பிறகு, முகநாடி மாறுபட்டது. அவனது வெறுப்பு. அவனது முகத்தில் தெரிந்து, கர்த்தர் அவனை கண்டித்தார். அதனையும் மீறி, தன் உடன்பிறந்தவனை இரக்கமற்று கொலை செய்தான் அந்த கொலையை மறைக்க, எல்லாம் அறிந்த சர்வஞானியாகிய கர்த்தரிடமே நாடகமாடினான். (ஆதியாகமம் 4 ).

## நோவாவின் வெறுப்பு

ஏறக்குறைய 4600 ஆண்டுகளுக்கு முன்பாக, இந்த மு உலகம் கர்த்தருக்கு எதிராக இருந்த போதும், ஒத்த ஆளாக கர்த்தருக்கு பயந்து, தீமையான பாவங்களுக்கு தன்னை விலக்கி, உத்தமனாகவும் நீதிமானாகவும், ஏறக்குறைய நூறு ஆண்டுகள் முரட்டுத்தனமான மக்களுக்கு பொறுமை மற்றும் அன்புடனே நீதியை போதித்து, கர்த்தருடைய மனம் குளிரும்படி வாழ்ந்த முன்னோடியான நோவா, மதுபோதையில் மயங்கி ஆடை விலகிக் கிடந்ததை தன் மகன் கானான் தன் மற்ற மகன்களுக்கு அறிவித்ததினால், வெறுப்படைந்து, தான் பெற்ற பிள்ளையை சபித்தான் (ஆதியாகமம்9).

## யாக்கோபின் பிள்ளைகளின் வெறுப்பு

யாக்கோபின் 10 பிள்ளைகளும் தங்கள் தம்பியாகிய யோசேப்பினை கிணற்றில் தூக்கி எறிந்தனர். அதில் தங்களுக்கு ஆதாயம் இல்லையென்று ஊர் பேர் தெரியாதவர்களிடம் அடிமையாக விற்றனர். அங்கே போய் யோசேப்பு சோற்றுக்கு வழியின்றி, அடிபட்டு உதைபட்டு, அவனுக்கு தன் வாழ்வே கசப்பாகி, கொடுமையான மரணத்தினை சந்திக்க வேண்டும். என எண்ணினாரோ, என்னவோ? உண்மையில் அடிமையாக வாழ்வது கொடுமைதான் அல்லவா!. தகப்பனின் செல்லப்பிள்ளையாகிய சுதந்தரவாளி ஒருவன், நாதியற்று, அனாதையாக வாழ்வது என்பது எவ்வளவு பெரிய கொடுமையாக இருக்கும். ஏன் இப்படிப்பட்ட வாழ்வை அவனுக்குத் தர விழைந்தனர். தம்பியின் மீதுகொண்ட வெறுப்பு (ஆதியாகமம் 37), தங்கள் தகப்பனை பொய் சொல்லி ஏமாற்றி, அவரது வாழ்வை துயரத்தில் ஆழ்த்தினர். விளைவுகளைப் பற்றி யோசிக்காமல் செயல்பட்டனர். இதேபோன்று நிறைய உதாரணங்களை வேதாகமத்திலிருந்தே சொல்லிக்கொண்டே போகலாம்.

### யூதர்களின் வெறுப்பு

யோவான் 1:11 ''அவர் நமக்குச் சொந்தமானதிலே வந்தார், அவருக்குச் சொந்தமானர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை'' யூதர்கள், ஆண்டவர் இயேசுவின் மீது வெறுப்புக் கொண்டனர். கர்த்தருடைய வார்த்தையின்படி வைராக்கியமாக வாழ்வதாக எண்ணிக்கொண்டே, கர்த்தருடைய வார்த்தையின் வடிவமாகிய இயேசு கிறிஸ்துவை அவர்கள் வெறுத்து புறக்கணித்தனர். அவர் தீர்க்கதரிசனங்களின்படியே மேசியாவாக இருந்தும், அவர்கள் விரும்பினபடி எதிர்பார்த்த ராஜாவாக இல்லாததினால் புறந்தள்ளினர், அவர்கள் வெறுப்பினால் செய்தவைகளை நாம் உற்றுக் கவனித்தால், இது வெறுப்பின் உச்சமாக இருக்கின்றது என புரிந்துகொள்ள முடியும். கர்த்தருடைய வார்த்தையின்படி வாழ அனுதினம் முயலுகின்ற நமக்கு மாபெரும் எச்சரிப்பின் செய்தியாகவும் இருக்கின்றது.

இயேசுவின் மேல் கொண்ட வெறுப்புணர்வு, அவர்களை என்ன செய்ய தூண்டியது? அதாவது, இயேசுவின் மீது கொண்ட வெறுப்பினால் என்னவெல்லாம் செய்தனர்? அந்த தீய குணத்தின் செல்வாக்கின் விபரீதங்கள் என்னென்ன?

(நீதி 8:13) தீமையை வெறுப்பதே கர்த்தருக்குப் பயப்படும் பயம்: பெருமையையும், அகந்தையையும், தீய பழியையும், புரட்டுவாயையும் நான் வெறுக்கிறேன்.''

அடுத்ததாக, சத்துரு நமக்கு எதிரே கொண்டு வரும் இந்த வெறுப்புணர்வு என்னும் ஆயுதத்தினை கொண்டு, அவனையே நாம் வீழ்த்த வேண்டும். அதாவது, அவனுக்கு எதிராக திருப்ப வேண்டும். கோலியாத்தின் பட்டயத்தினை உருவி, அவனை சிரச்சேதம் செய்த தாவீதை போல நாம் செயல்பட வேண்டும்.

இந்த வெறுப்புணர்வினை சுயத்தினை வெறுப்பதற்காகவும், மத்தேயு 16:24 ''அப்பொழுது, இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி; ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்.'' பாவத்தினை வெறுப்பதற்காகவும், ரோம–12:9–ல் ''உங்கள் அன்பு. மாயமற்றதாயிருப்பதாக, தீமையை வெறுத்து, நன்மையைப்பற்றிக்கொண்டிருங்கள். மற்றும் உலகத்தினை வெறுப்பதற்காகவும் தீத்–2:12 ''நாம் அவபக்தியையும் லௌகிக இச்சைகளையும் வெறுத்து, தெளிந்த புத்தியும் நீதியும் தேவபக்தியும் உள்ளவர்களாய் இவ்வுலகத்திலே ஜீவனம் பண்ணி,'' என்பதை நாம் பயன்படுத்திக் கொள்ள முடியும். அவ்வாறு நாம் செய்யும் போது இந்த வெறுப்புணர்வினை மேற்கொண்டு, கர்த்தருக்கு உகந்தவர்களாக மாற முடியும்.

இறுதியாக, அன்பானவர்களே, வெறுப்புணர்வு மற்றும் கசப்புணர்வு என்பது ற்றிலும் அன்பிற்கு எதிரான குணம். ஆகையால், நாம் ஆண்டவர் இயேசுவை போல, பாவ செயல்களை வெறுப்போம். பாவிகளை நேசிப்போம். பாவிகளை வெறுத்தால், அவர்களுக்கு நற்செய்தியை சொல்வதினை நிறுத்திவிடுவோம். எல்லாரும் இரட்சிக்கபட வேண்டும் என்ற தேவ திட்டம் உடைபட நாமே காரணமாகிவிடுவோம். அதனால் இதனை குறித்து விழிப்புணர்வு நமக்கு அவசியமாகும். நமது கர்த்தர் அன்பாக இருக்கின்றார் [1 யோவான் 4:8]. ஆகையால், கர்த்தருடைய பிள்ளையாகிய நாம் அவரைப் போலவே அன்புள்ளவர்களாக இருக்க வேண்டும். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் எப்படி இருக்கின்றோம்? அன்போடா? வெறுப்பும் மற்றும் கசப்போடா? என சிந்தித்து நமது சிந்தனை மற்றும் செயல்களை கர்த்தருக்கு உகந்ததாக உருவாக்குவோம். இந்த தெய்வீக முயற்சியில் கர்த்தர் நம்மை ஆசீர்வதித்து, அவரைப் போன்றே நம்மை அன்புள்ளவர்களாக்குவாராக! ஆமென்.

✝

## நம் பேச்சு எப்படியாக இருக்க வேண்டும்?

1. நம் பேச்சு ஞானமான ஆரம்பத்தையும், முடிவையும் கொண்டிருக்க வேண்டும். [ பிரசங்கி 10:12,13]

2. நம் பேச்சு கேட்கிறவர்களுக்கு ஏற்றதாய், பொருத்தமானதாய் இருக்க வேண்டும். [நீதி 25:11]

3. நம் பேச்சு பக்தி விருத்திக்கேதுவான வார்த்தைகளைக் கொண்டிருக்க வேண்டும். [ எபேசியர் 4:29]

4. நம் பேச்சு உப்பால் சார மேறினதாயிருக்க வேண்டும். [கொலோ 4:5,6]

# தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்
# The Chosen People

B.Arjunan

முதலாவது ஆண்டவர் தம்முடைய ஊழியத்தை ஆரம்பிக்கும்போது: **அவர் தம்முடைய சீஷர்களை வரவழைத்து அவர்களில் பன்னிரண்டு பேரைத் தெரிந்துகொண்டு, அவர்களுக்கு அப்போஸ்தலர் என்று பேரிட்டார்**' [லூக்.6:13]. உலக மக்களை பாவத்தின் பிடியிலிருந்து விடுவித்து தம்முடைய நித்திய வாசஸ்தலத்தில் சேர்க்கும்படியாகவும், ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லோரும் மனந்திரும்பி இரட்சிக்கப்படவும் இந்த அப்போஸ்தலர்களை முதலாவது தம்டைய ராஜ்யத்தின் பணிக்காகத் தெரிந்துகொண்டு அவர்களுக்கு அப்போஸ்தலர்கள் என்று பேரிட்டார் எனக் காண்கிறோம். அதைத் தொடர்ந்து அநேகர் தெரிந்து கொள்ளப்படுகிறார்கள். பேதுரு தமது நிருபத்தில் எழுதும்போது; பிதாவாகிய தேவனுடைய முன்னறிவின்படியே, ஆவியானவரின் பரிசுத்தமாக்குதலினாலே, கீழ்ப்படிதலுக்கும் இயேசு கிறிஸ்துவினுடைய இரத்தந் தெளிக்கப்படுதலுக்கும் தெரிந்து கொள்ளப்பட்ட பரதேசிகளுக்கு எழுதுகிறதாவது: கிருபையும் சமாதானம் உங்களுக்குப் பெருகக்கடவது என எழுதுகிறார் [1பேது. 1:2]. இன்றைக்கு இவ்விதமாக தேவன் நம்மையும் தெரிந்து கொள்ளுகிறார். அழைக்கப்பட்டவர்கள் அநேகர், ஆனால் தெரிந்துகொள்ளப் பட்டவர்களோ சிலர் என்ற வாக்கியத்தின்படி கீழ்ப்படிதலுக்கும் இயேசுவின் இரத்தத்தினாலே கழுவப்படுவதற்கும் சிலரே ஒப்புக்கொடுக்கிறார்கள். அவர்கள் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களாயிருக்கிறார்கள். அவர்களை பரதேசிகள் என வேதம் சொல்லுகிறது.

மேலும், 'ஞானிகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பைத்தியமானவைகளைத் தெரிந்துகொண்டார்: பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பலவீனமானவைகளைத் தெரிந்துகொண்டார்'' [1கொ.1:27], ஆம், ஞானிகள் தங்களுடைய ஞானத்தை நம்பி மோசம் போகிறார்கள். தங்களுடைய ஞானத்திலே மேட்டிமை கொண்டு கர்த்தர் யார்? அவரை நாங்கள் விசுவாசிக்க வேண்டியதின் அவசியம் என்ன? போன்ற கேள்விகளை கேட்டு மோசம் போகிறார்கள். இவ்வுலகத்தின் ஞானம் தேவனுடைய பார்வையில் பைத்தியமாயிருக்கிறது என்பதை அவர்கள் அறியாது போகிறார்கள். ஆகையால், தேவன் தள்ளுண்டவர்களையும்

பைத்தியமாக எண்ணப்படுகிறவர்களையும் தெரிந்துகொண்டு அவர்களை ஞானவான்களாக்குகிறார். அந்தப்படியாக கலிலேயரை தேவன் தெரிந்துகொண்டு அவர்கள் மூலமாக அவருடைய ராஜ்யம் கட்டப்படுவதை விரும்பினார். பலவுள்ளவைகளை வெட்கப்படுத்தும்படியாகவே தேவன் இவ்விதமான மக்களைத் தெரிந்துகொண்டார்.

சபையில் உள்ள தெரிந்துகொள்ளப்பட்ட சகோதரிக்கு அப்போஸ்தலனாகிய யோவான் எழுதும்போது: ''தெரிந்துகொள்ளப்பட்டவளுமாகிய அம்மாளுக்கும், அவளுடைய பிள்ளைகளுக்கும், மூப்பனாகிய நான் எழுதுகிறதாவது: மாம்சத்தில் வந்த இயேசுகிறிஸ்துவை அறிக்கைபண்ணாத அநேக வஞ்சகர் உலகத்திலே தோன்றியிருக்கிறார்கள்: இப்படிப்பட்டவனே வஞ்சகனும் அந்திக் கிறிஸ்துவுமாயிருக்கிறான். உங்கள் செய்கையின் பலனை இழந்துபோகாமல், பூரண பலனைப் பெறும்படிக்கு எச்சரிக்கையாயிருங்கள்'' என எழுதுகிறார் (2யோவா.2.7.8), அப்போஸ்தலர்கள் தெரிந்துகொள்ளப்பட்டவர்களை எச்சரித்து புத்திசொல்லியிருக்கிறதை நாம் காண்கிறோம். ஏனெனில், எதிராளியாகிய பிசாசானவன் எவனை விழுங்கலாமோ என வகைதேடிச் சுற்றித்திரிகிறான் என வேதத்தில் வாசிக்கிறோம். கொஞ்சகாலம் உண்டென பிசாசு அறிந்து, கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாக கொடிய வஞ்சகத்தை அவர்களுக்குள்ளே அனுப்புவான். ஆகையால் அவனுடைய வஞ்சகத்தை குறித்து எச்சரிக்கையாயிருக்கும்படி தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் எச்சரிக்கப்பட்டனர்.

**பிசாசினால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்:**

கள்ளக் கிறிஸ்துக்களும், கள்ளத்தீர்க்கதரிசிகளுமாயிருக்கின்றனர்: ''ஏனெனில் கள்ளக் கிறிஸ்துக்களும் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாக அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள்'' என காண்கிறோம் (மாற்.13:22). இந்நாட்களிலும் இப்படிப்பட்டவர்களைக் காணடிகிறது. இயேசுவின் பெயராலே ஓநாய்கள் ஆட்டுத்தோலை போர்த்திக் கொண்டு மந்தைக்குள் வருவதைப்போல கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறார்கள். இவர்கள் அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்வதாக சொல்லி ஜனங்களை வஞ்சிக்கிறார்கள். இதனால் சத்தியத்தில் நிலைத்திருக்கிறவர்கள்கூட இவ்விதமான பொய்யான அடையாளங்களையும் அற்புதங்களையும்

நம்பி ஏமாற்றப்பட்டுப் போகிறார்கள். கடைசி நாட்களிலே கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கும்படியாக சாத்தான் இவ்விதமான கள்ளப்போதகர்களை எழுப்பிக்கொண்டு வருகிறான். இவர்களைக் குறித்தும். இப்படிப்பட்டவர்களுடைய உபதேசங்களை நம்பி மோசம் போகிறவர்களைக்குறித்தும் யூதா புத்தகத்தில் படிக்கிறோம்: ''இவர்களுக்கு ஐயோ! இவர்கள் காயீனுடைய வழியில் நடந்து, பிலேயாம் கூலிக்காகச் செய்த வஞ்சகத்திலே விரைந்தோடி. கோரா எதிர்த்துப்பேசின பாவத்திற்குள்ளாகி கெட்டுப்போனார்கள்'' [யூதா11]. மேலும், பேதுரு சொல்லும்போது; 'கள்ளத்தீர்க்கதரிசிகளும் ஜனங்களுள்ளே இருந்தார்கள். அப்படியே உங்களுக்குள்ளும் கள்ளப்போதகர்கள் இருப்பார்கள்: அவர்கள் கேட்டுக்கேதுவான வேதப்புரட்டுகளைத் தந்திரமாய் நுழையப்பண்ணி, தங்களைக் கிரயத்துக்குக்கொண்ட ஆண்டவரை மறுதலித்து, தங்களுக்குத் தீவிரமான அழிவை வருவித்துக்கொள்ளுவார்கள்'' என எச்சரிக்கிறார் [2பேது 2:1]. ஆதலால், நாம் செய்யவேண்டியது என்ன? ''இவைகளை முன்னமே நீங்கள் அறிந்திருக்கிறபடியால், அக்கிரமக்காரருடைய வஞ்சகத்திலே நீங்கள் இழுப்புண்டு உங்கள் உறுதியிலிருந்து விலகிவிழுந்து போகாதபடிக்கு எச்சரிக்கையாயிருந்து'', என வாசிக்கிறோம் [2பேது.3:17].

தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களுடைய முடிவு எப்படிப்பட்டதாயிருக்கும்? தேவன் தாம் தெரிந்துகொண்டவர்களை இரட்சிக்கும்படியாக ஒரு அற்புதமான திட்டத்தை வைத்திருக்கிறார். அந்த திட்டத்தை நாம் வேதாகமத்தில் பார்க்கிறோம். ''அவர் தம்முடைய தூதரை அனுப்பி: தாம் தெரிந்துகொண்டவர் 11 களைப் பூமியின் கடைமுனை முதற்கொண்டு, வானத்தின் கடைனைமட்டுள்ள நாலு திசைகளிலுமிருந்து கூட்டிச் சேர்ப்பார்'' [மாற்.13:27]. ஒருவரும் கைவிடப்பட்டு போய்விடக்கூடாது என்பதற்காகவே வானத்தின் ஒரு னை தற்கொண்டு வானத்தின் கடைனைமட்டுள்ள நாலு திசைகளிலு ள்ளவர்களை கூட்டிச்சேர்ப்பார் எனக் காண்கிறோம். அப்பொழுது பல பாஷைகளைப் பேசுகிறவர்களும், பல நிறத்தவர்களும், பல நாட்டவர்களும் அவருடைய சமூகத்தில் சேர்க்கப்படுவார்கள். அந்த கூட்டத்தில் நாம் தெரிந்து கொள்ளப்பட்டவர்களாக இருப்பது எவ்வளவு சந்தோஷத்தை கொண்டுவரும் என்பதை எண்ணிப் பாருங்கள். இப்பேர்பட்ட ஆசீர்வாதத்தைப் பெற தகுதியுடைய வராக நீங்கள் இருக்கிறீர்களா? அப்படியில்லை என்றால் உங்களைத் தகுதிப்படுத்திக் கொள்ள கர்த்தருடைய வார்த்தைக்குக்குக் கீழ்ப்படிந்து அவரால் தெரிந்து கொள்ளப்பட உங்களை கர்த்தருடைய சித்தத்திற்கு ஒப்புக்கொடுங்கள்.

நீங்கள் எங்கே நிற்கிறீர்கள்? வலப்பக்கத்திலா அல்லது இடப்பக்கத்திலா? வலப்பக்கத்தில் உள்ளவர்களுக்கு தேவனால் உண்டாக்கப்பட்ட இடம் கிடைக்கும். அவர்களுக்காக தேவன் ஒரு அற்புதமான திட்டத்தை வைத்திருக்கிறார். அந்த ஆசீர்வாதம் உலகம் உண்டானது தற்கொண்டு ஆயத்தம்பண்ணப்பட்ட இடம். உலகத்தில் உள்ள சிறப்பான கட்டிடங்களை கட்ட பல வருடங்கள் எடுத்துக்கொள்கிறார்கள். அப்படி பல வருடங்கள் கட்டப்பட்ட கட்டிடங்களை நாம் பார்க்கும்போது அப்படியே அசந்துபோய்விடுகிறோம். உலகம் உண்டானது தற்கொண்டே நமக்காக தேவன் ஆயத்தம் பண்ணியிருக்கிற இடம் எப்படியிருக்கும் என்பதை எண்ணிப்பாருங்கள். தேவனால் சிருஷ்டிக்கப்பட்ட உலகத்தையே சரிவர பார்க்காதவர்கள் கோடிக்கணக்கானோர் உண்டு. இந்த பூமியே இவ்வளவு அழகாக இருக்கும்போது: தேவன் தாம் தெரிந்துகொண்டவர்களுக்கு உண்டாக்கிவைத்திருக்கும் அந்த பரலோகம் எவ்வளவு அழகாகயிருக்கும் என்பதை எண்ணிப் பார்க்கும்போது நாம் அதற்கு தகுதியாக வாழ்ந்துகொண்டிருக்கிறோமா என்பதை நினைத்துப்பார்க்க வேண்டியவர்களாயிருக்கிறோம். நீங்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்களாக இருக்கிறீர்களா? அப்படியில்லையென்றால் அவரால் நீங்கள் தெரிந்துகொள்ளப்பட கர்த்தருடைய வேதத்தை வாசித்து, மெய்யான சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியுங்கள். தேவனுடைய பிள்ளையாக மாற பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்று கர்த்தருடைய சபையில் சேர்க்கப்படுங்கள். அப்பொழுது கர்த்தர் உங்களை தெரிந்துகொள்ளுவார்.

தெரிந்து கொள்ளப்பட்ட அப்போஸ்தலர்கள் உலகமெங்கும் சென்று சுவிசேஷ வசனத்தை பிரசங்கித்து, அநேக ஆத்துமாக்கள் இரட்சிக்கப்படவும், சபைகள் எழுப்பவும் வழிகளை ஏற்படுத்தினார்கள். அதைப் போல ஒவ்வொரு கிறிஸ்தவனும் கிறிஸ்தவளும் செய்யவேண்டிய வேலைகள் நிறைய உண்டு. அதற்காக நாம் தெரிந்து கொள்ளப்பட்ட கிறிஸ்துவின் சந்ததியாகவும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாகவும், அசுத்தமான உலகத்தில் பரிசுத்த ஜாதியாகவும், நாங்கள் அந்த கோத்திரத்தை சேர்ந்தவர்கள். நாங்கள் இந்த வகையராவைச்சேர்ந்தவர்கள் என்று சொல்லக்கூடிய இந்த உலகத்தில் நாம் அவருக்குச் சொந்தமானவர்களாகவும் இருக்கிறோம். நீங்களும் தேவனுடைய வேலையை ஏதாவது ஒருவகையில் செய்து, தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் என்பதை நிரூபியுங்கள்.

✝

# இயேசுவை பின்பற்றுபவர்களுக்கான வேதாகமப் பெயர்கள்
# Bible Names For Those Who Follow Jesus

Benny Martin

**அ**ருமையான வாசகர்களே! அவசரமும், பரபரப்பும் நிறைந்த இவ்வுலகில் ஒரு குழந்தை பிறப்பதற்கு பல மாதங்களுக்கு முன்பாகவே அக்குழந்தையின் தாயும், தகப்பனும் பிறக்கப் போகும் குழந்தைக்கு என்ன பெயர் வைக்கலாம் என்று தங்கள் உறவினர்களிடமும், நண்பர்களிடமும் விசாரிக்கத் தொடங்கி விடுகிறார்கள். சிலர் அதையும் தாண்டி தங்கள் வாழ்க்கைத் துணையாகிப் போன இணையத்திலும் கேள்விக் கணைகளை தொடுத்து தேடுகிறார்கள். அதோடு விட்டுவிடுகிறார்களா என்றால் இல்லை. பெற்றோர்கள் வாயில் நுழையாத பெயர்களை தங்கள் வாரிசுகளுக்கு வைத்து வாழ்த்துவதோடு நின்றுவிடாமல் நினைத்துப் பார்க்க முடியாத வகையில் பெயர் வைக்கும் நிகழ்ச்சியையும் ஆனந்தமாகவும், ஆடம்பரமாகவும், நடத்தி விடுகிறார்கள். அண்ட சராசரங்களையும் தம் வாயின் வார்த்தையினாலே உண்டாக்கி வானுலகில் வீற்றிருக்கும் நம் தேவனும் தம்முடைய பிள்ளைகளுக்கு பல பெயர்களைக் கொடுக்கிறார். தேவனுடைய ஜனங்கள் பழைய ஏற்பாட்டில் இஸ்ரவேலர்கள் என்று அழைக்கப்பட்டார்கள். ஆனால், புதிய ஏற்பாட்டில் இயேசு கிறிஸ்துவை பின்பற்றினவர்கள் என்னவாக அழைக்கப்பட்டார்கள்? அவர்கள் எப்படியாக அடையாளப்படுத்தப்பட்டார்கள்? அவர்களுக்கு ஏதாவது சிறப்புப்பெயர்கள் கொடுக்கப் பட்டனவா? இக்கேள்விகள் பொருத்தமானவைகளும், முக்கிய மானவைகளுமாயிருக்கிறபடியால் வேதாகமம் அதைப்பற்றி என்னச் சொல்கிறதோ அதற்கேற்றபடி பதிலளிக்க நாம் கடமைப் பட்டிருக்கிறோம். புதிய ஏற்பாட்டில் இயேசுவைப் பின்பற்றுபவர்களை அடையாளப்படுத்துவதற்காக பயன்படுத்தப்பட்டிருக்கிற மூன்று பெயர்களைப் பற்றி நாம் பார்ப்போம்.

### I **சீஷர்கள்**

சீஷர்கள் என்னும் பெயர்தான் நற்செய்தி நூல்களில் அதிக மாகப் பயன்படுத்தும் பெயராகக் காணப்படுகிறது. சீஷன் என்பதற் கான பொருள் கற்றுக்குட்டி, மாணவன், குருவை அப்படியேப் பின்பற்றுவன் என்பவைகளாயிருக்கிறது. இவ்வார்த்தை கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களுக்கு பொருந்துகிறபடியினாலே இதன் பொருள் கிறிஸ்துவின் உபதேசத்திற்கு ஒருவர்

உண்மையாயிருந்து அவரைப் பின்பற்றுவது என்று பொருள்படும். நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அந்நாட்களில் பரவலாக போதகராகத்தான் அறியப்பட்டார். எனவே, சீஷன் என்னும் இப்பெயர் போதகர் அல்லது ஆசிரியருக்கும், மாணவருக்கும், இடையில் காணப்படும் உறவைத்தான் குறிக்கிறது. நாம் கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைந்திருந்து, மிகுந்த கனிகளைக் கொடுத்தால்தான் இயேசுவுக்கு மெய்யான சீஷர்களாக இருக்க முடியும் [யோவான் 15:78]. நாம் இவ்வுலகில் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால் இயேசுவின் சீஷர்கள் என்று எல்லோராலும் அறியப்படுவோம். அவர்கள் ஒரு வருஷ காலமாய்ச் சபையோடே கூடியிருந்து, அநேக ஜனங்களுக்கு உபதேசம் பண்ணினார்கள். முதல் முதல் அந்தியோகிவிலே சீஷர்களுக்குக் கிறிஸ்தவர்கள் என்கிற பேர் வழங்கிற்று [அப்போஸ்தலர் 11:26].

## II **சகோதரர்**

கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களுக்கு கொடுக்கப்படும் இரண்டாவது பெயர் சகோதரர் என்பதாகும். நம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து மத்தேயு 23:8 ல் தம்முடைய சீஷர்களைப் பார்த்து **நீங்கள் எல்லாரும் சகோதரராயிருக்கிறீர்கள்** என்று சொன்னார். இப்பெயர் கிறிஸ்து பரமேறின பிறகு அதிக அதிகமாய் பயன்டுத்தப்பட்டது. அப்போஸ்தலனாகிய பேதுரு [I பேதுரு 2:17] எல்லோரையும் கனம் பண்ணுங்கள்; சகோதரரிடத்தில் அன்பு கூருங்கள் என்று சொல்கிறார். பழுத்த தாசனாகிய பவுலும் பலமுறை தன்னுடைய எழுத்துக்களில் **சகோதரர்** என்னும் பெயரைப் பயன்படுத்தியிருக்கிறார். இந்த உதாரணங்களை கவனியுங்கள் I கொரிந்தியர் 6:8 ன் பவுல் கொரிந்து சபையைப் பார்த்து **நீங்கள் அநியாயம் செய்கிறீர்கள், நஷ்டப்படுத்துகிறீர்கள், சகோதருக்கும் அப்படி செய்கிறீர்களே** என்று கடிந்து கொள்கிறார். கலாத்தியர் 6:1 ல் கலாத்திய சபைகளுக்கு பவுல் எழுதும் போது சகோதரே ஒருவர் யாதொரு குற்றத்தில் அகப்பட்டால் என்று எழுதுகிறார். அதேபோல் ரோமர். 12:10ல் பவுல் ரோமபுரி சபையாரிடம் சகோதர சிநேகத்திலே ஒருவர் மேலொருவர் பட்சமாயிருங்கள் என்று வலியுறுத்துகிறார்.

சகோதரர் அல்லது சகோதரர்கள் என்னும் வார்த்தை சகோதரர் மத்தியில் ஒருவருக்கொருவர் வெளிப்படுத்த வேண்டிய கடமைகளைக் காட்டுகிறது. சகோதரருக்கு விரோதமாகச் செயல்படுவது தேவனுக்கு விரோதமாகப் பாவஞ்செய்வதற்கு சமமாகும். இப்படி சகோதரருக்கு விரோதமாகப் பாவஞ்செய்து

பலவீனமுள்ள அவர்களுடைய மனச்சாட்சியைப் புண்படுத்துகிற தினாலே நீங்கள் கிறிஸ்துவுக்கு விரோதமாகப் பாவஞ் செய்கிறீர்கள் (I கொரிந்தியர் 8:12). நாம் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களாக இருக்கிற படியால், சகோதர சகோதரிகளாக இருக்கும் சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறோம்.

## III பரிசுத்தவான்

கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களை அடையாளப்படுத்தும் மூன்றாவது பெயர் பரிசுத்தவான். மத உலகில் இப்பெயர் அதிகமாகப் பிரயோகப்படுத்தப்படுவதால், நாம் இவ்வார்த்தையை பயன்படுத்துவதிலிருந்து விலகியிருக்கிறோம். ஏனென்றால், சிலர் கிண்டலாகக்கூட நான் அந்த அளவு பரிசுத்தவான் இல்லை என்று சொல்வதை கேள்விப்பட்டிருக்கிறோம். மிகவும் விசேஷமான பரிசுத்தவான் என்னும் வார்த்தையை நாம் பயன்படுத்த தயங்கக் கூடாது. பரிசுத்தவான் என்னும் பதம் பரிசுத்த வேதாகமத்தில் சுத்தமாகத் தன்னை தேவனுக்கு ஒப்புக்கொடுத்த ஒருவரைத்தான் குறிக்கும் படி பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இப்பதம் மத ரீதியாக தன்னை சூப்பர் ஹீரோவாக பார்க்கும் ஒருவருக்குப் பொருந்தாது.

பரிசுத்தவான் என்னும் பதம் புதிய ஏற்பாட்டில் பல இடங்களில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. உதாரணமாக , அப்போஸ்தலர் 9:13 ல் அனனியா ஆண்டவரே, இந்த மனுஷன் எருசலேமிலுள்ள உம்முடைய பரிசுத்தவான்களுக்கு எத்தனையோ பொல்லாங்குகளைச செய்தானென்று அவனைக் குறித்து அநேகரால் கேள்விப் பட்டிருக்கிறேன் என்று சொன்னான். கிறிஸ்துவைப் பின்பற்றி னவர்கள் பரிசுத்தவான்கள் என்று அழைக்கப்பட்டதிற்கான எண்ணற்ற குறிப்புகள் புதிய ஏற்பாட்டில் இடம் பெற்றிருக்கின்றன. ஆம், கிறிஸ்துவை உண்மையாகப் பின்பற்றுபவர்கள் எல்லோரும் பரிசுத்தவான்கள் என்னும் பேருண்மையை நாம் பல சந்தர்ப்பங்களில் மறந்து விடுகிறோம்.

பிரியமானவர்களே, இதுகாறும் நாம் இயேசு கிறிஸ்துவை பின்பற்றி னவர்கள் என்னவாக அழைக்கப்பட்டார்கள்? அவர்கள் எப்படியாக அடை யாளப்படுத்தப்பட்டார்கள்? அவர்களுக்கு கொடுக்கப்பட்ட சிறப்பு பெயர் கள் என்னவென்றெல்லாம் பார்த்தோம். இப்பெயர்களிளெல்லாம் நாமும் அழைக்கப்படுகிற படியால் பேர் சொல்லி அழைக்கும் தேவனைப் பற்றிக் கொண்டு, அவருடைய வார்த்தைகளின் படி நடந்து ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வோம்.

✝

## தேவன்

# கிறிஸ்து சரீரத்தின் இரட்சகராயிருக்கிறார்.

# Christ is the Savior of the Body

Sunny David

வேதாகமம் எபேசியர் 5:23ல் கிறிஸ்து சரீரத்தின் இரட்சகராயிருக்கிறார் என்று போதிக்கிறது. அப்படியென்றால், எது சரீரம்? சபைதான் சரீரமாயிருக்கிறது. தேவனைப்பற்றி சொல்லும்போது அப்போஸ்தலனாகிய பவுல் இவ்விதமாகச் சென்னார். "எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார்" [எபேசியர் 1:22,23]. மறுபடியும் கிறிஸ்துவைப்பற்றி பேசும்போது அப்போஸ்தலன் இவ்விதமாகச் சொன்னார். "அவரே சபையாகிய சரீரத்துக்கு தலையானவர்; எல்லாவற்றிலும் முதல்வராயிருக்கும்படி அவரே ஆதியும் மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர்" [கொலோ 1:18]. அதே அதிகாரம் 24ஆவது வசனத்தில் "இப்பொழுது நான் உங்கள் நிமித்தம் அனுபவிக்கிற பாடுகளில் சந்தோஷமடைந்து, கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை அவருடைய சரீரமாகிய சபைக்காக என் மாம்சத்திலே நிறைவேற்றுகிறேன்" என்று வாசிக்கிறோம்.

எனவே, கிறிஸ்து எந்த சரீரத்திற்கு இரட்சகராயிருக்கிராரோ அந்த சரீரம் சபையாயிருக்கிறது. அதாவது, கிறிஸ்து சரீரத்தின் இரட்சகர் என்று சொல்லும்போது கிறிஸ்து சபையின் இரட்சகாராயிருக்கிறார் என்றுதான் பொருள்படும். இப்போது கேள்வி என்னவென்றால், "எந்த சபை"? இன்று வித்தியாசமான பெயர்களில், வித்தியாசமான ஆராதனை முறைகளைப் பின்பற்றி வித்தியாசமான போதனைகளைப் போதித்துக் கொண்டு நூற்றுக்கணக்கான, அநேகமாக ஆயிரக்கணக்கான சபைகள் உலகெங்கும் உள்ளன. முதல் நூற்றாண்டில் அப்போஸ்தலன் இந்த வார்த்தைகளை எழுதின போது ஒரு ஒரு சபைதான் இப்பூமியில் இருந்தது அது இயேசு கிறிஸ்து தாம் கட்டுவதாக வாக்குத்தத்தம் பண்ணின சபையாகும். அவர் "என் சபையைக் கட்டுவேன்" என்று தெளிவாக வாக்குத்தத்தம் பண்ணிணார் [மத்தேயு 16:18]. இயேசுவின் மேல் விசுவாசம் வைத்து, அவருடைய கற்பனைகளை கைக்கொண்டு [மாற்கு 16:16 ; அப்போஸ்தலர் 2:38] இரட்ச்சிக்கப்படுகிறவர்களை அவர் அனுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார் [அப்போஸ்தலர் 2:47].



வெளிப்படையாகவே, கர்த்தர் இரட்சிக்கப்படுகிறவர்களை தம்முடைய சபையில் தான் சேர்க்கிறார். மற்ற வித்தியாசமான சபைகளில் அல்ல. அவர் தம்முடைய சபையை அறிவாரா? அவருடைய சபையை அவர் அறிவாரா? அவருடைய சபை அவருடைய நாமத்தைத் தரித்திருக்கிறதா? [1கொரிந்தியர் 12:27 ; ரோமர் 16:16]. அதேபோல் கர்த்தருடைய ஆவிக்குரிய சரீரமாகிய சபையின் அங்கத்தினர்கள் கிறிஸ்தவர்கள் என்றழைக்கப்படுகிறார்கள் [அப்போஸ்தலர் 11:26]. இவர்கள் ஆவியோடும், உண்மையோடும் தேவனை தொழுதுகொண்டு [யோவான் 4:24] எல்லாவற்றிலும் கிறிஸ்துவின் உபதேசத்தின்படி நடக்க முயற்சிக்கிறார்கள் [II யோவான் 9]. மேலும், [I கொரிந்தியர் 12:13]ல் பவுல் "நாம் யூதராயினும், கிரேக்கராயினும், அடிமைகளாயினும், சுயாதீனராயிலும் எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப் பட்டு, எல்லாரும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகந்தீர்க்கப்பட்டோம்" என்று போதித்தார். கத்தோலிக்க சபையோ அல்லது மார்க்கப்பிரிவினை சபைகளோ தோன்றுவதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்பாகவே தேவ ஆவியின் வழிநடத்துதலினாலே இரட்சிக்கப்பட்ட எல்லோரும் ஒரே சரீரத்திற்குள் அதாவது ஒரே சபைக்குள் ஞானஸ்நானம் பெற்றார்கள். கிறிஸ்து இப்பூமியில் இரட்சிக்கப்பட்ட எல்லோரையும் தம்முடைய சபையில் சேர்க்கிறபடியால் இப்பூமியில் சபை என்பது இரட்சிக்கப்பட்டவர்களின் சரீரமாயிருக்கிறது.

கிறிஸ்துவால் ஸதாபிக்கப்பட்ட சபை நோவாவின் பேழையைப் போன்றது. பூமியிலுள்ள ஜீவராசிகள் எல்லாவற்றையும் அழிக்கும்படியாக தேவனால் உண்டாக்கப்பட்ட ஜலப்பிரளயத்திலிருந்து இரட்சிக்கப்படும்படியாக நோவாவும், அவருடைய குடும்பமும் தேவனால் கட்டளையிடப்பட்டார்கள். அப் பேழையானது எந்த அளவின்படி கட்டப்படவேண்டுமென்று

தேவன் கட்டளையிட்டாரோ அதன்படியே நோவா அப்பேழையை உண்டாக்கினார். (ஆதியாகமம் 6-7) அப்பேழைக்கு இரட்சிக்கும் வல்லமை இல்லாதிருந்தது. ஆனால், பேழைக்குள் பிரவேசித்தவர்கள் தண்ணீர் மூலமாக இரட்சிக்கப்பட்டார்கள். பின்பு அப்போஸ்தலனாகிய பேதுரு நோவாவின் பேழைப் பற்றி கிறிஸ்தவர்களிடம் பேசும் போது பேழையில் பிரவேசித்த எட்டுபேர் மாத்திரம் ஜலத்தினால் இரட்சிக்கப்பட்டார்கள் என்று அவர்களுக்கு நினைப்பூட்டுகிறார். "அந்த ஆவிகள் பூர்வத்திலே நோவா பேழையை ஆயத்தம் பண்ணும் நாட்களில் தேவன் நீடிய பொறுமையோடே காத்திருந்தபொது, கீழ்படியாமற் போனவைகள்: அந்தப் பேழையிலே சிலராகிய எட்டுபேர் மாத்திரம் பிரவேசித்து ஜலத்தினால் காக்கப்பட்டார்கள். அதற்கு ஒப்பனையான ஞானஸ்நானமானது, மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல் தேவனைப் பற்றும் நல் மனசாட்சியின் உடன் படிக்கையாயிருந்து இப்பொழுது நம்மையும் இயேசு கிறிஸ்துவினுடைய உயிர்தெலுதலினால் இரட்சிக்கிறது" (1பேதுரு 3:20,21).

இங்கே அப்போஸ்தலன் வலியுறுத்தும் கருத்து என்னவென்றால் பேழைக்குள் இருந்தவர்கள் தண்ணீரினாலே இரட்சிக்கப்பட்டார்கள். அப்போது பிரளயத்தின் தண்ணீர்தான் நோவாவின் குடும்பத்திலிருந்து கீழ்ப்படியாமையின் சந்ததியை பிரித்துக் காட்டியது. அதேபோல், இப்போது தண்ணீர் ஞானஸ்நானம்தான் இரட்சிக்கப் பட்டவர்களிடமிருந்து கீழ்படியாதவர்களை பிரித்துக் காட்டியது. கிறிஸ்து கட்டளையிட்டபடி " விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான். விசுவாசயாதவனோ ஆக்கினைக் குள்ளாகத்தீர்க்கப்படுவான் " (மாற்கு 16:16). அந்நாட்களில் கீழ்ப்படியாமையின் மக்களை தண்ணீர்தான் அழித்தது. அதே தண்ணீர்தான் நோவாவையும் அவருடைய வீட்டாரையும் அழிவிலிருந்து காப்பற்றியது. இந்நாட்களில் கூட அதே தண்ணீர்தான் தேவன் மீது விசுவாசம் வைத்து அவருடைய வார்த்தைகளுக்கு கீழ்ப்படிகிறவர்களை இரட்சிக்கிறது. எனவேதான், பேதுரு ஆசிரியர் அதற்கு ஒப்பனையான ஞானஸ்நானமானது மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல் தேவனைப்பற்றும் நல் மனசாட்சியின் உடன்படிக்கையாயிருந்து, இப்பொழுது நம்மையும் இயேசு கிறிஸ்துவினுடைய உயிர்த்தெலுதலினால் இரட்சிக்கிறது என்றார். ✝

# இன்று நீங்கள் ஏதாவது நல்ல கேள்வியைக் கேட்டீர்களா?

# Did You Ask Any Good Questions Today?

Russ Vickers

Isidor Isacc Rabi, என்பவர் அமெரிக்காவின் மிகச்சிறந்த இயற்பியலாளர்களுள் ஒருவர். அவர் ஒரு சுவாரஸ்யமான காரணத்திற்காகவே விஞ்ஞானி ஆனார். அவர் சொல்லும்போது "என்னால் ஒன்றும் செய்யமுடியவில்லை. நான் இந்த நாட்டிற்கு சிறுபிள்ளையாக கொண்டு வரப்பட்டேன்" என்றார். அவர் சிறு வயதில் தினமும் பள்ளிக்கூடத்திலிருந்து வீடு திரும்பும்போது அவருடைய தாய் "நீ இன்று எதாவது கேள்வி கேட்டாயா"? என்று கேட்டாராம்.

சில கேள்விகள் கேட்பதற்கு நன்றாக இருக்கும் ஆனால், சில கேள்விகள் நன்றாக இருக்காது. உதாரணமாக (யோவான் 9:1-12) வசனங்களில் இயேசு கிறிஸ்து அந்த பிறவிக்குருடனை சுகமாக்கிய அல்லது பார்வை அளித்த சம்பவத்தை நாம் எடுத்துக்கொள்ளலாம். 1 மற்றும் 2 ஆம் வசனங்களில் நாம் "அவர் அப்புறம் போகையில் பிறவிக்குருடனாகிய ஒரு மனுஷனைக் கண்டார். அப்பொழுது அவருடைய சீஷர்கள் அவரை நோக்கி: ரபீ, இவன் குருடனாய் பிறந்தது யார் செய்த பாவம், இவன் செய்த பாவமோ இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமோ என்று கேட்டார்கள்" என்று வாசிக்கிறோம். இச்சம்பவத்தில் வேறுசில கேள்விகளும் இடம் பெற்றிருக்கின்றன. எட்டாம் வசனத்தில் நாம் இவ்விதமாய் வாசிக்கிறோம். "அப்பொழுது அயலகத்தாரும் அவன் குருடனாயிருக்கையில் அவனைக் கண்டிருந்தவர்களும் : இவன் உட்கார்ந்து பிச்சைக் கேட்டுக் கொண்டிருந்தவனல்லவா என்றார்கள். அதேபோல் பத்தாம் வசனத்தில், "அப்பொழுது அவர்கள் அவனை நோக்கி : உன் கண்கள் எப்படித் திறக்கப்பட்டது" என்றார்கள். இருந்தபோதிலும், இச்சம்பவத்தில் கேட்கப்பட்ட கேள்விகளிலேயே தனித்து நிற்கிற கேள்வி, இன்று எல்லோராலும் நம் இரட்சகரைப் பற்றி கேட்கிற கேள்வி "அவர் எங்கே" என்பதாயிருக்கிறது (வசனம்12).

இப்படிப்பட்ட கேள்விகளுக்கு ஜனங்கள் ஏன் அதிகம் கவனம் கொடுக்கிறார்கள் என்பது ஆச்சரியமாயிருக்கிறது. ஆனால், பன்னிரெண்டாம் வசனத்தில் இடம்பெற்றுள்ள கேள்வி நம்

கவனத்தை ஈர்க்கக்கூடிய ஒன்றாகத்தான் இருக்கிறது. இக்கேள்விக்கான சரியான பதில் அப்போஸ்தலர் 17:27ல் பவுல் வெளிப்படுத்திய வார்த்தைகளில் இருக்கிறது. அங்கே லூக்கா இவ்விதமாக பதிவு செய்திருக்கிறார். "கர்த்தராகிய தம்மை அவர்கள் தடவியாகிலும் கண்டுபிடிக்கத்தக்கதாக தம்மை தேடும்படிக்கு அப்படிச் செய்தார்: அவர் நம்மில் ஒருவருக்கும் தூரமானவரல்லவே"

கர்த்தர் நம்மிடத்திலிருந்து தூரமாயிராதபடியால் அவரைத் தேடுவது மனிதனுக்கு அவசியமாயிருக்கிறது. கர்த்தர் நமக்கு எப்படி அருகில் இருக்கிறார்? அவர் நம் ஜீவியங்களில் முக்கியப்பங்கு வகிக்கிறார். அவருக்குள் நாம் பிழைக்கிறோம்; அசைகிறோம், இருக்கிறோம். சாலொமோன் ஞானி காரியத்தின் கடைத்தொகையை பற்றிச் சொல்லும்போது தேவனுக்குப் பயந்து, அவர் கற்பனைகளை கைக்கொள்; எல்லா மனுஷர் மேலும் விழுந்த கடமை இதுவே என்று சொல்கிறார் [பிரசங்கி 12:13]. கர்த்தர் ஒவ்வொரு நாளின் ஒவ்வொரு நிமிடத்திலும் நம் அருகில் இருக்கிறார். நம்மைப் பற்றி எல்லாம் அவருக்கு நன்றாகவே தெரியும்.

அவர் எங்கே இருக்கிறார்? அவர் நீங்கள் நினைப்பதை விட அருகிலேயே இருக்கிறார்?

## சிந்தித்துப் பாருங்கள்

பெற்றோர் தங்கள் பிள்ளைகள் முகத்தைக் கழுவி உடலை சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டுமென்பதற்கு கொடுக்கும் முக்கியத்துவம், அதே பிள்ளைகளின் ஆத்தும சுத்திகரிப்புக்குக் கொடுப்பதில்லை. இது எவ்விதத்தில் நியாயம்? கிறித்தவப் பெற்றோர்களே! இதுகுறித்து சிந்தித்துப் பாருங்கள்.

### தேவன்

# கடைசி ஏழு வார்த்தைகள்

# Seven Final Words

Mark N. Posey

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சிலுவையில் தொங்கிய கடைசி மணித்துளிகளில் ஏழு வார்த்தைகள் பேசினார். கிறிஸ்தவர்கள் இந்த வார்த்தைகளை நீண்ட காலம் நினைவில் வைத்திருக்கிறார்கள். ஏனென்றால், அவைகள் கிறிஸ்துவின் பாடுகளைக் குறித்த ஆழமான அறிவை அல்லது புரிந்துகொள்ளுதலை நமக்குக் கொடுக்கிறது. இயேசு கிறிஸ்துவின் கடைசி ஏழு வார்த்தைகள் வரிசை கிரமத்தின்படி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

**1.மன்னிப்பின் வார்த்தை :** "பிதாவே இவர்களுக்கு மன்னியும்" [லூக்கா 23:34]. இயேசு தம்மை சிலுவையில் அறைந்தவர்களுக்காக கூட ஜெபித்திருக்கிறார். அப்படிச் செய்ததின் மூலமாக [மத்தேயு 5:44]யை நிறைவேற்றினார். "இவர்களுக்கு" என்னும் பதம் நம்மையும் உள்ளடக்குகிறது [ரோமர் 5: 8; யோவான் 3:16].இயேசு "அக்கிரமக்காரருக்காக வேண்டிக் கொண்டார்" என்னும் தீர்க்கத் தரிசனத்தை நிறைவேற்றினார் [ஏசாயா 53:12]

**2.இரட்சிப்பின் வார்த்தை :** "இன்றைக்கு நீ என்னுடனே கூடப் பரதீசிலிருப்பாய்" [லூக்கா 23:43]. இந்த கடைசி நேர மனமாற்றம் ஒருவேளை நியாயமற்றதாக தோன்றலாம்; இருந்தபோதிலும், இயேசு தம்முடைய கிருபையின் வார்த்தைக்கு உண்மையாயிருக்கிறார். இங்கே "பரதீசு" என்பது தேவனுடைய பிரசன்னம் இருக்கிற ஓர் இடமாகும் [I கொரிந்தியர் 12:4].

**3.பாசத்தின் வார்த்தை :** "ஸ்திரீயே, அதோ உன் மகன்". கிறிஸ்து சுயநலமற்ற தன்மையின் முக்கியத்துவத்தையும், மதிப்பையும் நிரூபித்தார். கடைசி நேரத்திலும் கூட அவர் மற்றவர்களை மையப்படுத்திய வாழ்க்கைதான் வாழ்ந்தார். கிறிஸ்தவர்கள் தன்னலமற்றவர்களாயிருக்கிறார்கள், மேலானவைகளை நோக்கியவர்களாக இருக்கிறார்கள் [கொலோ 3:1-4]

**4.நம்பிக்கையற்ற நிலையின் வார்த்தை :** "என் தேவனே என் தேவனே ஏன் என்னை கைவிட்டீர்? [மத்தேயு 27:46]. இவ்வார்த்தைகள் சிலுவையில் இயேசு அனுபவித்த தீவிரமான வேதனைகளை வெளிப்படுத்துகின்றன. இதன் மூலம் இயேசு சங்கீதம் 22வது தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றினார். இவ்வார்த்தைகள்

இயேசுவுக்கு தேவனுடனான நெருக்கமான உறவையும் வெளிப்படுத்துகின்றன. ஏனென்றால், இவ்வார்த்தைகள் எல்லாம் தேவனை நோக்கி ஏறெடுக்கப்படுகின்றன.

**5.சரீர வேதனையின் வார்த்தை :** "தாகமாயிருக்கிறேன் [யோவான் 19:28] இயேசு வலியை இல்லாமல் போகச்செய்யும் பானத்தை, வெள்ளைப் போளம் கலந்த திராட்சரசத்தை குடிக்க மறுத்துவிட்டார். அதாவது, இயேசு சிலுவை மரணத்தின் முழு வேதனையையும் அனுபவிப்பதையும் தெரிந்துகொண்டார்.

**6.வெற்றியின் வார்த்தை :** "முடிந்தது" [யோவான் 19:30]. இதற்கான கிரேக்கப் பதம் "Tetelestai" புதிய ஏற்பாட்டு காலங்களில் ஆவணங்களிலோ, ரசீதுகளிலோ பணம் முழுமையாக செலுத்தப் பட்டது என்பதை அடையாளப்படுத்துவதற்காக எழுதப்பட்டது. இயேசு கிறிஸ்து நமது கடனை சிலுவையில் முழுமையாக கட்டித் தீர்த்தார். இயேசு இப்பூமிக்கு தேவனையும், மனிதனையும் ஒப்புரவாக்கும்படி இப்பூமிக்கு வந்தார். அவர் சிலுவையில் அப்படிச் செய்தார்.

**7.ஒப்புக்கொடுத்தலின் வார்த்தை :** "பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன் என்று மகா சத்தமாய்க் கூப்பிட்டுச் சொன்னார்" [லூக்கா 23:46]. தம்முடைய பணி முடிந்த பிறகு, இயேசு தம்முடைய ஆவியை பிதாவினிடத்தில் ஒப்புவித்தார். இயேசுவின் மரணத்தின் காரணமாக நாம் அவரைப் பார்த்து பரிதபிக்கப்படவேண்டிய அவசியமில்லை, மாறாக நாம் அவரை ஒரு வெற்றியாளராகப் பார்த்து, அன்புகூர வேண்டும். இயேசு உங்களுக்காகவும், எனக்காகவும் மரித்தார் என்பதை ஒருபோதும் நாம் மறந்துவிட வேண்டாம். ✝

---

**சபையை காயப்படுத்தும் ஐந்து பாவங்கள்**

1.ஜெபம் இல்லாமை
2.சோம்பல்
3.பிடிவாதம் அல்லது கலகம்
4.உலகத்தன்மை
5.வெதுவெதுப்பான நிலை

### தேவன்

# இருவருக்கிடையில் நிற்கும் ஒருவர்

## The One Who Stands Between

Michael L. King

தேவனுடைய பரிசுத்தத்தின் காரணமாகவும், மனிதனுடைய அபாத்திரத்தின் காரணமாகவும் தேவன் எப்போதுமே தமக்கும் மனிதனுக்கும் இடையே ஒரு மத்தியஸ்தரை நியமித்திருக்கிறார். ஆவிக்குரிய காரியங்களில் நாமாகவே அல்லது நம்முடைய பெலத்தைக் கொண்டே எல்லாவற்றையும் செய்து முடியாதபடியால் தான் தேவன் முற்பிதாக்களையும், நியாயாதிபதிகளையும், தீர்க்கதரிசிகளையும், மோசேயையும், பின்பு புதிய ஏற்பாட்டின் காலத்தில் இயேசு கிறிஸ்துவையும் நமக்கும், அவருக்கும் முன்பாக நிற்கும்படி தெரிந்து கொண்டார். எபிரெயர் ஆசிரியர் கிறிஸ்து மூலமாய் தம்மிடத்தில் வருபவர்களை தேவன் இரட்சிக்க வல்லவராயிருக்கிறார் என்றும் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யும்படிக்கு கிறிஸ்து எப்பொழுதும் உயிரோடிருக்கிறார் என்றும் சொல்கிறார் (எபிரெயர் 7:15).

தேவன் அப்போஸ்தலனாகிய பவுலைக்கொண்டு, "தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே என்று தெளிவுபடுத்துகிறார் (I தீமோத்தேயு 2:5) மனித இனமாகிய நாம் தேவனிடத்தில் இயேசு கிறிஸ்து மூலமாகத்தான் சேரமுடியும் என்பதை புரிந்து கொள்வது முக்கியமானதாகும். ( யோவான் 14:6). கிறிஸ்து இவ்வுலகத்திற்கு வருவதற்கு முன்பாகவே புத்த மதம், கன்பூசிய தொடங்கப்பட்ட மதங்களெல்லாம் இருந்தன. இரட்சிப்பு அவரைச் சார்ந்திருக்கவில்லையென்றால் கிறிஸ்து எதற்காக இவ்வுலகில் வந்தார்? சமகாலத்தில் பலர் கிறிஸ்துவுக்கு முன்பாக "பரிசுத்தவான்" என்னும் பட்டத்தையும், சபையின் அதிகாரத்தையும் பயன்படுத்துகிறார்கள். பிரசங்கியார்கள் தேவனுடைய வார்த்தையைப் பிரசங்கிக்க வேண்டும். அப்போது தான் பாவிகள் கிறிஸ்துவை கேள்விப்பட்டு அவரை விசுவாசிப்பார்கள் (ரோமர்10:14). பவுல் யார்? அப்பொல்லோ யார்? கர்த்தர் அவனவனுக்கு அருள் அளித்தபடியே நீங்கள் விசுவாசிக்கிறதற்கு ஏதுவாயிருந்த ஊழியக்காரர் தானே (I கொரிந்தியர் 3:5). மேலும், பவுல் தான் கொரிந்தியர்களுக்காக சிலுவையில் அறையப்படவில்லையென்றும், தன் நாமத்தினாலே அவர்கள் ஞானஸ்நானம் பெறவில்லை என்றும் தெளிவுபடுத்தினார். இயேசு புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தராயிருந்து பழைய உடன்படிக்கையினின்று மீட்பை அளிக்க வேண்டியதாயிருந்தது.

அவருடைய மத்தியஸ்தம் அதன் தன்மையில் இருபாகங்களாக பிரிக்கப்பட்டியிருந்தது. அவர் புதிய உடன்படிக்கை அல்லது, புதிய புதிய ஏற்பாட்டுக்கு மத்தியஸ்தராக இருந்தார். அவர் இப்பதவிக்கு அல்லது நிலைக்கு நிரப்பப்பட்டு புதிய ஏற்பாட்டின் கீழ் இருப்பவர்களை மீட்கும்படி அவர் முதலில் மரிக்க வேண்டியதாயிருந்தது. [எபிரெயர் 9:16]. மோசே சீனாய் பர்வதத்திலிருந்து பிரமாணத்தை கீழே ஜனங்களுக்கு கொண்டு வந்தார். தேவ தூதன் சீனாய் பர்வதத்திலே மோசேயோடு பேசியிருக்கிறார். இந்த மோசே வனாந்தரத்திலே சபைக்குள்ளிருந்திருக்கிறார் [ அப்போஸ்தலர் 7:38]. கிறிஸ்து ஜனங்களுக்கு புதிய உடன்படிக்கையைக் கொடுக்கும்படி சிலுவையிலிருந்து இறங்கி வந்தார். தேவன் நம் ஜனங்களிடம் பூர்வகாலங்களில் முற்பிதாக்கள் மூலமாகவும் தீர்க்கதரிசிகள் மூலமாகவும், பிற்பாடு தம்முடைய குமாரன் மூலமாகவும் பேசினார். [ எபிரெயர் 1:1,2].

சில நேரங்களில் நமக்கு "ஏன் ஒரு மத்தியஸ்தர் அவசியம்" என்று கேட்கிறோம். மனிதன் தன்னுடைய பாவத்தினால் தேவனிடமிருந்து பிரிந்து விட்டான். அதற்கான தீர்வாக இயேசு கிறிஸ்தவத்தை அறிமுகப்படுத்தினார். மனிதன் இழந்துபோன காரணத்தினால் அவனை இரட்சிக்கும்படியாகவும், தேவனுடைய அன்பை அவனிடத்தில் வெளிப்படுத்தும்படியாகவும் இப்பூமிக்கு வந்தார் [ ரோமர் 5:8,10]. இயேசு கிறிஸ்து தேவனுக்கும், மனிதனுக்கும் இடையே மத்தியஸ்தராகவும் இருக்கிறார். அவர் பட்சபாதமில்லாமல் நியாயமாக தீர்ப்பு செய்கிறவராயிருக்கிறார். கிறிஸ்து தேவனை நன்றாகப் புரிந்து வைத்திருக்கிறபடியாலும், தேவனோடிருந்து பின்பு பரத்திலிருந்து இறங்கி வந்தபடியாலும் அவர் நியாயாதிபதியாக இருக்கும் முழு தகுதியையும் பெற்றிருக்கிறார். மேலும், இயேசு பாவத்தின் மீதும், மனிதன் மீதும் தேவன் கொண்டிருக்கும் மனப்பான்மையை நன்றாக அறிந்திருக்கிறார். இயேசு இப்பூமியில் வாழ்ந்த நாட்களில் தேவனாகவும், மனிதனாகவும் இருந்தார். எனவே, பிரச்சனைகளை அடையாளங்கண்டு தேவனுக்கும், மனிதனுக்கும், இடையே ஒரு தொடர்டபை ஏற்படுத்த முடியும். கிறிஸ்து மனிதனுக்காக பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார் [I யோவான் 2:1–3].

ஆகவே, நாம் எங்கே தொடங்கினோமோ அங்கேயே முடிப்போம். தேவன் பரிசுத்தராயிருக்கிறார், மனிதன் பரிசுத்தமில்லாதவனாயிருக்கிறான். இந்த உண்மையின் காரணமாக மனிதனால் கிறிஸ்துவின் மூலமாக அல்லாமல் தேவனிடத்தில் கிட்டிச் சேரவே முடியாது [யோவான் 14:6], இயேசு கிறிஸ்து "பாவம் அறியாதவர்." ஆகவே, மனிதனுக்குப் பதிலாக நம்முடைய பிரதான ஆசாரியனாக தேவனிடத்தில் நெருங்குவதற்கு அவர் மாத்திரமே பாத்திரராயிருக்கிறார்

(II கொரிந்தியர் 5:21) இதன் காரணமாகவே நாம் ஜெபிக்கும் போதெல் லாம் இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறோம் என்று முடிக்கிறோம் (யோவான் 16:23). இயேசுவுக்கு வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரமும் கொடுக்கப்பட்டிருக்கிறது ( மத்தேயு 28:18). அந்த அதிகாரத்திற்கு ஒவ் வொருவரும் கீழ்ப்படிய வேண்டும்.

இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும் ( பிலிப்பியர் 2:10) நமக்கும் தேவனுக்கும் இடையே தகவல் பரிமாற்றம் பாவமில்லாத மத்தியஸ்தர் மூலமாக நடைபெறுகிறது. இயேசு தேவனுடைய இம்மானு வேலாக இருக்கிறார். இம்மானுவேல் என்பதற்கு “தேவன் நம்மோடிருக்கிறார்” என்று பொருள் (மத்தேயு 1:23). நாம் தேவனை விசுவாசிப்பதைத் தெரிந்தகொண்டு தேவனுக்கும், மனிதனுக்கும் இடையில் நிற்கும் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள மறுத்தால் நமக்கு எந்த பிரயோஜனமும் இருக்காது. பாவமற்ற ஒரே மத்தியஸ்தராயிருக்கிற இயேசுவை அல்லாமல் நமக்குப் பதிலாக பரமப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுவதற்கு யாருமில்லை. (ரோமர் 8:34)

✝

---

**நம்மை பிரமிக்க வைத்த ஸ்தேவான்**

1. பயமுறுத்தும் கூட்டத்தில் நடுவே எத்தனை வைராக்கியமான முகம்.

2. எந்நிலையிலும் உண்மையை பேசக்கூடிய தைரியம்.

3. கர்த்தர் மீது அவருக்கு எத்தனை அன்பு, எத்தனை விசுவாசம்.

4. சுவிசேஷத்திற்காக, கர்த்தருக்காக மரிப்பதில் எத்தனை சந்தோஷம், எத்தனை சமாதானம்.

5. எதிரே மரணம் என்றாலும் அதை கர்த்தருக்காக ஏற்பதில் எத்தனை உறுதி.

6. உண்மையாகவே ஸ்தேவானின் வைராக்கியமான வாழ்விலும், மரணத்திலும் கிறிஸ்து மகிமைப்பட்டார்.

தேவன்

# அதரிசனமானவரை தரிசித்தல்!

# Seeing Him who is Invisible!

Brian Kenyon

**வே**தாகமம் மோசேயைப் பற்றி வெளிப்படையாகச் சொல்லும் போது '' விசுவாசித்தினாலே அவன் அதரிசனமானவரைத் தரிசிக்கிறது போல உறுதியாயிருந்து, ராஜாவின் கோபத்துக்குப் பயப்படாமல் எகிப்தை விட்டுப் போனான்'' என்று சொல்லுகிறது (எபிரெயர் 11:27). நோவாவைப் பற்றி முன்பாகவே இவ்விதமாகச் சொல்லப்பட்டது. ''விசு வாசத்தினாலே நோவா தற்காலத்திலே காணாதவைகளைக் குறித்து தேவ எச்சரிப்புப் பெற்று பயபக்தியுள்ளவனாகித் தன் குடும்பத்தை இரட் சிப்பதற்குப் பேழையை உண்டு பண்ணினான் ; அதினாலே அவன் உலகம் ஆக்கினைக்குள்ளானதென்று தீர்த்து, விசுவாசத்தினா லுண்டாகும் நீதிக்குச் சுதந்தரவாளியானான்'' (எபிரெயர் 11:7). இவ்விரு மனிதர்களும் எப்படி விசுவாசத்தினாலே நடத்தப்பட்டார் களோ அந்த விசுவாசம் '' நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்ப டாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது (எபிரெயர் 11:1). மேற்சொல் லப்பட்ட மூன்று வசனங்களிலுமே அதரிசனமானதற்கு அதிக அழுத் தம் கொடுக்கப்படுகிறது. இவ்வுலக வாழ்க்கையில் கிறிஸ்தவனாக நிலைத்திருப்பது சற்று கடினமான காரியம் தான். நாம் மோசேயைப் போல பகையுணர்வு நிறைந்த உலகில் அவைகளை எதிர்த்துப் போரா டலாம். அத்தகைய சூழ்நிலைகளை நாம் எதிர்கொண்டாலும், நாம் விசுவாசத்தோடே போராடினால் நிச்சயம் வெற்றி பெறுவோம். தேவனு டைய வழியை நம் குறைவான அறிவினால் சரியாக அல்லது முழுமை யாகப் புரிந்துகொள்ள முடியாவிட்டாலும் கூட, உலகத்தாரால் பரிகாசம் செய்யப்பட்டாலும் கூட நோவா செய்தது போல கர்த்தருடைய எல்லா கட்டளைகளுக்கும் கீழ்ப்படிய வேண்டும். இவ்விரு மனிதர்களைப் போல நாம் எதிர்கொள்ளும் எந்த தடையாக இருந்தாலும் அதைக் கீழ்ப் படிதலினாலும் விசுவாசத்தினாலும் மேற்கொள்ள முடியும். அப்படி மேற்கொள்வதற்கு முக்கியமானது. ''அதரிசனமானவர் மீது கவனத் தைச் செலுத்துவது தான். நாம் தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்கி றோமென்று பவுல் நமக்கு நினைப்பூட்டுகிறார் (II கொரிந்தியர் 5:7).

நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை உன்னைக் கைவிடுவதுமில்லை ; கர்த்தர் எனக்குச் சகாயர் நான் பயப்படேன், மனுவுன் எனக்கு என்னச் செய்வான் " என்னும் வார்த்தைகளில் நாம் ஆறுதலைப் பெறுவோமாக [எபிரெயர் 13:5,6]. நாம் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தையும் தரித்துக்கொள்ள நாம் தைரியம் கொள்வோமாக [எபேசியர் 6:10-18]. நாம் தைரியத்தோடு "கர்த்தருக்குள் நாம் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து, உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும், கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்போமாக [I கொரிந்தியர் 15:58]. இயேசு கிறிஸ்து தம்முடைய சீஷர்களிடம் "என் நாமத்தினிமித்தம் நீங்கள் எல்லாராலும் பகைக்கப்படுவீர்கள் : முடிவு பரியந்தம் நிலைத்திருப்பவனே இரட்சிக்கப்படுவான்" [மத்தேயு 10:22]. நம்மை நாம் காண அதரிசினமான தேவனை நம்புவோம்.

உன் பொன்னான நேரத்தை
என் பாதத்தில் வைத்துவிடு

உன் மண்ணான சரீரத்தை
என் கையில் கொடுத்துவிடு

வேண்டாத வைராக்கியத்தை
தொலைவில் தொலைத்து விடு

மற்றவர்கள் குற்றங்களை
தொலைவில் எறிந்துவிடு

உன்னில் உள்ள குறையை
விரைவில் நீ புரிந்து விடு

தேவன்

# நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து

# Christ Our Life

Vance Tiutton

அப்போஸ்தலனாகிய பவுல் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை **நம்முடைய ஜீவன்** என்று குறிப்பிடுகிறார் [கொலோசெயர் 3:4]. பவுலைப் பொறுத்தவரை கிறிஸ்து அவருடைய ஜீவன் என்று சொல்கிறார் [பிலிப்பியர்1:21]. பவுலுக்குள் கிறிஸ்து வாழ்ந்தார். [கலாத்தியர் 2:20] கிறிஸ்து உங்கள் சரீரத்தில் மகிமைபடுகிறாரா? [பிலிப்பியர் 1:20]. பவுல் பல சந்தர்ப்பங்களில் கிறிஸ்து நமக்குள் இருப்பதின் முக்கியதுவத்தைப்பற்றி எழுதியிருக்கிறார் [கொலோ 1:27; II கொரிந்தியர் 13:5]. கிறிஸ்து நம் ஜீவனாக இருக்கும்போது அதில் உள்ளடங்கிய காரியங்களை நாம் சற்று கவனிப்போம். இந்த காரியங்கள் நம் ஜீவியங்களில் வெளிப்படையாகக் காணப்பட வேண்டும்.

**கர்த்தரைப்பற்றி நினைத்துக்கொண்டும், படித்துக்கொண்டும், தியானித்துக்கொண்டுமிருத்தல்**

நாம் நம் இருதயங்களில் சில காரியங்களை ஆழ்ந்து சிந்தித்துக் கொண்டிருக்கும்படியாக உண்டாக்கப்பட்டிருக்கிறோம். நம் இருதயத்தின் விருப்பமெல்லாம் பரலோகத்தை நோக்கித்தான் இருக்கிறது [ கொலோ 3:1-3]. நாம் நீதியுள்ளவைகளெவைகளோ அவைகளையே சிந்தித்துக் கொண்டிருக்கிறோம் [பிலிப்பியர் 4:8]. சங்கீதக்காரன் இராச்சாமங்களில் தேவனை தியானிப்பதாகச் சொல்கிறார் [சங்கீதம் 63:67]. பவுல் தீமோத்தேயுவுக்கு ஆவிக்குரிய காரியங்களில் தியானமாயிருக்கும்படி அறிவுறுத்துகிறார். [I தீமோத்தேயு 4:15]. தேவனுயை வார்த்தைகளை தியானிக்கும்படி அதிக நேரத்தை நாம் ஒதுக்க வேண்டும். நாம் அந்த பெரெயா பட்டணத்து மக்களைப்போல் அனுதினமும் செய்ய வேண்டும் [அப்போஸ்தலர் 17:11].

**கர்த்தர் என்ன சொல்லியிருக்கிறாரோ அதற்கு கீழ்ப்படிய வேண்டும்.**

கர்த்தருக்கு நம்மீது அதிகாரம் உண்டு [மத்தேயு 28:18 அப்போஸ்தலர் 5: 36].அவருடைய வார்த்தைகள் தான் நம்மைக் கடைசி நாளில் நியாயந்தீர்க்கும் [யோவான் 12:48].நாம் தேவனிடத்தில் அன்புகூருவதென்பது அவருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிவதாயிருக்கிறது [யோவான் 14:15]. தமக்குக் கீழ்ப்படிகிற யாவருக்கும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணமாகிறார் [எபிரெயர் 5:9]. கர்த்தருக்குக் கீழ்ப்படியாதவர்கள், அவருடைய கோபாக்கினைக்கு பங்காளிகளாகிறார்கள் [II தெசலோனிக்கேயர் 1:7-9]. கிறிஸ்து நம்முடைய கர்த்தராக இருக்கும்போது நாம் தேவனுக்கு கீழ்ப்படிய ஜாக்கிரதையாயிருப்போம் [அப்போஸ்தலர் 5: 29].

# ஜெபத்தின் பதில்

## The Answering of Prayer

Betty Burton Choate


நான் பொறுமைக்காக ஜெபித்தேன்
ஆனால், என் வழியில் ஏமாற்றம் வந்தது!

நான் பெலனுக்காக ஜெபித்தேன்
ஆனால், ஒரு நாளுக்குண்டான பாரத்தைக் கூட
என்னால் சுமக்க முடியவில்லை

நான் விசுவாசத்திற்காக ஜெபித்தேன்
ஆனால், அதற்குப் பதிலாக சவால்களை எதிர்கொண்டேன்

பின்பு எனக்குள் ஒரு கேள்வி ஒன்றை கேட்டேன்
பதிலளிக்கப்படாத ஜெபங்களை நான்
சொல்லாமலேயே விட்டிருக்க வேண்டுமோ?
சோர்வடைந்து உற்சாகமிழந்து,
இனியும் என் பிதா எனக்கு பதிலளிக்கமாட்டார் என்று
சந்தேகித்து கண்ணீரில் என் கண்களை மூடினேன்

ஆனால் சூரிய உதயம் என் பார்வையில்
ஒரு தெளிவைக் கொண்டு வந்து நிசப்தமான
இரவின் சந்தேகங்களை எடுத்துச் சென்றது.ஏமாற்றங்கள்
பொறுமையான வளர்ச்சிக்கு வழிவகுத்தன
பாரங்கள் என் பெலனை இரட்டிப்பாக்கின
சாவின் விளிம்பிற்கே என்னைத் தள்ளின
சவால்கள் மூலமாக விசுவாசம் மலர்ந்தது.
எனவே, ஆனந்த கண்ணீருடன் அவருடைய
அக்கறைக்காகவும், என்னை வனைந்த
அவருடைய ஞானத்திற்காகவும் என் ஜெபத்திற்கு
பதிலளித்தமைக்காகவும் நன்றியுடன் தலை வணங்குகிறேன்.



**சாட்சியங்கள்**

# நேரம் என்னும் கேள்வி

# A Question Of " Time "

Rex Banks




ஒவ்வொரு கற்பனை அல்லது கட்டுக்கதைகளிலும் நல்லவர்களுக்கு தோல்வி தடுக்க முடியாததாய் தோன்றும் போதெல்லாம் அந்தகார சக்திகளை தவிடு பொடியாக்கி நீதியை நிலை நாட்ட ஒரு கதாநாயகன் (ஹீரோ) திரையில் தோன்றுவதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். அதேபோல் தான் "பரிணாமம் நிரூபிக்கப்பட்டிருகிறது" என்னும் தலைப்பைக் கொண்ட தற்கால கற்பனைக் கதையிலும் நடந்து வருகிறது. இக்கதையின் உபதலைப்பு "உங்கள் தாத்தா ஒரு வாலில்லா குரங்கு". இவ்வகையான கற்பனைக் கதைகளில் காரணங்கள் தொலைந்து போகும் போதும் ஒருமாற்றம் அடைய வேண்டிய அளவுக்கு அடையாத போதும், வெப்ப இயற்கைவியல் விதிகள் சரியாக வேலை செய்யாத போதும் தீடீரென ஒரு கதாநாயகன் காட்சியில் தோன்றுவார். அக்கதாநாயகனின் பெயர் நேரம் அல்லது "காலம்" என்பதாகும். காலத்தால் ஒரு மந்திரக்காரி மகாராணியை தவளையாக மாற்றுவது போல் ஓர் அமீபாவை மனிதனாக மாற்ற முடியும் என்று சொல்லிக் கொள்கிறார்கள். இந்த பரிணாமக் கொள்கைக்காரர்கள் "இயற்கை கடிகாரங்கள்" தொடர் அழிவு விகிதங்கள் என புதுமையான வார்த்தைகளைப் புகுத்தி இப்பூமிக்கு லட்சக்கணக்கான வயதாகின்றது என்று வாதாடுகிறார்கள். தேவன் தான் இப்பூமியை சிருஷ்டித்தார் என்று விசுவாசிக்கிற முகாமிலும் காலக்கொள்கை என்னும் சத்துருவுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது.

## மக்கள் தொகை வளர்ச்சி

உலக மக்கள் தொகையும், வேதாகம காலக்கிரமமும் என்னும் தலைப்பைக் கொண்ட அவருடைய ஆய்வுக்கட்டுரையில் டாக்டர் ஹென்றி மோரீஸ் என்பவர் இவ்விதமாக யூகிக்கிறார். ஒரு குடும்பத்தில் சராசரி மூன்று பிள்ளைகள் இருந்து மனிதனுடைய ஆயுட்காலம் ஒரு தலைமுறை என்று வைத்துக்கொண்டாலும் 28600 தலைமுறைகளை வைத்து கணக்குப்பார்த்தால் லட்சக்கணக்கான வருடங்கள் மனித இனம் இப்பூமியில் வாழ்ந்திருந்தால் இப்பூமியின் மக்கள் தொகை பல லட்சம் கோடிகளைத் தாண்டியிருக்கும். அது மாத்திரமல்ல,

பூமியெங்கும் ஜனங்கள் நெருக்கப்பட்டு அடைக்கப்பட்டிருப்பார்கள். கொள்ளை நோய், போர்கள் என்று மக்கள் தொகை கடந்த காலங்களில் குறைந்திருந்தாலும் கூட டாக்டர் மோரீஸ் அவர்கள் சொல்லும் போது, மனித இனம் இப்பூமியில் பத்துலட்சம் அல்லது இருபது லட்சம் வருடங்கள் வாழ்ந்திருந்தால் எண்ண முடியாத அளவுக்கு மக்கள் வாழ்ந்து மரித்திருப்பார்கள். ஆனால், தொல்பொருள் ஆராய்ச்சியில் அத்தனை கோடிக்கணக்கான மக்களின் சிதைவுகளை நாம் பார்க்க முடிவதில்லையே என்று சொல்கிறார்.

**அண்டத்தூசி வருகை**


ஒரே மாதிரியான யூகத்தின் தாக்குதலுக்குட்படுத்தப்பட்ட விஞ்ஞானிகள் நிலவில் மனிதன் கால்களை வைப்பதற்கு முன்பு அண்டதூசி ஏராளமாக நிலவில் குவிக்கப்பட்டிருக்கும். அதாவது, 450 கோடி வருடங்களாக அண்டதூசி நிலவில் குவிக்கப்பட்டிருக்கும் என்றும் ஓர் விண்வெளிக்கப்பலே அதில் மூழ்கிவிடும் என்றும் நினைத்தார்கள். வருடந்தோரும் இப்பூமிக்கு சுமார் ஒன்றரைக் கோடி டன் விண் கற்களின் தூசி வருவதாக கணக்கிடப்படுகிறது. இப்பூமியில் அத்தூசிகள் அரித்துக்கொண்டு போகப்படுவதற்கு மார்க்கம் எதுவும் இல்லையென்றால் சுமார் 16.5 மீட்டர் கனமுள்ள தூசிப்படலம் இப்பூமியை மூடியிருக்கும். ஆனால், நிலவின் மேற்பரப்பில் இத்தூசி அரிந்துக் கொண்டு போகப்படுவதற்கு மார்க்கம் எதுவும் இல்லாதபடியால் அது அங்கேயே படிந்துவிடுகிறது. 450 கோடிவருடங்கள் இத்தூசி சேகரிக்கப்பட்டிருந்தால் ஏராளமான அளவில் தூசிகள் குவிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், விண்வெளிக்குப் போகும் செயற்கைக் கோள்கள், விமானங்கள் போன்றவைகளின் கண்டுபிடிப்பின் படி நிலவின் மேற்பரப்பில் 3 mm அளவிலான அண்டதூசிப்படலமே காணப்படுகிறது.

மேலும், விண்கற்களில் ஏராளமான நிக்கல் உலோகம் இருப்பதால் இது பூமியின் வயதைப் பற்றி ஏதோ சொல்கிறது. Harold Slusher என்னும் விஞ்ஞானி சொல்லும்போது, கடல் நீரிலும் கடல் படிமங்களிலும் காணப்படும் நிக்கல் உலோகத்தின் அளவை எடுத்துப் பார்த்து விண்கற்களில் காணப்படும் நிக்கல் எந்த அளவுக்கு கடல் நீரில் சேர்க்கப்படுகிறது என்கிற விகிதாச்சாரத்தை நாம் கணக்கிட்டுப் பார்க்கும் போது நிக்கல் உலோகம் கடல் நீரில் குவிக்கப்பட்ட கால அளவு ஏதோ விஞ்ஞானிகள் உளறுகிற மாதிரி கோடிக்கணக்கான வருடங்கள் அல்ல, சில ஆயிரக்கணக்கான வருடங்கள் என்பது தெளிவாகிறது.

# சங்கீதம் 119

# Psalm 119

Cecil May. JR



சங்கீதம் 119 சங்கீதங்களிலேயே மிக நீண்ட சங்கீதமாகும். சங்கீதம் 119 வேதாகமத்திலேயே நீளமான அதிகாரமாகும். இதன் வரிகளின் முதலெழுத்தை அல்லது இடையெழுத்தை கூட்டுதலால் சொல்லுண்டாகும் பாட்டு வகையைச் சேர்ந்ததாகும். இவ்வதிகாரத்துப் பிரிவுகளின் ஒவ்வொரு வசனமும் எபிரெய முதல் எழுத்துடையதாகும். இது ஒரு மிகப்பெரிய இலக்கிய ஆச்சரியமாகும். இவ்வதிகாரத்திலுள்ள 176 வசனங்களும் தேவனுடைய வார்த்தைக்கு ஒத்த அல்லது இணையான வார்த்தைகளை கொண்டுள்ள்து ஒரு சிறப்பம்சமாகும். வேதம் வசனம் 1, சாட்சிகள் வசனம் 2, வழிகள் வசனம் 3, கட்டளைகள் வசனம் 4, பிரமாணங்கள் வசனம் 5, கற்பனைகள் வசனம் 6, நீதிநியாயங்கள் வசனம் 7, பிரமாணங்கள் வசனம்.

தேவனுடைய வார்த்தை நம் மகிழ்ச்சியும், சந்தோஷமாயிருக்கிறது: திரளான செல்வத்தில் களிகூருவது போல், நான் "உமது சாட்சிகளின் வழியில் களிகூருகிறேன் (வசனம் 14) உமது பிரமாணங்களில் மனமகிழ்ச்சியாயிருக்கிறேன்: உமது வசனத்தை மறவேன்" (வசனம் 16). "உம்முடைய சாட்சிகள் எனக்கு இன்பமும், என் ஆலோசனைக்காரருமாயிருக்கிறது" (வசனம் 24) "அநேகமாயிரம் பொன் வெள்ளியைப் பார்க்கிலும் நீர் விளம்பின வேதமே எனக்கு நலம்" (வசனம் 78). "உமது வேதத்தில் நான் எவ்வளவு பிரியமாயிருக்கிறேன்! நாள் முழுவதும் அது என் தியானம்" (வசனம் 97)

தேவனுடைய வார்த்தை நம்மை பாவத்திலிருந்து விலக்கிக் காக்கிறது. "வாலிபன் தன் வழியை எதினால் சுத்தம் பன்னுவான்? உமது வசனத்தின்படி தன்னைக் காத்துக்

கொள்ளுகிறதினால் தானே" (வசனம் 9). "நான் உமக்கு விரோதமாய் பாவம் செய்யாதபடிக்கு உமது வாக்கை என் இருதயத்தில் வைத்து வைத்தேன்" (வசனம் 11).

தேவனுடைய வார்த்தை நித்தியமானதும் மாறாததுமாயிருக்கிறது: "கர்த்தாவே உமது வசனம் என்றென்றைக்கும் வானங்களில் நிலைத்திருக்கிறது" (வசனம் 89). "உம்முடைய நீதி நித்திய நீதி, உம்முடைய வேதம் சத்தியம்" (வசனம் 142). "உம்முடைய சாட்சிகளின் நீதி என்றைக்கும் நிற்கும்; என்னை உணர்வுள்ளவனாக்கும் அப்பொழுது நான் பிழைத்திருப்பேன்" (வசனம் 144). "உம்முடைய வசனம் சமூலமும் சத்தியமும், உம்முடைய நீதி நியாயமெல்லாம் நித்தியம்" (வசனம் 160).

தேவனுடைய வார்த்தை நம்முடைய உபத்திரவங்களில் உதவுகிறது: அதுவே என் சிறுமையில் எனக்கு ஆறுதல், உம்முடைய வாக்கு என்னை உயிர்ப்பித்தது. "நான் உபத்திரப்படுவதற்கு முன் வழிதப்பி நடந்தேன்; இப்பொழுதோ உம்முடைய வார்த்தையைக் காத்து நடக்கிறேன்" (வசனம் 67). "நான் உபத்திரவப்பட்டது எனக்கு நல்லது; அதினால் உமது பிரமாணங்களைக் கற்றுக் கொள்ளுகிறேன்" (வசனம் 71) "இக்கட்டும் நெருக்கமும் என்னைப் பிடித்தது; ஆனாலும், உம்முடைய கற்பனைகள் என் மனமகிழ்ச்சி" (வசனம் 143).

தேவனுடைய வார்த்தை நம்மை தவறிலிருந்து விலக்கிக் காக்கிறது: "உமது கட்டளைகளினால் உணர்வடைந்தேன். ஆதலால், எல்லாப் பொய் வழிகளையும் வெறுக்கிறேன்" (வசனம் 104). எல்லாவற்றைப் பற்றியும் நீர் அருளின எல்லாக் கட்டளைகளும் செம்மையென்று எண்ணி, சகல பொய்வழிகளையும் வெறுக்கிறேன் (வசனம் 128)

தேவனுடைய வார்த்தை நம்முடைய ஐக்கியத்திற்கான விளக்கத்தைக் கொடுக்கிறது. உமக்குப் பயந்து, உமது கட்டளைகளை கைக்கொள்கிற அனைவருக்கும் (வசனம் 63) "உமக்குப் பயந்து உமது சாட்சிகளை அறிந்திருக்கிறவர்கள் என்னண்டைக்குத் திரும்புவார்களாக" (வசனம் 79).

வெற்றியின் வார்த்தை: "முடிந்தது" (யோவான் 19:30) "முடிந்தது" என்பதற்கான கிரேக்க பதம் "TETELESTAI" என்பதாகும். இப்பதம் புதிய ஏற்பாட்டு காலகட்டங்களில் முழுத் தொகையும் செலுத்தப்பட்டுவிட்டது என்பதை குறிப்பதற்காக வியாபார பத்திரங்களில் பயன்படுத்தப்பட்ட பதமாகும். இயேசு கிறிஸ்து சிலுவையில் நம்முடைய கடன்களை முழுமையாக தீர்த்தார். இயேசு இப்பூமிக்கு தேவனையும் மனிதனையும் ஒப்புரவாக்கும்படி வந்தார். அவர் சிலுவையில் அப்படியாகச்செய்தார்.

உறுதியும் தெளிவுமான வார்த்தை பிதாவே உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன் (லூக்கா 43:46). இயேசு கிறிஸ்து தம்முடைய வேலையை செய்து முடித்தபோது இவர் தம்முடைய ஆவியை பிதாவினிடத்தில் ஒப்புக்கொடுத்தார். இயேசு கிறிஸ்து பரிதாபத்திற்குரியவரல்ல. மாறாக, உயர்வாக எண்ணப்பட வேண்டியவரும், நேசிக்கப்படத் தக்கவருமாயிருக்கிறார், அவர் வெற்றியாளரக இருக்கிறார். இயேசு கிறிஸ்து உங்களுக்காகவும் எனக்காகவும் மரித்தார் என்பதை நாம் ஒருபோதும் மறக்க வேண்டாம்.

✝

---

**சபை அங்கத்தினர்களின் பெறுப்புகள் :**

1. சபை மீது வைராக்கியம் உடையவர்களாயிருக்க வேண்டும். ( யோவான் 2:17)

2. மூப்பர்களுக்குக் கீழ்ப்படிகிறவர்களாய் இருக்க வேண்டும். (எபிரெயர் 13:17)

3. சபைக்கடுத்த பணிகளில் ஒத்துழைப்பு அளிக்கிற வர்களாயிருக்க வேண்டும். (தீத்து 3:1)

4. ஒற்றுமையையும், சமாதானத்தையும் பாதுகாக்கிற வர்களாயிருக்க வேண்டும். (I கொரி 1:10)

5. சபையின் தூய தன்மையை பேணுகிறவர்களாக இருக்க வேண்டும். (எபேசியர் 5:27)

6. சபைக்காக கனிக்கொடுக்கிறவர்களாக இருக்க வேண்டும். ( யோவான் 15:8)

# நம் கோடாரிகளை கூர்மையாக்குதல்

# SHARPENING OUR AXES

DENNY PETRILLO

பிரசங்கி 10:10ல் சாலொமோன் ஞானி ஆயத்தம் சம்மந்தமாக மாபெரும் பாடத்தை கொடுத்திருக்கிறார். மரம் வெட்டுபவர் வலிமைமிக்கவராகவும், சுறுசுறுப்பானவராகவும் இருக்கலாம். ஆனால், அவர் தனக்கு கொடுக்கப்பட்ட வேலைக்காக தன்னைத் தயார்படுத்தவில்லையென்றாரல் அவர் தன் வளங்களை வற்றச் செய்திடுவார். இதிலிருந்து இன்று நமக்கு முக்கியமான பாடம் உள்ளது.

அநேகர் போதுமான ஆயத்தம் இல்லாமல் போதகர்களாயிருக்கிறார்கள். இவர்கள் தாங்கள் சொல்லுகிறது இன்னதென்றும், தாங்கள் சாதிக்கிறது இன்னதென்றும் அறியாதிருந்தும் போதகராயிருக்க விரும்புகிற எபேசு பட்டணத்து மனிதர்களைப் போல் இருக்கிறார்கள் (1தீமோத்தேயு 1:7) தேவனுடைய நித்திய சத்தியங்களை மற்றவர்களுக்கு போதிப்பது ஒரு மனிதனுக்கு அபத்தான காரியமாக இருக்கும். அதன் காரணமாகவே, பவுல் தீமோத்தேயுவுக்கு "உன்னைக்குறித்தும் உபதேசத்தைக் குறித்தும் எச்சரிக்கையாயிரு" என்று எழுதுகிறார் (1தீமோத்தேயு 4:16). யாக்கோபு ஆசிரியரும் கூட என் சகோதரரே, அதிக ஆக்கினையை அடைவோம் என்று அறிந்து உங்களில் அநேகர் போதகராகாதிருப்பீர்களாக என்று எழுதினார் (யாக்கோபு 3:1)

அப்படியென்றால், ஒருவர் தன்னுடைய கோடாரியை கூர்மையாக்க என்ன செய்ய வேண்டும்? முதலில் அவர் உண்மையுள்ளவராகவும், நம்பத்தகுந்தவராகவும் இருக்க வேண்டும் (2 தீமோத்தேயு 2:2). இதன் பொருள் தேவ ஆவியினால் ஏவப்பட்ட வார்த்தைகளை தன் விருப்பப்படி கையாளுகிறவராக இருக்கக்கூடாது. தேவனுடைய வார்த்தை குறைவற்றது, முழுமையானது என்பதைஅவர் அடையாளங்கண்டு அதில் எந்த மாற்றங்களையும் ஒருபோதும் செய்யக்கூடாது. இரண்டாவது, ஒருவர் இரவும் பகலும் தீவிரமாக வேத வாக்கியங்களைப் படிக்கிறவராக இருக்க வேண்டும்.

ஆதேபோல் ஒருவர் வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய் பகுத்துப் போதிக்கிறவனாயும் இருக்கவேண்டும் [2தீமோத்தேயு 2:15]. ஒருவர் சத்திய வார்த்தையை எப்படி சரியாக கையாளவேண்டும்? இரவும் பகலும் தேவனுடைய வார்த்தையை தியானிப்பதன் மூலமாகவும், அதிக நேரம் செலவழித்துப் படிப்பதன் மூலமாகவும் அப்படிச்செய்ய முடியும் [சங்கீதம் 1:2]

நாம் வெற்றி பெற விரும்பினால் நம்மை நாமே ஆயத்தப்படுத்துவோம். சாலொமோன் ஞானி இவ்வசனத்தை “ஒரு காரியத்தை செவ்வையாய்ச் செய்வதற்கு ஞானமே பிரதானம்” என்று முடிக்கிறார். தேவனுடைய வார்த்தையை கையாளுவதில் நாம் சோம்பேறிகளாக செவ்வையாய்ச் செய்வது மிகவும் முக்கியமாகும்.

---


**அமெரிக்க ஐக்கிய தேசத்தின் இருபத்தெட்டாவது ஜனாதிபதி Woodrow Wilson என்பவர் ஒரு சந்தர்ப்பத்தில் இவ்விதமாக சொன்னார். நான் இப்போது வெற்றியடைந்து பின்னால் தோல்வியை தழுவுவதை விட இப்போது தோல்வியடைந்து பின்னால் வெற்றிபெறும் காரனத்திற்காக இப்போது தோல்வியைத் தழுவுவதையே விரும்புகிறேன் என்றார். கிறிஸ்தவர்களும் இன்று நாம் இவ்வுலகில் பாடுகளை அனுபவிக்கலாம் ஆனால், நிச்சயம் ஒரு நாள் பரலோகம் என்ற வெற்றியைப் பெறப்போகிறோம் என்ற காரணத்திற்க்காக இப்போது நாம் பாடுகள் என்னும் தோல்வியை சகித்துக் கொண்டிருக்கிறோம்.**

# ஒற்றுமைக்காக வேதாகமத்திற்கு திரும்புவோம்!

# Back To The Bible For Unity!

Gary C. Hampton

Thomas Campbell என்பவர் அயர்லாந்திலிருந்து ஆரோக்கிய காரணங்களுக்காக அமெரிக்கா தேசத்திற்கு வந்தார். அவர் தன் சொந்த நாடான அயர்லாந்தில் மத உலகில் காணப்பட்ட பிரிவினையைக் கண்டு, கடும் போராட்டத்திற்கு பிறகு வெறுப்புடன் அமெரிக்காவுக்கு பயணப்பட்டார். தாமஸ் அமெரிக்க ஐக்கிய தேசத்தின் பக்தி சூழ்நிலையும் சிறப்பாக இல்லை என்று கண்டுபிடித்தார்.



அமெரிக்காவில் தாமஸ் அன்று வாஷிங்டன் கிறிஸ்தவ சங்கம் அல்லது அமைப்பில் அங்கமானார். அங்கே 1809ல் முதலில் வெளிப்பட்ட அறிக்கையில் தாமஸ் முக்கிய பங்கு வகித்தார். அந்த ஆவணத்தின் ஒரு வாக்கியத்தில் அவருடைய பணியின் தன்மை காட்டப்பட்டிருக்கிறது. அவர் கீழ்கண்டவாறு வேண்டிக்கொண்டார்.

புதிய ஏற்பாட்டின் பரிசுத்த பக்கங்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிற ஒரே காரியத்தை நாமெல்லாரும் பேசவும், அறிவிக்கவும், நடைமுறைப்படுத்தவும் நான் உங்களை வேண்டிக்கொள்கிறேன். தேவ அங்கீகாரம் பெற்ற காரியங்களை எவ்வித கூட்டலும், கழித்தலும் இல்லாமலும் சபையின் நடைமுறையில் எவ்வித தனிப்பட்ட அபிப்பிராயங்களும் புகுத்தப்படாதபடி பார்த்துக்கொள்ள வேண்டும் என்றும் உங்களை நான் வேண்டிக்கொள்கிறேன்.

தாமஸ் ஒற்றுமைக்கு ஆதாரமாக ஏராளமான ஆலோசனைகளை முன் வைத்தார். அதில் இவர் முன்வைத்த ஐந்தாவது கருத்து நம் அதிகாரத்திற்காக வேதாகமத்திற்கு திரும்புவதின் முக்கியத்துவம் வலியுறுத்தப்பட்டது.

சபை சம்மந்தமாக கிறிஸ்தவ ஒழுக்க நெறிகள் சம்மந்தமாக கிறிஸ்து என்னென்ன கட்டளைகளை, சட்டங்களை கொடுத்திருக்கிறாரோ அவைகளே போதுமானது. இயேசுவின் கட்டளைகள் அல்லது, சட்டங்களுக்கு அதிகமாக கூட்டவோ குறைக்கவோ இயேசு கொடுத்த சட்டதிட்டங்களில் குறை உண்டு, எனவே அதை நிவர்த்திசெய்ய வேண்டுமென்று புதிய சட்டங்களை புகுத்துவதற்கு எந்த மனிதனுக்கும் அதிகாரமில்லை. இன்னும் சொல்லப்போனால், சபை சம்மந்தமாக கிறிஸ்து கொடுத்த கட்டளைகளில் குறையுண்டு என்று நினைத்து புதிதாக ஒன்றையும் புகுத்த வேண்டிய அவசியமில்லை, அவர் தந்திருக்கிற கட்டளைகள் அல்லது சட்டங்களை சரியாக பின்பற்றினாலே போதுமானது.

மதப்பிரிவினைகள் அதிகமாக ஏற்படும் காலகட்டங்களில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். நாம் ஒற்றுமையின் முக்கியத்துவத்தை உணர்ந்து, வேதாகமத்திற்கு திரும்புவோம் என்பதற்காக குரல் கொடுப்பவர்களுக்கு நம் ஆதரவுக் கரங்களை நீட்டுவோம். அப்படிச்செய்வதை நாம் புதிய ஏற்பாட்டை நடைமுறைப் படுத்துகிறோம் என்பதற்குபொருத்தமான ஒன்றாயிருக்கும்

✝

நேற்று என்பது கடந்துபோய்விட்டது
நாளை என்பது கைக்கு எட்டாத தூரத்தில் இருக்கிறது
இன்று மட்டுமே நம் கையில் உள்ளது!
செய்யும்படி உன் கைக்கு நேரிடுகிறது எதுவோ,
அதை உன் பெலத்தோடே செய்;
நீ போகிற பாதாளத்திலே செய்கையும் வித்தையும் அறிவும்
ஞானமும் இல்லையே ( பிரசங்கி 9:10)

# ஞானஸ்நானத்திற்கு முன்பாகவே நீங்கள் இரட்சிக்கப்பட்டிருந்தால் ?

## If You Were Saved Before Baptism ?

Alvin Jennings

நாம் கிறிஸ்துவின் கட்டளையாகிய தண்ணீர் ஞானஸ்நானத்திற்கு நம்மை உட்படுத்தாமல் இரட்சிக்கப்படமுடியாது என்பதற்கு வேதாகம நிரூபணம் கீழ்கண்டவாறு இருக்கிறது.

1. உங்கள் பாவங்கள் மன்னிக்கப்படுவதற்கு முன்பாகவே நீங்கள் இரட்சிக்கப்பட்டிருப்பீர்கள். பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவ மன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள் அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தை பெறுவீர்கள் [அப்போஸ்தலர் 2:38]

2. உங்கள் பாவங்கள் கழுவப்படுவதற்கு முன்பாகவே இரட்சிக்கப்பட்டிருப்பீர்கள்: நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத்தொழுதுகெண்டு ஞானஸ்நானம் பெற்று உன் பாவங்கள் போகக் கழுவப்படு என்றான். [அப்போஸ்தலர் 22:16]

3. நீங்கள் மறுபடியும் ஞானஸ்நானத்திற்கு முன்பாகவே இரட்சிக்கப்பட்டிருப்பீர்கள்: “இயேசு பிரதியுத்திரமாக, ஒருவன் ஜலத்தினாலும், ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்ஜியத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்” [யோவான் 3:5]

4. நீங்கள் கிறிஸ்துவோடு இணைக்கப்படுவதற்கு முன்பாகவே இரட்சிக்கப்பட்டிருப்பீர்கள்: ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனை பேரோ, அத்தனை பேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்கள்.[கலாத்தியர் 3:27]

5. நீங்கள் இரட்சிக்கப்படுவதற்கு முன்பாகவே இரட்சிக்கப்பட்டிருப்பீர்கள்: அதற்கு ஒப்பனையான ஞானஸ்நானம் மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல் தேவனைப் பற்றும் நல் மனசாட்சியின் உடன்படிக்கையாயிருந்து இப்பொழுது நம்மையும் இயேசு கிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலினால் இரட்சிக்கிறது [1பேதுரு 3:21]

6. உங்களை இரட்சிப்பதாக கர்த்தர் வாக்குத்தத்தம் செய்கிற நேரத்திற்கு முன்பாகவே நீங்கள் இரட்சிக்கப்பட்டிருப்பீர்கள்: விசுவாசமுள்ளவனாகிய ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான் [மாற்கு 16:16]

7. நீங்கள் பாவத்திலிருந்து விடுதலையாக்கப்படுவதற்கு முன்பாகவே இரட்சிக்கப்பட்டிருப்பீர்கள் : முன்னே நீங்கள் பாவத்திற்கு அடிமைகளாயிருந்தும் இப்பொழுது உங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு நீங்கள் மனப்பூர்வமாய்க் கீழ்படிந்ததினாலே தேவனுக்கு ஸ்தோத்திரம். பாவத்திலிருந்து நீங்கள் விடுதலையாக்கப்பட்டு, நீதிக்கு அடிமைகளானீர்கள் [ரோமர் 6:17,18]

8. நீங்கள் கிறிஸ்துவுக்குள்ளும், அவருடைய இரத்தத்திற்குள்ளும் பிரவேசிப்பதற்கு முன்பாகவே இரட்சிக்கப்பட்டிருப்பீர்கள். அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது [எபேசியர் 1:7]

9. உங்கள் ஆத்துமாக்கள் சுத்தமாவதற்கு முன்பாக நீங்கள் இரட்சிக்கப்பட்டிருப்பீர்கள் : ஆவியினாலே சத்தியத்திற்குக் கீழுப்படிந்து, உங்கள் ஆத்துமாக்களை சுத்தமாக்கி கொண்டவர்களாய் இருக்கிறபடியால் சுத்த இருதயத்தோடே ஒருவரிலொருவர் ஊர்க்கமாய் அன்புகூருங்கள் [1பேதுரு 1:22]


10. நீங்கள் பரிசுத்த ஆவியை பெற்றுக்கொள்வதற்கு முன்னும் கிறிஸ்துவை உடையவராக மாறுவதற்கு முன்னும் இரட்சிக்கப்பட்டிருப்பீர்கள்

11. தேவன் தமக்கு கீழ்ப்படிகிறவர்களுக்கு தந்தருளின ஆவியும் சாட்சி என்றார்கள் [அப்போஸ்தலர் 5:32] கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல [ரோமர் 8:9]

11. உங்கள் விசுவாசத்திற்கு மதிப்பு உண்டாகும் முன்பும், அது அன்பில் வெளிப்படுவதற்கும் முன்பும் இரட்சிக்கப்பட்டிருப்பீர்கள் : அன்பினால் கிரியை செய்கிற விசுவாசமே உதவும் [கலாத்தியர் 5:6]

12. நீங்கள் கீழ்ப்படிவதற்கு முன்பாகவே இரட்சிக்கப்பட்டிருப்பீர்கள் : ஆனால், இயேசு கிறிஸ்து இரட்சிப்பை பெறும் எல்லோருக்கும் கீழ்ப்படிதல் அவசியம் என்று கட்டளையிட்டிருக்கிறார். தாம் பூரணராண பின்பு, தமக்கு கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்க்குக் காரணராகி தேவன் திருவுளம் பற்றினார். ✝

## தேவன் திருவுளம் பற்றியிருக்கிறார்

| பூர்வகாலங்கலில்... | எபிரெயர் 1:1-2 | கடைசி நாள் |
|---|---|---|
| நட்சத்திர ஒளி காலம் | நிலவொளி காலம் | சூரிய ஒளி காலம் |
| முற்பிதாக்களின் காலம் குடும்ப பலிபீடம் மிருக பலி | கூடாரம் - தோவாலயம் மிருகங்களை சுட்டெரித்தல் | கிறிஸ்தவ காலம் |
| 1) ஆதாம்<br>2)நோவா<br>3)ஆபிரகாம் | பழைய உடன்படிக்கை கட்டளைகள் | சபை புதிய உடன்படிக்கை |
| <br> | ஓய்வு நாள் : தண்டனை | கிறிஸ்தவர்கள் வாரத்தின் முதல்நாள் தோறும் ஓடுகிறார்கள் |
| | மத்தேயு 5:17 | கிறிஸ்துவின் சித்தம் நடைமுறையில் உள்ளது. |

முன்பு எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்கு போதனையாக எழுதியிருக்காது (ரோமர் 15:4)

கிறிஸ்தவனாக இருப்பது எப்படி ?

இரட்சிப்பு

## தர்சு பட்டணத்து சவுல் சவாரி செய்த குதிரையின் நிறம் என்ன?

# What Color Was Saul's (OF TARSUS) Horse?

Raymond Elliott



சபையைத் துன்பப்படுத்தின சவுல் என்னும் பேர்கொண்ட ஒரு வேதாகம கதாபாத்திரம் எப்படி மனமாற்றமடைந்தார் என்பதைப் பற்றிய கீழ்க்காணும் வேதாகம கேள்விகளை வேதாகமத்திதல் நாம் காணமுடியும் (அப்போஸ்தலர் 22:4). அப்பேஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் காணப்படும் சில அடிப்படை வசனப்பகுதிகளை நான் உங்களுக்குத் தருகிறேன். இந்த முறையின் மூலமாக என்னுடைய புரிந்து கொள்ளுதல் என்ன என்பதை அறியாமலேயே வேதத்திலிருந்து வசனங்களை நீங்களே வாசித்து காரியங்களை தெரிந்து கொள்ளமுடியும். பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்ட லூக்கா ஆசிரியர் என்ன எழுதினார் என்பதை நீங்களே வாசித்து அறிந்து கொள்ள முடியும்(அப்போஸ்தலர் 1:1 ; லூக்கா 1:4).

**(அப்போஸ்தலர் 9:119 ; 22:116 ; 26:126)**

1) சவுல் எதற்காக தமஸ்குவுக்குச்சென்றார் (அப்போஸ்தலர் 9:1-3 ; 22:4-5)

2) சவுல் தான் கிறிஸ்துவின் சீஷர்களை துன்பப்படுத்தியதன் மூலமாக தேவனுடைய சித்தத்தை செய்ததாக நம்பினார். அதை நல்ல மனசாட்சியோடே செய்ததாக நம்பினார்? (23:1 ;26:9)

3) எதினால் சவுலின் கண்பார்வை போனது? (26:9)

4) சவுல் தமஸ்குவுக்குப்போகும் போது அவருக்கு காட்சியளித்தது யார்? (9:3-5)

5) இந்த அனுபவம் சவுலின் மீது என்ன தாக்கத்தை ஏற்படுத்தியது? (9:4 ; 22:6-7)

6) சவுல் சபையைத் துன்பப்படுத்தினாலும் கூட உண்மையாகவே அவர் யாரை துன்பப்படுத்தினார் (8:4 ; 9:4-5 ; 22:7-8)

7) கர்த்தரிடம் சவுல் என்னென்ன கேள்விகளைக் கேட்டார்? (9:6 ;22:10)

8) எந்தப் பட்டணத்துக்குப் போகும்படி சவுலுக்கு அறிவுறுத்தப்பட்டது? (9:6 ;22:10)

9) சவுல் மூன்று நாட்களாக என்ன செய்து கொண்டிருந்தார்? (9:9,11)

10) கர்த்தர் சவுலுக்கு காட்சியளித்ததற்கான மூன்று அடிப்படை காரணங்கள் என்ன? (22:14-15 ; 26:16-18)

11) சவுலிடம் பேசும்படியாக அனுப்பப்பட்ட சீஷனின் பெயர் என்ன? (9:10)

12) சவுலின் பாவங்கள் போகக் கழுவப்பட அவர் விசுவாசத்தின் எந்த செயல்பாட்டை செய்ய வேண்டியதாயிருந்தது? (அப்போஸ்தலர் 22:16)

13) இன்னுமொரு கேள்வி இதிலிருந்து கேட்கப்படலாம். உண்மையாகவே, சவுல் இந்த கட்டளைக்கு கீழ்ப்படிந்தாரா? (ரோமர்6:1-4) நிச்சயமாகவே இவர் கீழ்ப்படிந்தார்.

ஓ, நான் இன்னும் இக்கட்டுரையில் தலைப்பில் காணப்படும் கேள்விக்கு பதில் அளிக்கவில்லையே. சவுல் சவாரி செய்த குதிரையின் நிறம் என்ன? இது மிகவும் சுவாரசியமான கேள்வி என்பதை நீங்கள் அறிவீர்கள். சவுல் எருசலேமிலிருந்து தமஸ்குவுக்கு போகும் வழியில் குதிரை சவாரி செய்த படங்களையும், காணொளிப் பதிவையும் நான் கண்டிருக்கிறேன். ஆயினும், சவுல் அப்படி குதிரை சவாரி செய்தது பற்றி நமக்கு எந்த வசனமுமே இல்லை. தேவனுடைய பரிசுத்த வார்த்தையைப் படிப்பதற்கு நீங்கள் நேரத்தை ஒதுக்கியதற்கும், விருப்பத்திற்கும் மிக்க நன்றி.

✝

# ஆயத்தமாக இல்லாதவர்கள்

## They Who Are Not Ready...

Bradley Shannon Choate



"... நான் உன்மேல் வரும் வேளையை அறியாதிருப்பாய்" (வெளி 3:3). இவ்வசனம் எதைப்பற்றி பேசுகிறது என்று எப்போதாவது எண்ணியதுண்டா? இது கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைப் பற்றிப் பேசுகிறது. வேதாகமம் இதைப்பற்றி பலமுறை பேசுகிறது. கிறிஸ்துவின் வருகையைப் பற்றி வேறு அநேக வசனப்பகுதிகளும் உண்டு.

**பத்து கன்னிகைகள் (மத்தேயு 25: 113)**

கிறிஸ்து பத்து கன்னிகைகளைப் பற்றி இந்த உவமையை சொன்னார். இவர்களுள் ஐந்து கன்னிகைகள் புத்தியுள்ளவர்கள் ஐந்து பேர் புத்தியில்லாதவர்கள். புத்தியில்லாதவர்கள் தங்கள் தீவட்டிகளை எடுத்துக்கொண்டு போனார்கள், எண்ணெயையோ கூடக்கொண்டு போகவில்லை. ஆனால், புத்தியுள்ள கன்னிகைகள் எண்ணெயையும் கொண்டுபோனார்கள். மணவாளன் வருகிறார் என்ற சத்தம் உண்டான போது புத்தியில்லாத கன்னிகைகள் புத்தியுள்ள கன்னிகைகளைப் பார்த்து "உங்கள் எண்ணெயில் எங்களுக்குக் கொஞ்சம் கொடுங்கள் எங்கள் தீவட்டிகள் அணைந்து போகிறதே" என்றார்கள். ஆனால் புத்தியுள்ள கன்னிகைகளோ "அப்படியல்ல, எங்களுக்கும் உங்களுக்கும் போதாமலிராதபடி, நீங்கள் விற்கிறவர்களிடத்திற்குப் போய், உங்களுக்காக வாங்கிக் கொள்ளுங்கள் என்றார்கள்".

புத்தியில்லாத கன்னிகைகள் எண்ணெயை வாங்கப்போனபோது மணவாளன் வந்துவிட்டார் அப்பொழுது ஆயத்தமாயிருந்தவர்கள் அவரோடு கூட கல்யாண வீட்டுற்குள் பிரவேசித்தார்கள், கதவும் அடைக்கப்பட்டது. புத்தியில்லாத கன்னிகைகள் மணவாளனிடம் வந்து "ஆண்டவரே, ஆண்டவரே எங்களுக்குத் திறக்க வேண்டும்" என்றார்கள் அதற்கு அவர் : உங்களை அறியேன் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

**நோவாவும், ஜலப்பிரளயமும் (ஆதியாகமம் 69)**

மற்றுமொறு உதாரணம் நோவா. இச்சம்பவத்தை நீங்கள் பழைய ஏற்பாட்டில் காணமுடியும் (ஆதியாகமம் 6-9). தேவன் இப்பூமியை சிருஷ்டித்த பிறகு அதைப் பொல்லாததும், கேடுள்ளதுமாகக் கண்டார்.

ஆயினும், ஒரு மனிதன் இருதயத்தில் சுத்தமுள்ளவராக இருந்தார். இந்த மனிதனுடைய பெயர் தான் நோவா. தேவன் இப்பூமியை ஜலத்தினால் அழிக்கத் தீர்மானித்தபடியால் நோவாவை ஒரு பேழையைக் கட்டும்படி கட்டளையிட்டார். நோவா தேவன் கட்டளையிட்டபடியே அப்பேழையைக் கட்டி பூமி அழிக்கப்படப் போவதைக்குறித்து ஜனங்களுக்குப் பிரசங்கம் செய்தார். பலவருடங்கள் கழித்து பேழை கட்டி முடிக்கப்பட்டது. ஆனால், ஒருவர் கூட நோவாவின் சத்தத்திற்கு செவிகொடுக்கவில்லை. இரட்சிக்கப்பட்டதெல்லாம் நோவா, அவருடைய மனைவி மற்றும் அவருடைய குமாரர்கள் சேம், காம், யாப்பேத் மற்றும் அவர்களுடைய மனைவிகளை உள்ளடக்கிய எட்டுபேர் மாத்திரமே.

இப்போது அந்த நாள் வந்தது, நோவாவும் அவருடைய குடும்பமும் பேழைக்குள் பிரவேசித்தார்கள், தேவன் பேழையின் கதவை அடைத்தார். மழைபெய்யத் தொடங்கியது, நாற்பது நாட்கள் இரவும், பகலும் மழைபெய்தது. அப்போதிருந்த உலகமும் அதின் துன்மார்க்கமான மக்களும் அழிக்கப்பட்டார்கள். பேழையில் இருந்தவர்கள் மட்டும் உயிர் தப்பினார்கள். 150 நாட்களுக்குப் பிறகு தண்ணீர் வற்றத்தொடங்கி, அரராத் மலையில் தங்கியது.

அதன் பின்பு தேவன் இப்பூமியை மறுபடியும் ஜலத்தினால் அழிக்க மாட்டேன். மாறாக, அக்கினியால் அழிப்பேன் என்று வாக்களித்தார். இங்கே தேவன் இயேசு இப்பூமியை அழிக்க வரும் நியாயத்தீர்ப்பு நாளைக் குறித்து பேசுகிறார். இயேசுவின் வருகை இரவில் திருடன் வருகிறவிதமாய் இருக்கும் [வெளி 16:15]. அந்த நாளைக் குறித்து பரலோகத்திலிருக்கும் தூதர்களுக்கு கூட தெரியாது [மத்தேயு 24:36].

மத்தேயு 25ல் புத்தியில்லா கன்னிகைகள் மணவாளனை சந்திக்க தாமதமானபோது, அவர்கள் “ஆண்டவரே ஆண்டவரே எங்களுக்கு திறக்க வேண்டும் என்றார்கள்”. ஆனால், கதவு திறக்கப்படவில்லை. மத்தேயு 7:21ல் இயேசு “என்னை நோக்கி கர்த்தாவே, கர்த்தாவே என்று சொல்லுகிறவன் இதில் பிரவேசிப்பதில்லை” என்று சொன்னார். அதே போல்தான் நோவா ஜனங்களுக்கு அநேக ஆண்டுகள் பிரசங்கம் செய்தும் அவர்கள் ஆயத்தமில்லாத காரணத்தால் அவர்களுக்குக் கதவு அடைக்கப்பட்டது.

நியாயத்தீர்ப்பு நாளில் கிறிஸ்து வரும்போது நாமும் ஆயத்தமாயிருக்க வேண்டும். அப்படியில்லையென்றால், நித்திய பரலோகத்திற்கான கதவு என்றென்றும் அடைக்கப்படும்.

தயவுசெய்து உங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி தேவனுடைய வீட்டிற்குள் பிறக்கும்படியாக உங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். நீங்கள் கிறிஸ்தவராயில்லாவிட்டால் அப்படி ஆகும்படி அழைக்கிறோம். ஒன்றான மெய் சபையாகிய கிறிஸ்துவின் சபையைப் பற்றி கற்றுக்கொள்ளுங்கள் [ரோம் 16:16]

# ஞானஸ்நானம் அதன் முறை, என்ன ?

## Baptism, What is it's Mode?

Ben Bailey and Shane Fisher

மத உலகம் ஞானஸ்நானத்தைப் பற்றிய வேதவாக்கியங்களின் தெளிவான போதனைகளின் ஒவ்வொரு நிலையிலும் குழம்பிக் கொள்கிறது. அப்படிப்பட்ட நிலைகளில் ஒன்றுதான் ஞானஸ்நானத்தின் முறை அல்லது விதம் மத உலகை அளவீடு செய்யும் ஒருவரால் மூன்று விதமாக ஞானஸ்நானம் நடைமுறைப்படுத்தப்பட்டதை காணமுடியும். 1) தெளித்தல், 2)ஊற்றுதல், 3)மூழ்குதல். பெரும்பாலும் தெளித்தல் அல்லது ஊற்றுதல் முறையே சரியானது என்று சொல்லிக் கொண்டாலும் பெரும்பான்மையை வைத்து வேதாகமத்தின் காரியங்கள் முடிவு செய்யப்படுவதில்லை. நம் அதிகாரத்திற்கான ஒரே வழிகாட்டி வேதாகமம்தான். (அப்போஸதலர் 17:11;யோவான் 12:48; யாத்திரயாகமம் 23:2; கொலோ 3:17) இங்கே கேள்வி என்னவென்றால், இந்த ஞானஸ்நானம் முறைபற்றி கர்த்தரால் சொல்லப்பட்ட வார்த்தை உண்டோ? என்பதாயிருக்கிறது.

வேத வாக்கியங்களில் ஞானஸ்நானம் என்னும் பதத்தின் பயன்பாடு, ஞானஸ்நானங் கொடுத்தல் என்னும் வார்த்தை, கிரேக்க வார்த்தையான "BAPTIZO" என்னும் வார்த்தையிலிருந்து வந்ததாகும். இவ்வார்த்தை முதன் முதலில் யோவான் 3:23ல் யோவான் ஸ்நானன் ஞானஸ்நானம் கொடுக்கும்போது பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இச்சம்பவத்தை வேதாகமம் இவ்விதமாய் பதிவு செய்கிறது. "சாலீம் ஊருக்குச் சமீபமான அயினோன் என்னும் இடத்திலே தணணீர் மிகுதியாயிருந்தபடியினால், யோவான் அங்கு ஞானஸ்நானம் கொடுத்து வந்தான் ." (யோவான் 3:23). தெளிப்பு ஞானஸ்நானத்திற்கோ அல்லது ஊற்றுதல் ஞானஸ்நானத்திற்கோ மிகுதியான தண்ணீர் அவசியமில்லை. இவ்வசனப்பகுதியை வாசிக்கும் ஒருவர் நேர்மையாக இந்தக் கேள்வியை தனக்குள்ளே கேட்டுக்கொள்ள வேண்டும். மிகுதியான தண்ணீர் இருந்த இடத்தில் யோவான் எதற்காக ஞானஸ்நானம் கொடுக்க வேண்டும்? ஏனென்றால், மனந்திரும்பிய இருதயங்களுடன் வந்தவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்க யோவானுக்கு மிகுதியான தண்ணீர் அவசியப்பட்டது.

இரண்டாம் வசனப்பகுதி: (மாற்கு 1:9 -10) இயேசு கிறிஸ்து யோவானால் ஞானஸ்நானம் பெற்றதைப் பற்றி பேசுகிறது. "அவர் ஜலத்திலிருந்து கரையேறினவுடனே வானம் திறக்கப்பட்டதையும்,

ஆவியானவர் புறாவைப்போல் தம்மேல் இறங்குகிறதையும் கண்டார்" (மாற்கு 1:10) இயேசு, ஜலத்திலிருந்து கரையேறினவுடனே என்று மாற்கு பதிவு செய்கிறார். கேள்வி: தண்ணீரிலிருந்து ஒருவர் வெளியே வரவேண்டுமென்றால் என்ன செய்ய வேண்டும்? முதலாவது ஒருவர் தண்ணீருக்குள் இறங்க வேண்டும். இவ்வசனப்பகுதியிலிருந்து ஒரு காரியம் தெளிவாகிறது. அதாவது, இயேசு முழுக்கு ஞானஸ்நானம் பெற்றார் என்பதுதான் அது. எனவே, ஒருவர் முழுக்கு ஞானஸ்நானம் பெறவேண்டுமென்றால் இயேசுவைப்போல் தண்ணீருக்குள் இறங்கிய பின்பு வெளியே வர வேண்டும்.



மூன்றாம் வசனப்பகுதி: (அப்போஸ்தலர் 8:38) எத்தியோப்பிய மந்திரியின் மன மாற்றத்தைப்பற்றி பேசுகிறது. "அவர்கள் தண்ணீரிலிருந்து கரையேறினபொழுது, கர்த்தருடைய ஆவியானவர் பிலிப்பை கொண்டு போய்விட்டார். மந்திரி அப்புறம் அவனைக் காணாமல் சந்தோஷத்தோடே தன் வழியே போனான்". இங்கே அவசியமான ஞானஸ்நானம் முறை அவர்கள் தண்ணீருக்குள் இறங்கினார்கள் என்று பார்க்கிறோம். இது ஏன் அவசியமாகிறது? இச்சம்பவத்தில் தெளித்தல் அல்லது ஊற்றுதல் முறை பயன்படுத்தப்பட்டிருந்தால் எத்தியோப்பிய மந்திரியோ அல்லது பிலிப்போ தண்ணீரை எடுத்துக்கொண்டு வந்திருப்பார்கள். தண்ணீருக்குள் இறங்கியிருக்க மாட்டார்கள்.

நான்காம் வசனப்பகுதி: (ரோமர் 6:1 -4) மற்றும் (கொலோசெயர் 2:11,12) இவ்வசனப்பகுதியில் ஞானஸ்நானம் அடக்கத்திற்கு ஒப்பனையாக பேசப்பட்டருக்கிறது. அடக்கத்தில் ஒருவருடைய சரீரம் முழுமையாக மூடப்படுகிறது என்பதை எல்லாரும் அறிந்திருக்கிறோம். இயேசுவின் சரீரம் அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பின் புதிய கல்லறையில் வைக்கப்பட்டது என்பதை நினைவில் கொள்ளுங்கள். அதோடு கல்லறை வாசலில் ஒரு பெரிய கல்லைப் புரட்டி வைத்தார்கள் என்பது குறிப்படத்தக்கது (மத்தேயு 27:57-61). இயேசுவின் சரீரம் எல்லா பக்கங்களிலும் மூடப்பட்டிருந்தது. அதே போல ஞானஸ்நானத்தை அடக்கத்தோடு ஒப்பிடுவது அப்போஸ்தலனாகிய பவுல் ஞானஸ்நானமாவது முழுக்கு ஞானஸ்நானமாக அங்கீகரித்திருக்கிறார் என்பதையே தெளிவாக காட்டுகிறது.

ஐந்தாம் வசனப்பகுதி: (மத்தேயு 20:20-28) இவ்வசனப்பகுதியில்

ஞானஸ்நானம் என்னும் வார்த்தை உருவக நடையில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. செபேதெயுவின் குமாரருக்கு இயேசுவின் ராஜ்ஜியத்தின் தன்மையைப் பற்றி தவறான பார்வை இருந்தது. ஆனால், இயேசு அவர்கள் ராஜ்ஜியத்தின் ஆசீர்வாதங்களுக்கு பங்காளிகளாக இருக்க வேண்டுமென்றால் இயேசு அனுபவித்த பாடுகளை அவர்களும் படவேண்டுமென்று சொன்னார். அங்கே இயேசு யோவான் கொடுத்த ஞானஸ்நானத்தை குறிப்பிடவில்லை [மத்தேயு 3:13-17]. ஏனென்றால், யோவானின் மரணம் ஏற்கனவே நடந்துவிட்டது, மரித்தவரால் ஞானஸ்நானம் கொடுக்க முடியாது. இரண்டாவது, அதேவிதமான மொழிநடையை தம்முடைய மரணத்தைக் குறிக்கும் விதத்தில் ஏற்கனவே பயன்படுத்தியிருக்கிறார் [லூக்கா 12:50]. இயேசு தாம் சிலுவையிலறையப்படப் போவதை ஞானஸ்நானத்தோடு ஒப்பிடுகிறபடியால் அவர் சிலுவையில் தொங்கியபோது கடுமையான வேதனைகளுக்கு உட்படுத்தப்பட்டார் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது.

ஆறாவது வசனப்பகுதி: [1கொரி 10:1-4] இவ்வசனப்பகுதி மோசேக்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டதை உருவகமாக பயன்படுத்தியிருக்கிறது. செங்கடலின் வழியாக கடந்து சென்ற இஸ்ரவேலர்களின் வரலாற்றுச் சம்பவத்தை நீங்கள் வாசித்துப் பார்த்தால் [யாத்திரயாகமம் 14:21-31] அவர்கள் சமுத்திரத்தின் இரு பக்கங்களிலும் மூடப்பட்டிருந்தார்கள்.

ஏழாவது வசனப்பகுதி: [1பேதுரு 3:21] இங்கே ஞானஸ்நானம் என்னும் வார்த்தை நோவாவின் நாட்களில் ஏற்பட்ட ஜலப்பிரளயம் ஞானஸ்நானத்திற்கு ஒப்பனையாக பேசப்பட்டிருக்கிறது. நோவா மற்றும் அவருடைய குடும்பத்தின் வரலாற்றுச் சம்பவத்தை படித்துப் பாருங்கள். நாற்பது நாட்கள் இரவும், பகலும் பெய்த மழையின் காரணமாக உலகின் உயர்ந்த மலைகளெல்லாம் மூழ்கிப்போன நிலையில், மிருக ஜீவன்களும், மனிதஇனமும் அழிந்துபோன நிலையில் பேழையிலிருந்து நோவாவின் குடும்பம் மாத்திரம் இரட்சிக்கப்பட்டது.

**முடிவுரை :**

உண்மையாகவே ஞானஸ்நானம் கொடுக்கிற முறை முக்கியமானதா? ஜனங்கள் கேட்கிறார்கள் என்பதற்காக நாம் தெளிப்பு ஞானஸ்நானம் கொடுக்கலாமா? எல்லா ஆதாரங்களையும் நிறுத்துப் பார்க்கும் போது வேதாகமம் முழுக்கு ஞானஸ்நானத்தை பற்றிதான் போதிக்கிறது என்பது தெளிவாகிறது. நாம் தேவனைப் பிரியப்படுத்த வேண்டுமென்றால், உண்மையான ஞானஸ்நான முறையாகிய முழுக்கு ஞானஸ்நானத்தை நாம் நடைமுறைப்படுத்த வேண்டும். ✝

# கர்த்தருடைய சபை இன்னின்ன பெயர்களால் வேதாகமத்தில் விவரிக்கப்பட்டிருக்கிறது

## Terms By Which The Chruch of The Lord is Designated in The Bible

R.C. LUPO

புதிய ஏற்பாட்டில் அதிகமாக பயன்படுத்தப்படும் பதம் சபைதான். அப்: 19:32–ல் புதிய ஏற்பாட்டின் மூல பாஷையாகிய கிரேக்கத்தில் அது கிறிஸ்து கட்டின சபையைக் குறிக்காமல் கோபக்கார கூட்டத்தைக் குறிக்கிறது. அப்போஸ்தலர் 7:38–ல் அது வனாந்திரத்தில் இருந்த இஸ்ரவேலர்களைக் குறிக்கிறது.

“சபை” என்பது ஒரு கூட்ட மக்களைத்தான் குறிக்கிறதே தவிர ஒருபோதும் ஒரு கட்டிடத்தைக் குறிக்காது. அதன் பொருள், அந்தகாரத்தினின்று ஒளியினிடத்திற்கு அழைக்கப்பட்டவர்கள் என்பதாயிருக்கிறது (I பேதுரு 2:9) இப்படிப் பாவ அந்தகாரத்தினின்று ஒளியினிடத்திற்கு அழைக்கப்பட்டவர்களிடத்தில் கீழ்க்காணும் காரியங்கள் கட்டாயமாக காணப்படவேண்டும்.(2 தீமோ 1:8-11)

1) இருளின் அதிகாரத்தினின்று அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தப்படவேண்டும் (கொலோ 1:13) ராஜ்யம் சபையை குறிக்கக்கூடியதாக இருக்கிறது.

2) ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு மனப்பூர்வமாய் கீழ்ப்படியுங்கள் (ரோமர் 6:17) இவ்வகையான மாதிரிதான் (ரோமர்6:1 - 16) வசனங்களில் விவரிக்கப்பட்டிருக்கிறது.

3) ஒருவருடைய கீழ்ப்படிதலின் பேரில்தான் கர்த்தருடைய சபையில் அவர்கள் சேர்க்கப்பட வேண்டும். (அப்போஸ்தலர் 2:38 - 47) மனிதர்களால் ஒருவரும் சபையில் சேர்க்கப்படுவதில்லை.

4) பாவங்கள் கழுவப்பட்டது அல்லது நீக்கப்பட்டது என்கிற உறுதிப்பாடு ஒவ்வொருவருக்கும் ஏற்பட்டு, நம்மை நாமே கர்த்தருக்கு சேவை செய்ய அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும். (ரோமர்6:6 -13)

கிறிஸ்து சபைக்கு தலையாயிருக்கிறபடியால் சபையிலிருந்து நம்மை பிரித்துக்கொள்ளக்கூடாது (கொலோசெயர் 1:18) நாம் சபைக்காக, கிறிஸ்துவுக்காக அவைகளைச் செய்யத் தெரிந்து கொண்டிருக்கிறோம். எவைகளைச் செய்யத் தெரிந்து கொண்டிருக்கிறோம்? (மத்தேயு 25:40, 45; அப்போஸ்தலர் 9:1- 5)

சபை என்பது “என் சபை” என்றும், (மத்தேயு 16:18) கிறிஸ்துவின் சபையார் என்றும் (ரோமர் 16:16) அழைக்கப்பட்டிருக்கிறது. இவ்வார்த்தைகளெல்லாம் கிறிஸ்துதான் சபையின் உரிமையாளர் என்று விவரிக்கின்றன. சபை எந்த ஒரு மனிதனுக்கும் சொந்தமானதல்ல, கிறிஸ்து ஒருவருக்கே சொந்தம். “என் சபை” என்று கர்த்தர் சொன்ன சபையை சிலர் தங்களுடைய சபை என்று சொல்லும்போது அது அவர்களுடைய வேதாகம புரிந்துகொள்ளுதல் இல்லாமையைத்தான் நிரூபிக்கிறது. மேலும், மார்க்கப்பிரிவினைக் **கூட்டத்தார்** சபை என்பதற்கு என்ன விளக்கம் கொடுக்கிறார்களோ அதை மட்டும் இவர்கள் அறிந்திருக்கிறார்கள் என்பதையும் காட்டுகிரது. மனிதர்கள் பல்வேறு சபைகளாக பிரிந்திருக்காமலிருந்தால், பல்வேறுபட்ட பெயர்களால் அழைக்கப்படாதிருந்திருந்தால் நாம் இப்போது ஒரே சபையைப் பற்றித்தான் பேசிக்கொண்டிருப்போம் (I கொரி 1:10)

சபை தேவனுடைய வீடு அல்லது தேவனுடைய குடும்பம் என்று விவரிக்கப்பட்டிருக்கிறது. (I தீமோ 3:15 ; எபேசியர் 2:19 ; 3:15) இதன் பொருள் தேவன் நம் பிதாவாக இருக்கிறார், நாம் அவருடைய பிள்ளைகளாயிருக்கிறோம். நாம் சபை அங்கத்தினர்களுக்கு சகோதர, சகோதரிகளாயிருக்கிறோம் (II கொரி 6:18 ; கலாத்தியர் 3:26 ; ரோமர் 12:9 ; 2 பேதுரு 1:5-7)

சபை கிறிஸ்துவின் சரீரம் என்றும் அழைக்கப்படுகிறது. (கொலோ 1:18,24 ; எபேசியர் 1:10 - 23) இது கிறிஸ்துவின் தலைமைத்துவத்தை வலியுறுத்துகிறது, அங்கத்தினர்கள் கிறிஸ்துவுக்கு கீழ்ப்பட்டிருக்க வேண்டுமென்றும் வலியுறுத்துகிறது (I கொரி 12:12-31) சரீரம் தலைக்கு கட்டளையிட முடியாது. தலைதான் சரீரத்திற்கு கட்டளையிடும். கிறிஸ்துவின் நாமத்தை தரித்திருக்கிறவர்கள், அவருடைய சரீரத்தில் அங்கத்தினர்களாயிருப்பவர்கள் அவரை கனப்படுத்தி அனுதின ஜீவியத்தில் அவரை பிரியப்படுத்துவது அவசியமாயிருக்கிறது (கொலே 3:17 ; 1பேதுரு 4:11-19)

✝

# மீட்டமைப்பின் வரலாறு

## Restoration History


James Vinzant

புதிய ஏற்பாட்டில் இடம்பெற்றுள்ள அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகம் கிறிஸ்துவின் சபையின் ஆரம்பகால வரலாற்றைப் பதிவு செய்துள்ளது. அப்போஸ்தலருடைய நடபடிகள் இரண்டாம் அதிகாரம் பேதுரு பதினொருவரோடுங்கூட நின்று செய்த பிரசங்கமும் அதன் காரணமாக 3000 பேர் ஞானஸ்நானம் பெற்று சபையிலே சேர்க்கப்பட்டதையும் பதிவு செய்திருக்கிறது. இதுதான் "எக்லீசியா", அதாவது அழைக்கப்பட்டவர்களின் கூட்டம் அல்லது சபையின் ஆரம்பமாக இருந்தது. லூக்கா, பவுல், பேதுரு, யோவான், யாக்கோபு மற்றும் யூதாவின் எழுத்துக்களில் அவர்கள் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு முதல் நூற்றாண்டில் சபையின் தொடர்ச்சியான வளர்ச்சியைப் பற்றி பதிவு செய்யப்பட்டிருக்கிற காரியங்கள் இடம் பெற்றிருக்கின்றன [II தீமோத்தேயு 3:16,17].


அதற்குப் பிந்தைய வருடங்களில் வேதவாக்கியங்கள் முன்பே எச்சரித்தபடி சத்தியத்திலிருந்து வழிவிலகுதல் ஏற்பட்டு, கேட்டின் மகனாகிய பாவ மனுஷன் வெளிப்பட்டான். "எவ்விதத்தினாலும் ஒருவனும் உங்களை மோசம் போக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள். ஏனெனில், விசுவாசம துரோகம் முந்திநேரிட்டு, கேட்டின் மகனாகிய பாவ மனுஷன் வெளிப்பட்டாலொழிய, அந்த நாள் வராது. அவன் எதிர்த்து நிற்கிறவனாயும், தேவனென்னப்படுவதெதுவோ, ஆராதிக்கப்படுவதெதுவோ, அவையெல்லாவற்றிற்கும் மேலாகத் தன்னை உயர்த்துகிறவனாயும், தேவனுடைய ஆலயத்தில் தேவன் போல உட்கார்ந்து, தன்னைத்தானே தேவனென்று காண்பிக்கிறவனாயும் இருப்பான் [II தெசலோனிக்கேயர் 2:34]. மேலும், II தெசலோனிக்கேயர் ஏழாம் வசனத்தில் "பவுல்" அக்கிரமத்தின் இரகசியம் இப்பொழுதே கிரியை செய்கிறது; ஆனாலும் தடை செய்கிறவன் நடுவிலிருந்து நீக்கப்படுமுன்னே அது வெளிப்படாது" என்று சொல்கிறார்.

வேத வாக்கியங்களில் வழிவிலகுதலைப்பற்றி முன்னறிவிக்கப்பட்ட காரியங்ளெல்லாம் சபை ஐக்கிய ஆலோசனைச் சங்கம், சபை அமைப்புகள் என்று பல உருவங்களை எடுத்து புதிய ஏற்பாட்டில் அறியப்படாத பல பெயர்களைத் தரித்து மிகப்பெரிய அமைப்புகளாக மாறி, கடைசியாக கி.பி 606ல் உலகளாவிய போப்பைத்

தெரிந்தெடுக்க காரணமாக அமைந்தது. அக்காலக் கட்டத்தில்தான் மார்டின் லூதர், "John Huss" இன்னும் பலர் பக்திப் பிரகாசமான காரியங்களுக்காக நாம் வேதாகமத்திற்கு திரும்பவேண்டுமென்று அழைப்பு விடுத்தனர். வேதாகமத்திலிருந்து வழிவிலகிச் சென்றவர்களுக்கு எதிராக நின்றவர்கள் "Protestants" என்றழைக்கப்பட்டார்கள்.




ஐரேப்பாவின் பல்வேறுப்பட்ட இடங்களிலும், பிற்பாடு அமெரிக்காவிலும் கிறிஸ்தவத்தின் வேர்களுக்கு திரும்பும்படியாக அழைக்கப்பட்டவர்கள் எளிமையான முறையில் சீஷர்கள் அல்லது கிறிஸ்தவர்கள் என்று தான் அழைக்கப்பட்டார்கள் (அப்போஸ்தலர் 11:26). இந்த மீட்டமைப்பு இயக்கம் அமெரிக்க மதவரலாற்று ஆசிரியர்கள் சொன்னதுபோல் அல்லது விவரித்தது போல காட்டுத் தீபோல் பரவியது. ஆயிரக்கணக்கானோர் மார்கப்பிரிவினை பெயர்களையும், கொள்கைகளையும், இணைப்புகளையும் நிராகரித்தார்கள். அந்தக் காலக்கட்டத்தில் அவர்கள் கிறிஸ்தவர்கள் அல்லது சீஷர்கள் என்றுதான் தங்களை அடையாளப்படுத்திக் கொண்டார்கள்.




இச்சம்பவங்களின் சுருக்கம் James Vinzant என்பவரால் பல ஆண்டு படிப்பு மற்றும் ஆராய்ச்சிகளுக்குப் பிறகு தயார் செய்யப்பட்டிருக்கிறது. இவருடைய குடும்பத்தில் பலர் சுவிஷேச பிரசங்கியார்களாக இருந்திருக்கிறர்கள். இவர் கடந்த 200ஆண்டுகால சபை வரலாற்றை மிக ஜக்கிரதையாக ஆராய்ந்து ஆவணப்படுத்தியிருக்கிறார்.

# நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்கள்

**Betty Burton Choate**

சகோதரரே, நீங்கள் என்னோடே கூடப் பின்பற்றுகிறவர்களாகி, நாங்கள் உங்களுக்கு வழிகாட்டுகிறபடி நடக்கிறவர்களை மாதிரியாக நோக்குங்கள். ஏனெனில், அநேகர் வேறுவிதமாய் நடக்கிறார்கள். அவர்கள் கிறிஸ்துவின் சிலுவைக்குப் பகைஞரென்று உங்களுக்கு அநேகந்தரம் சொன்னேன். இப்பொழுது கண்ணீரோடும் சொல்லுகிறேன் அவர்களுடைய முடிவு அழிவு. அவர்களுடைய தேவன் வயிறு, அவர்களுடைய மகிமை அவர்களுடைய இச்சையே, அவர்கள் பூமிக்கடுத்தவைகளைச் சிந்திக்கிறார்கள். நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது. அங்கேயிலிருந்து கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். அவர் எல்லாவற்றையும் தமக்குக் கீழ்ப்படுத்திக்கொள்ளத்தக்க தம்முடைய வல்லமையான செயலின்படியே, நம்முடைய அற்பமான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார். ஆதலால், எனக்குப் பிரியமும் வாஞ்சையுமான சகோதரரே, எனக்குச் சந்தோஷமும் கிரீடமுமானவர்களே, பிரியமானவர்களே, இந்தப்படியே கர்த்தருக்குள் நிலைத்திருங்கள். கர்த்தருக்குள் ஒரே சிந்தையாயிருக்க எயோதியாளுக்கும், சிந்திகேயாளுக்கும் புத்தி சொல்லுகிறேன். [பிலிப்பியர் 3:17– 21 ; 4:1,2].




## செயலில் கிறிஸ்தவம்

# நீங்கள் யாருடையவர்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள் !

## Remember whose You Are!

Curtis D. Burton

என் வாழ்வின் மையக்குவியல் தேவனாக இருக்கிறார். நான் ஒரு தேறின கிறிஸ்தவனென்றோ அல்லது கிறிஸ்தவன் என்பது நான் ஒரு சிறந்த மாதிரி என்றோ சொல்லவில்லை. ஆனால், ஒவ்வொரு நாளும் காலை எழுந்திருக்கும்போது என்னால் முடிந்தவரை தேவனைப் பின்பற்றத் தெரிந்து கொள்வேன்.




எனக்கு வயதாகிவிட்டபடியால் நான் படித்தவரையிலும் ஆராய்ந்த வரையிலும் தேவன் மீதும், வேதாகமத்தின் மீதும், ஒட்டுமொத்தமாக கிறிஸ்தவத்தின் மீதும் அதிகரித்து வரும் தாக்குதல்களை க்கண்டு அதிர்ந்து போயிருக்கிறேன். 60,70களில் நான் பதின் பருவத்தில் இருந்தபோது உலகத்தில் காணப்பட்ட பல பிரச்சனைகளுக்கு தீர்வாக கிறிஸ்தவம் இருந்தது. ஆனால், காலத்தின் அசுரவேகத்தில் இன்றைய நாட்களில் பலரால் கிறிஸ்தவம் தீர்வுக்கு பதிலாக ஒரு பிரச்சனையாக பார்க்கப்படுகிறது. இன்று கிறிஸ்தவர்கள் வெளிப்படையாகவே பரிகாசம் செய்யப்படுகிறார்கள், நிந்திக்கப்படுகிறார்கள், தரக்குறைவாக எண்ணப்படுகிறார்கள். நாம் உலகத்தால் நியாயதிபதிகளாக, சகிப்புதன்மை இல்லாதவர்களாக, வெறுக்கிறவர்களாக பார்க்கப்படுகிறோம்.

அமெரிக்கா செல்வச் செழிப்புமிக்க நாடாக மாறிவிட்டபடியாலும், கற்றவர்கள் அதிகம் இருப்பதாலும் சபையை வழிநடத்துகிறவர்களில் பலரும் கூடவேதாகமம் சொல் அர்த்தரீதியாக உண்மையான தேவனுடைய வார்த்தை அல்ல என்று சொல்லும் அளவுக்கு துணிந்து விட்டார்கள். மேலும், அவர்கள் வேதாகமம் என்பது பழங்காலங்களில் வாழந்து வந்தவர்களால் தங்கள் அதிகாரத்தை தொடர்ந்து பிடித்துக் கொண்டிருப்பதற்காகவும், பெண்களையும், ஏழைகளையும் ஒடுக்குவதற்காகவும் உருவாக்கிய கற்பனை கதை என்றும்அநியாயமாக சொல்லத் தொடங்கி விட்டார்கள்.

மேற்சொல்லப்பட்டவைகளெல்லாம் கடுமையான வாக்கியங்கள் என்று நீங்கள் நினைக்கலாம். ஆனால், சில வருடங்களுக்கு முன்

டெக்சாஸ் மாகாணத்திலுள்ள கிறிஸ்துவின் சபையில் முந்தைய மூப்பர் ஒருவர் என்னிடம் நோவா அப்பேழையில் பூமியிலிருந்த எல்லா மிருகங்களையும் ஒன்று திரட்டி ஏற்றி அவைகளுடன் அவர் ஒரு வருடத்திற்கும் மேலாக வாழ்ந்ததை நம்பாத அளவுக்கு நீ பெரிய ஞானியாகி விட்டாய் என்று சென்னார். ஆனால், இதே மாமனிதர் தான் என்னிடம் ஓரினச்சேர்க்கையில் ஈடுபடுவதில் தவறு எதுவுமில்லை. ஏனென்றால், ஓரினச் சேர்க்கையாளர்கள் அவ்விதமாகவே படைக்கப்பட்டிருக்கிறார்கள் என்று சொன்னார். அவர் என்னைவிட்டு கடந்துசெல்லும் போது கடைசியாக சொன்ன வார்த்தை இன்னும் கொடுமையானது. “யோனாவைப் பற்றிய அந்த மீன் கதை மிகவும் கேலிக்கூத்தானது. உனக்கு நல்ல கல்லூரி கல்வி இருக்கிறது, யோனாவின் கதை ஒரு உண்மை சம்பவம் அல்ல. அவைகளெல்லாம் உதாரணத்திற்காக சொல்லப்பட்டவைகள்தான்” என்று சொன்னார். National Geographic History Channel போன்றவைகளும், இறையியல் கல்லூரியில் பயின்றவர்களும் கூட வேதாகமம் தேவ ஆவியினால் ஏவப்பட்டது என்பதை பரிகாசம் செய்து, வேதாகமம் கதைகளின் தொகுப்பே தவிர மற்றபடி வேறொன்றுமில்லை என்று சொல்கிறார்கள்.

அடுத்ததாக, பரிணாமக்கொள்கை அங்கே வேரூன்றுகிறது. கல்வி கற்ற எந்த ஒரு நபரும் ஜீவராசிகள் பரிணாம வளர்ச்சியில்லாமல் வேறு வழியாய் தோன்றினது என்பதைக் குறித்து வாதாடவே மாட்டார்கள் என்று நன்கு கல்விகற்ற Stephen Hawking போன்றவர்கள் சொன்னது துக்ககரமானது. இது (ரோமர் 1:29-31) வசனங்களை நினைவுப்படுத்துகிறது.

அவர்கள் சகலவித அநியாயத்தினாலும், வேசித் தனத்தினாலும், துரோகத்தினாலும், பொருளாசையினாலும், நிறையப்பட்டு பொறாமையினாலும், வாக்குவாதத்தினாலும், வஞ்சகத்தினாலும், வன்மத்தினாலும் நிறைந்தவர்களுமாய், புறங்கூறுகிறவர்களுமாய், அவதூறு பண்ணுகிறவர்களுமாய் தேவ பகைஞருமாய் துராகிருதம் பண்ணுகிறவர்களுமாய், அகந்தையுள்ளவர்களுமாய், வீம்புக்காரருமாய், பொல்லாதவைகளை யோசித்துப் பிணைக் கிறவர்களுமாய், பெற்றோருக்குக் கீழ்ப்படியாதவர்களுமாய், உணர் வில்லாதவர்களுமாய், உடன்படிக்கைகளை மீறுகிறவர்களுமாய், இணங்காதவர்களுமாய், இரக்கமில்லாதவர்களுமாய் இருக்கிறார்கள்.


நாம் வாழும் உலகில் தேவபக்கியற்ற காரியங்கள் அநியாயமாக அரங்கேறி வருகிறது. இது பலவேளைகளில் நமக்கு மிகுந்த மனச் சோர்வை உண்டாக்குகிறது. தீய சக்திகள் எல்லா நிலைகளிலும் ஆதிக்கம் செலுத்துவதை நம்மால் ஏற்றுக் கொள்ளமுடியவில்லை.

பிசாசு எல்லா ரீதியிலும் வெற்றிபெற்றுக் கொண்டிருப்பதுபோல் தெரிகிறது. இத்தகைய சூழ்நிலையில் தான் நாம் யார் என்பதை நினைவில் கொள்ளவேண்டும் (1பேதுரு 2:9-12) வசனங்கள் இவ்விதமாய் சொல்கிறது.

நீங்கள் உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்கு தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரிய கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்கு சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள். முன்னே நீங்கள் தேவனுடைய ஜனங்களாயிருக்கவில்லை, இப்பொழுதோ அவருடைய ஜனங்களா யிருக்கிறீர்கள்; முன்னே நீங்கள் இரக்கம் பெறாதவர்களாயிருந்தீர்கள் இப்பொழுதோ இரக்கம் பெற்றவர்களாயிருக்கிறீர்கள். பிரியமானவர்களே அந்நியர்களும் பரதேசிகளுமாயிருக்கிற நீங்கள் ஆத்துமாவுக்கு விரோதமாய் போர்செய்கிற மாம்ச இச்சைகளைவிட்டு விலகி புறஜாதிகள் உங்களை நற்கிரியைகளைக் கண்டு அவற்றினிமித்தம் சந்திப்பின் நாளிலே தேவனை மகிமைப்படுத்தும்படி நீங்கள் அவர்களுக்குள்ளே நல்நடக்கையுள்ளவர்களாய் நடந்து கொள்ளுங்கள் என்று உங்களுக்கு புத்திசொல்லுகிறேன்.

அதே அழைப்பு இன்று நமக்கும் விடுக்கப்படுகிறது. நம் தேவனை மகிமைப்படுத்தி அவருக்கு கனத்தைக் கொண்டு வருகிறவர்களாக நாம் ஜீவிக்க முடியும். விசுவாசத்திற்கு எதிரான வாழ்க்கையும் வாழ முடியும். அதன் பொருள் வேதாகமத்திற்காக நாம் பேசுகிறவர்களாக இருக்கவேண்டும், சண்டை பண்ணுகிறவர்களாக அல்ல. அன்புடன் அழிந்துபோகின்ற இவ்வுலகத்திற்கு பரலேகத்தின் தேவன் ஒருவர் இருக்கிறார் அவர் அவரோடுகூட நாம் நித்திய நித்தியமாய் ஜீவிக்கும்படி நம்மில் அன்புகூர்ந்து நமக்காக தம்முடைய ஒரேபேறான குமாரனை ஒப்புக்கொடுத்தார் என்பதை உரக்கச் சொல்ல வேண்டும். எனவே, இன்று உலகத்தில் நீங்கள் அடியெடுத்து வைக்கும் போது இரண்டு காரியங்களை நினைவில் கொள்ளுங்கள். நீங்கள் யார் என்பதை, நீங்கள் யாருடையவர்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

✝




“உலகத்திலும், உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள்; ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை” [I யோவான் 2:15]. மேற்சொல்லப்பட்ட வாக்கியம் தேவ ஆவியினால் ஏவப்பட்டு வெளிப்படுத்தப்பட்ட வார்த்தைகளாகும். “இதன் தாக்கத்தைப் பற்றி நான் சிந்திக்கும்போது உலகக் காரியங்களின் மீதான நம்முடைய அன்பு நம் மனதிற்குள்ளும் அப்படியே நம் ஜீவியங்களுக்குள்ளும் ஊடுருவிச் செல்கிறது என்பதை நம்மால் காணமுடியும்”. உலகம் நம்மீது ஆதிக்கம் செலுத்த அனுமதிக்கும்போது, நம்மை அறியாமலேயே நமக்குப் பிரியமானவர்களை நம்முடைய பாவத்திற்குள்ளேயே வழி நடத்துகிறோம். கிறிஸ்தவர்களாக நாம் உலகத்தை சிநேகிக்காமல், தேவனுடைய உடன் வேலையாட்களாக இருக்கவேண்டும் [I கொரிந்தியர் 3:9]. நாம் நமக்குள்ளேயே “நம் நண்பர்கள் மற்றும் குடும்பத்தினர்கள் மீதான நம் அன்பு எவ்வளவு ஆழமானது?” என்று கேள்வி கேட்டுக் கொள்ள வேண்டும்.

நமக்குப் பிரியமானவர்கள் இவ்வுலகத்தை விட்டுக் கடந்து செல்லும்போது நாம் கண்ணீருடன் தேம்பி தேம்பி அழுகிறோம். நம் தாங்கொண்ணா துயரம் இவ்வுலகில் இனிமேல் அவர்களோடு இருக்க முடியாது என்பதற்காகவா அல்லது அவர்களுடைய ஆத்தமா இழந்துபோய்விட்டது என்பதற்காகவா? இயேசு தம்முடைய நண்பனான லாசரு மரித்தபோது கண்ணீர் விட்டார் என்று வாசிக்கிறோம், ஆனால், அவர் கலங்கித் துயரமடைந்தது அவரை சுற்றிலும் இருந்த மக்களுடைய ஆத்துமாக்களுக்காகத்தான் [யோவான் 11:33-35]. அவருடைய ஆசையெல்லாம் அவர்களெல்லாரும் பிதாவாகிய தேவனிடத்தில் வந்து அவருக்கு கீழ்ப்படிய வேண்டுமென்பதாகவே இருந்தது. பவுலும் கூட “கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது” என்று புத்திமதி சொன்னார் [பிலிப்பியர் 2:5]

ஸ்காட்லாந்து தேசத்தில் மீட்பு இயக்கத்தின்போது John Knox என்பவர் தன் வீட்டிற்கு ஒரு நாள் மாலை வேளையிலே நண்பர்களை அழைத்தார். நண்பர்களை வீட்டிற்குள் விட்டு விட்டு சிறிது நேரம் அவரைக் காணவில்லை, அவருடைய நண்பர்கள் அவரை முழங்காலில் நின்று ஜெபிக்கக் கண்டார்கள். அவர் மிகுந்த வேதனையுடன், "ஓ தேவனே ஸ்காட்லாந்தை கிறிஸ்துவுக்காக தாரும் இல்லையென்றால் நான் சாகிறேன்" என்று கதறினார்.

நமக்குப் பிரியமானவர்களை நாம் போய் சந்திப்பதற்கும், அவர்களுடைய ஆத்துமாக்களுக்காக தேவனிடம் மன்றாடுவதற்கும் எது நம்மைத் தூண்ட வேண்டும்? நாம் கிறிஸ்துவுக்காக ஆத்துமாக்களை ஆதாயம் செய்கிற காரியத்தில் நம்மை ஈடுபடுத்தி பரவசமடைய வேண்டும். நாம் வெறுமனே சபை அங்கத்தினர்களாக இருக்கவேண்டாம். நாம் தேவனுடைய உடன் வேலையாட்களாக இருக்கவேண்டும். நாம் தேவனிடத்தில் ஊக்கமாக "**ஓ தேவனே இந்த சமுதாயத்தை கிறிஸ்துவுக்காக தாரும்**" என்று ஜெபிக்கவேண்டும்.

சமீபகாலங்களில் நான் பிரசங்கிப்பதற்காக சபையாருக்கு முன்புக்கு நான் நிற்கும்போதெல்லாம் காலியான இருக்கைகளை சபையில் பார்த்து கண்ணீர் விடுகிறேன். நான் அந்த இருக்கை அருகே நின்றுகொண்டு பிரசங்கியார் ஒருவர் சென்ன காரியத்தை நினைவுகூருகிறேன். அப்பிரசங்கியார் சபையில் இருக்கைகள் அருகே நின்று கொண்டு சாத்தான் பிரசங்கியாரே, இன்று ஒருவரை இங்கேயிருந்து பிடித்துவிட்டேன் என்று பரிகாசமாக தன்னைப்பார்த்து சிரித்துக்கொண்டு சென்னதாக புலம்பினார். இச்சிந்தனைகளை மனதில் கொண்டவனாகத்தான் கீழ்க்காணும் காரியங்களை எழுதினேன்.

காலியான இருக்கைகளை நான் கீழ் நோக்கிப்பார்க்கும்போது கர்த்தாவே, ஏன் இத்தனை குறைவு? என்று மனதில் நினைப்பேன். சாத்தான் பொய்களினாலும், தீமையான செய்கைகளினாலும் அவர்கள் மனதை கொள்ளை கொண்டு போய்விட்டானோ? அக்கதவினருகே மனித குலம் திரளாக நிற்கிறார்கள் என்று நீர் சொன்னதை நான் அறிவேன். தேவனே அவர்கள் இவ்வாழ்க்கைப் பயணத்தில் பயணிக்கும்போது தேவ சத்தத்திற்கு கீழ்படியாமல் சண்டை சச்சரவுகளில் சிக்கும்போது உம்மால் தெரிந்துகொள்ளப்பட்ட சிலராகிய எங்களை சபையில் காலியான இடங்களை நிரப்பவதற்கு வைத்திருக்கிறீர்.

நம் பிரியமானவர்களுடைய ஆத்துமாக்கள் அழிந்து போவதைக் குறித்து நாம் சிந்திக்கும்போது பிரதான கட்டளை என்னும் கடமைகுறித்து நாம் சிந்திக்கவேண்டும். உலகத்திலும்

உலக்திலுள்ளவைகளிலும் நாம் அன்புகூருவதற்குப் பதிலாக [I யோவான் 2:15]. நாமும், நமக்குப் பிரியமானவர்களும் அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு, தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும் வளருவோமாக [எபேசியர் 4:15].

பரிசுத்தவான்கள் கூடிவரும்போது நம் இருக்கைகளை அலட்சியப்படுத்துவதன் மூலமாக தேவனுடைய பரிசுத்த நாமத்திற்கு நாம் நிந்தையை உண்டாக்கக்கூடாது. ஜீவனுள்ள ஒரே தேவனை நாம் ஆராதிக்கும்போது சபையில் உள்ள காலியான இடங்களை நிரப்பும்படி நாம் நம் நண்பர்களுக்கும், குடும்பத்தாருக்கும், புத்திச்சொல்ல வேண்டும், உற்சாகப்படுத்த வேண்டும்.

✝

## கொடுதலைப்பற்றி வேதாகமம் என்ன சொல்கிறது?

1. விருப்பத்தோடு கொடுத்தவர் – ஆபிரகாம் [ஆதியாகமம் 22 :1 –19]

2. மிகவும் அதிகமாக குறைவிலும் கொடுத்தவர் – ஏழை விதவை [மாற்கு 12:44]

3. கஞ்சத்தனமாகக் கொடுத்தவர் – சவுல் [I சாமுவேல் 15:17– 23]

4. தியாகமாகக் கொடுத்தவர் – தாவீது [II சாமுவேல் 24:24]

5. வஞ்சித்துக் கொடுத்தவர்கள் – அனனியா, சப்பீராள் [அப்போஸ்தலர் 5:1–11]

6. உதாரத்துவமாய்க் கொடுத்தவர்கள் – மக்கெதோனிய நாட்டு கிறிஸ்தவர்கள் [II கொரி 6:1–5;11:8,9]

7. உள்ளதைத் தந்தவர்கள் – பேதுரு, யோவான் [அப்போஸ்தவர் 3:1–10]

8. தானாய் முன்வந்து கொடுத்தவர் – சகேயு [லூக்கா 19:1–9]

9. கபடமில்லாமல் கொடுத்தவர் – நல்ல சமாரியன் [லூக்கா 10:25–37]

10. மிகச்சிறந்ததைக் கொடுத்தவர் – தேவாதி தேவன் [யோவான் 3:16]

# துக்கத்தை சுகமாக்குதல்

## HEALING GRIEF

Sheila Gibson



பெரும்பாலான மனித அனுபவங்கள் எல்லோருக்கும் பொதுவானது. இருந்தபோதிலும் அவைகள் ஒவ்வொருவருக்கும் வித்தியாசமானது. உதாரணமாக, சந்தோஷம், துக்கம், கடைசியாக மரணம் கூட ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமாக அனுபவத்தைக் கொடுக்கும். நாம் எல்லோரும் மரிப்போம். ஆனால், நம்மில் சிலருக்கு, மரிப்பதற்கு முன்பாகவே மரணத்தின் தாக்கம் என்னவென்று தெரியும், அதாவது, நமக்குப் பிரியமானவர்களுடைய மரணத்தினால் நமக்கு ஏற்படும் இழப்பினால் அதை நாம் உணர்ந்துகொள்ள முடியும். அதேபோல், நம்மால் அதிகமாக நேசிக்கப்படும் பலர் அனுதினமும் இவ்வுலகத்திலிருந்து கடந்து போகிறார்கள், இதன்மூலம் மரண வலியை நாம் உணர்ந்து கொள்ள முடியும்.

கடந்த வருடம், நான் என் அழகான, ஆச்சரியமான மகனை இழந்துபோனேன். அவன் அனுபவித்த போராட்டங்களை நாங்கள் காணவில்லை, அவன் ஆபத்தின் விளிம்பில் இருந்தான் என்பதை கூட நாங்கள் உணரவில்லை. தற்கொலையினால் உண்டாகும் வேதனையை நாங்கள் அனுபவிப்போம் என்று நாங்கள் கற்பனை கூடசெய்து பார்க்கவில்லை. பின்வரும் கேள்விகள் எனக்குள் எழுகின்றன:

அவன் ஏன் எங்களிடம் பேசவில்லை? நாங்கள் எதை தவறவிட்டோம்? நாங்கள் எப்படி அவனுக்கு உதவியிருக்க முடியும்? இது ஏன் நடந்தது? ஏன்? ஏன்? ஏன்?

என்னை நம்புங்கள் இது போன்ற கேள்விகள் எழும்புகின்றன, எந்த பதிலும் போதுமானதல்ல. இவைகளுக்கெல்லாம் பதில் தெரிந்தவன் நம்மிடத்தில் இல்லை, நம்மால் அவனை இப்போது தொடர்பு கொள்ள முடியாது. நிச்சியமாக இவ்வுலகில் முடியாது.

நான் துக்கத்தில் இழந்துபோவதும், சோக அலையில் அழிந்துபோவதும் இயல்பான ஒன்றுதான். என் வாழ்வில் இல்லாததுகூட அவன் இருந்தால் எப்படி எல்லாம் உறுதியாக இருக்குமோ அப்படித்தான் இருக்கிறது. அவனுடைய இழப்பு என் வாழ்வில் மிகப் பெரிய வெற்றிடத்தை ஏற்படுத்திவிட்டது.

ஒரு குழந்தையை இழப்பது என்பது ஒரு கொடுமையான அனுபவமாகும். அவன் முப்பது வயதுடையவனாக இருந்தாலும் எங்களுக்கு ஒரு சிறு பிள்ளையாகவே இருந்தான். குழந்தை அல்லாமல் வேறொரு வார்த்தையால் அந்த அனுபவத்தை முழுமைப்படுத்த முடியாது. அது ஒரு வழக்கத்திற்கு மாறன மரணம். பெற்றோர்கள் இவ்வுலகத்தை விட்டு முந்தி கடந்து செல்வார்கள். பெற்றெடுக்கும் பிள்ளைகளை விட அதிக நாட்கள் வாழ்வது சரியானதல்ல.

அவனைப் பற்றிய நினைவுகளோடும் அறிவோடும் வருங்காலத்தை பற்றிய நம்பிக்கையோடும் விடப்பட்டிருக்கிறோன். அவன் சமாதானமாக இருக்கிறான் என்பதை அறிந்து கொள்வதற்காகவும், ஏன் அவனுக்கு இப்படி நடந்தது என்பதை புரிந்து கொள்வதற்காகவும் மறுபடியும் அவனை நான் சந்திப்போன் என்று நம்பிக்கை எனக்கு உண்டு.

நான் அவனிடம் போவேன், ஆனால் அவன் என்னிடம் திரும்பிவர மாட்டான். "அது மரித்திருக்கிற இப்போதும் நான் உபவாசிக்க வேண்டிது என்ன? இனி நான் அதைத் திரும்பிவரப் பண்ணக்கூடுமோ? நான் அதனிடத்துக்கு போவேனே அல்லாமல் அது என்னிடத்துக்குத் திரும்பி வரப்போகிறது இல்லை என்றான்" (2 சாமுவேல் 12:33). அவன் எனக்குத் தாராளமாய் கொடுக்கும் பண்பை என்னிடம் விட்டுச் சென்றிருக்கிறான். அவனுடைய உதாரத் துவத்தினால் நான் ஈர்க்கப் பட்டிருக்கிறேன் அவன் நகைச்சுவை உணர்வுடையவனுமாயும், அநேகரை தன்னிடத்தில் இழுக்கும் ஒளியாகவும் திகழ்ந்தான். அவன் ஆழ்ந்த சிந்தனையாளராகவும், ஆவி, ஆத்துமா போன்ற காரியங்களை மிக எளிதாக பேசக்கூடியவனாகவும் இருந்தான். அவன் போட்டி உணர்வு உடையவனாகவும், கடின உழைப்பாளியாகவும் இருந்தான். அவன் ஐந்து வருடங்கள் ராணுவத்தில் இருந்தான் - ஆனால் எப்போதும் என் இருதயத்தில் இருக்கிறான். அவன் வெளிப்புறமாக கரடுமுரடானவனாக இருந்தாலும் கூட, உட்புறமாக இளகிய மனமுடையவனாக இருந்தான். அவன் என் மகனானகவும், மகிழ்ச்சியாகவும் இருந்தான்

எங்களால் முடிந்தவரை நாங்கள் அவனுக்குச் செய்தோம். இருந்தபோதிலும், நான் நேர்மையானவனாக இருந்தால் அவனிடமிருந்த அருமையான குணாதிசயங்களெல்லாம் பிறப்பிலிருந்தே அவனிடம் இருந்தது, நாங்கள் அவைகளுக்கு உரமிட்டு வளர்த்தோம் அவ்வளவுதான். அவன் எப்போதுமே தனக்கு எது சரியென்று தோன்றியதோ அதையே செய்தான். அவன் எதை விரும்பினானோ அதையே தெரிந்துகொண்டான், மரணத்தைக்கூட.

என் மகன் மரித்தபடியினாலும் நானும் என் புதிய வாழ்க்கையை என் இருதயத்தில் ஓட்டையுடன் என் புதிய வாழ்வை தொடங்கியிருக்கிறபடியினாலும் நான் அதிகமாக கற்றுக் கொண்டிருக்கிறேன்.

கேள்விகள் எதுவாக இருந்தாலும் இறுதியில் அவற்றிற்கான பதில் அன்புதான். தேவன் அன்பாகவே இருக்கிறார்; அன்பில் நிலைத்திருக்கிறவன் தேவனில் நிலைத்திருக்கிறான், தேவனும் அவனில் நிலைத்திருக்கிறார் (2யோவான் 4:16) இறுதியாக, வாழ்க்கைக்கும், வாழ்கையின் சுக துக்கங்களுக்கும் நான் விரும்பும் பதில் இதுதான்.

நான் அலெக்சை நேசிக்கிறேன், நான் அவனை எப்போதுமே நேசிப்பேன். அவனுடைய தெரிந்துகொள்ளுதல் யாரையும் புண்படுத்துவதற்காக இல்லை என்பதை நான் அறிவேன். அது ஒரு சோககரமான செயலாகும். நிச்சயமாகவே, வாழ்க்கையின் இறுதிகட்டத்தில் அவன் உணர்ந்த துக்கத்தை என்னால் சுகப்படுத்த முடியாது. ஆனால், அவன்மீது நான் கொண்டுடிருக்கும் அன்பை மற்றவர்களுடன் பகிரமுடியும். அவனிடமிருந்த உதாரத்துவ குணத்தை நான் மற்றவர்களிடம் பகிரமுடியும்.

எனவே தான், நான் இரத்ததானம் செய்கிறேன் (அவன் செய்தது போல) மற்றவர்களையும் அப்படிசெய்ய உற்சாகப்படுத்துகிறேன். அவனுடைய வாழ்க்கையின் சந்தோஷங்களை நினைவுகூர்ந்து அதைக் கொண்டாடுகிறேன். ஒரு நாள் அதன் இறுதியில் எதைக் கொண்டு வரும் என்பது நமக்குத் தெரியாது. ஆனால், நாம் இவ்வுலகத்திற்கு உப்பாகவும், வெளிச்சமாகவும் இருக்கும்படி அழைக்கப்பட்டிருக்கிறோம். நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்: உப்பானது சாரமற்றுப் போனால், எதினால் சாரமாக்கப்படும்? வெளியே கொட்டப்படுவதற்கும், மனுசரால் மிதிக்கப்படுவாதற்குமே ஒழிய வேறொன்றுக்கும் உதவாது, நீங்கள் உலகத்திற்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள் . மலையின் மேல் இருக்கிற பட்டணம் மறைந்திருக்கமாட்டாது" (மத்தேயு 5:13,14).

நான் நல்லவனாய் இருப்பதற்கும், நல்லதை செய்யவும் தீர்மானித்திருக்கிறோன். “ஆகையால், நமக்குக்கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக, யாவருக்கும் விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும் நன்மை செய்யக்கடவோம்” [கலாத்தியர் 6:10]

நான் பிறனாயிருக்கத் தீர்மானித்திருக்கிறேன். “இப்படியிருக்க கள்ளர் கையில் அகப்பட்டவனுக்கு இந்த மூன்றுபோரில் எவன் பிறனாயிருந்தான்? உனக்கு எப்படித் தோன்றுகிறது என்றார். அதற்கு அவன் அவனுக்கு இரக்கஞ் செய்தவனே என்றான். அப்பொழுது இயேசு அவனை நோக்கி: நீயும் போய் அந்தப்படியே செய் என்றார்” [லூக்கா 10: 36,37]

என் மகன் வாழ்ந்த வாழ்க்கைக்காக நான் எப்பொழுமே நன்றியுள்ளவனாக இருப்பேன். அவன் மரித்திருந்தாலும் கூட இன்னும் என் இதயத்திலும், இவ்வுலகத்திற்கு அப்பாலும் வாழ்ந்துகொண்டுதான் இருக்கிறான். நன்றி உணர்வு நான் ஒவ்வொரு நாளையும் எதிர்கொள்ள உதவுகிறது, என் மகன் வாழ்நாளில் செய்த நன்மைகளை பற்றிக் கொள்ளவும் உதவுகிறது.

நம்முடைய திராணிக்கு மேலாக நாம் சோதிக்கப்படமாட்டோம் என்று நமக்கு சொல்லப்பட்டிருக்கிறது. “மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல், வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார்; உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங் கொடமல், சோதனையைத் தாங்கத் தக்கதாக, சோதனையோடகூட அதற்குத் தப்பிக் கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார்” [1கொரிந்தியர் 10:13]. அலெக்சின் மரணத்தை ஏற்றுக்கொள்வதற்கு கடினமான ஒன்றாக இருந்தாலும் கூட, நான் இன்னும் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறோன். அவன் என் மூலமாகவும் அவனை நேசிப்பவர்கள் மூலமாகவும், இன்னும் என் வாழ்க்கையில் ஒரு பங்கு வகிக்கிறான். அவன் இன்னும் தாக்கத்தை ஏற்படுத்திக் கொண்டுதான் இருக்கிறான். இன்னும் இருதயங்களைத் தொட்டுக் கொண்டு, புன்னகையை தந்து கொண்டுஇருக்கிறான்.

துக்கத்தால் போராடிக் கொண்டிருக்கும் யாவருக்கும் நான் இந்த ஆலோசனையை சொல்வேன்: நீங்கள் யாருக்காக துக்கப்படுகிறீர்களோ அவர்களை நினைவுகூருங்கள். அவருடைய சிறந்தவைகளை நினைத்து, ரசித்து மற்றவர்களிடம் அவர்களைப் பகிருங்கள். அவர்களுடைய சம்பவங்கள் இன்றும் மற்றவர்கள் மீது தாக்கத்தை ஏற்படுத்தும். இப்பொது நீங்கள் தான் மற்றவர்களுக்கு உங்களால் அதிகமாக நேசிக்கப்பட்டவர்களுடைய

சிறந்தைவைகளை எடுத்துச்செல்லும் தூதுவர்களாயிருக்கிறீர்கள். உங்களுக்குப் பிரியமானவர்கள் உங்களோடு இவ்வுலகில் இருந்தமைக்ககவும் அவர்களோடு நீங்கள் அனுபவித்த மகிழ்ச்சிக்காகவும் நன்றியுள்ளவர்களாயிருங்கள். அந்த நினைவுகளும், தருணங்களும், உங்களுடையவைகள் அவைகளை உங்களிடமிருந்து யாராலும் எடுத்துப்போட முடியாது.

இப்போது நான் விரும்பியஅந்த முகத்தைக்காண எதிர் நேக்கிக் கொண்டிருக்கிறேன். இவ்வுலகில் நான் செலவழிக்கும் ஒவ்வொரு நாளும் என்னை அவனிடம் நெருக்கமாக கொண்டு செல்கிறது. எனவே, அவனைக் காண காத்திருக்கிறேன். நான் நகர்த்தும் ஒவ்வொரு நாளிலும் சோகம் இருக்கத்தான் செய்கிறது. நான் துக்கத்திலும் தேற்றப்படுகிறேன் "துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் ஆறுதலடைவார்கள்" (மத்மேயு 5:4)

நீங்கள் துக்கத்தாலும், தேற்றப்படுவீர்கள் "அவருடைய கோபம் ஒரு நிமிஷம் அவருடைய தயவோ நீடிய வாழ்வு. சாயங்காலத்தில் அழுகை தங்கும், விடியற்காலத்திலே களிப்புண்டாக்கும்" (சங்கீதம் 30:5)

நாம் இப்போது இரவில் இருக்கிறோம். ஆனால் விடியல் விரைவில் வரவிருக்கிறது.

அது வரும்போது, மகிழ்ச்சியையும் மீண்டும் கூறுவதையும் நாம் உணர்ந்துகொள்வோம். நம் காயங்கள் ஆற்றப்படும் நம் இருதயங்கள் தேற்றப்படும்.

---

### உங்களுக்குத் தெரியுமா ?

ரோமர் 12:2 கிறிஸ்தவர்கள் இவ்வுலகத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாக வேண்டும் என்று போதிக்கிறது. மறுரூபமாகுங்கள் என்று தமிழில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிற கிரேக்க வார்த்தை " METAMORPHOSIS " என்பதாகும். எப்படி பட்டாம் பூச்சியானது முட்டையிலிருந்து உருமாறி கம்பளிப்பூச்சியாக மாறி, கூட்டுப்புழுவாக மாறி, முதிர்ச்சியடைகிறதோ அதே போல் கிறிஸ்தவர்களும் மறுரூபமாகவேண்டும் அல்லது முழுமையாக மாற வேண்டும். கிறிஸ்தவர்கள் உலகத்தைப் போல் வாழ்வதிலிருந்து முற்றிலுமாக மாறி கிறிஸ்துவைப் போல் வாழ வேண்டும்.

# மகிழ்ச்சியற்ற திருமணங்கள் தேவனுடைய தவறல்ல

## Unhappy Marriages Are Not God's Fault

Clarance Lavenders

திருமணம் என்பது ஒரு மனித ஏற்பாடல்ல, அது தேவனால் கட்டளையிடப்பட்டது (ஆதியாகமம் 2:18,24; எபிரெயர் 13:4). அது உண்மைத் தன்மைக்கான கடமையாயிருக்கிறது. விவாகம் நாம் ஒருவருக்கொருவர் எவ்வளவு உண்மையாயிருக்கிறோம் என்பதைப் பற்றியதாயிருக்கிறது. விவாகம் சட்டப்பூர்வமான உடன்படிக்கையை விட மேலானது. இது ஒருவருக்கொருவர் செய்யும் உடன்படிக்கை யாகவும், தேவனுடனான உடன்படிக்கையாகவும் இருக்கிறது. விவாகம் என்பது ஒருவருக்கொருவர் அவசியப்படும் நிலையில் ஏற்படுத்தப்படும் ஒன்றாயிருக்கிறது. இன்றைய நாட்களில் விவாகத்தில் விரிசல் ஏற்படுவதற்கான காரணங்களுள் ஒன்று ஒருவருக்கொருவர் அவசியம் இல்லை என்னும் உணர்வை இழந்து போனதுதான்.



திருமணம் பந்தத்தில் ஏற்படும் முறிவுகள் வெளிப்படையாகவே தெரிகின்றன. அதாவது, நான்கில் ஒரு திருமணம் விவாகரத்தில் போய் முடிகிறது. உண்மையை சொல்லப்போனால் அமெரிக்க ஐக்கிய தேசத்தில் கொடுக்கப்படும் விவாக ரத்துக்கள் ஒட்டுமொத்த உலகில் கொடுக்கப்படும் விவாகரத்துக்களை விட அதிகாமா யிருக்கிறது. மீதமுள்ள நான்கில் இரண்டு திருமணங்கள் உணர்வுப்பூர்வமாக உடைந்துபோன நிலையில் தான் காணப்படுகிறது. நான்கில் ஒரு திருமணம் தான் மகிழ்ச்சியோடு இருக்கிறது.

ஒரு வெற்றியுள்ள விவாகத்திற்கு விரோதமாக அநேக சவால்கள் இருக்கிறபடியால் முறிந்துபோன திருமணங்களின் அறிகுறிகளை அறிந்துகொள்வது நமக்கு நன்மை பயக்கும். இதோ சில அறிகுறிகள்: 1) குடும்ப அங்கத்தினர்கள் மற்றும் செயல்பாடுகளில் விருப்பமில்லாமை. 2) வீடு மற்றும் தனிப்பட்ட உடைமைகளைக் குறித்த அக்கறையின்மை. 3) குடும்பத்தை விட்டு விலகி செல்லும்

உணர்வு. 4) நாள்பட்ட, தீராத சண்டை சச்சரவுகள். 5) வழக்கமான செயல்பாட்டு அளவை விட குறைவான செயல்பாடு. 6) வீட்டிலும், பிற இடங்களிலும் ஒருவருக்கொருவர் கொள்ள வேண்டிய உறவில் குறைபாடு. 7) தற்பாதுகாப்பு மற்றும் அதீத பாதுகாப்பு. 8) நடத்தையில் குறிப்பிட்ட மாற்றங்கள். 9) பிறர் நடத்தையில் தேவைக்கதிகமான சந்தேகம். 10) உணர்வுகள் மீது குறைவான கட்டுப்பாடு. 11) நாள்பட்ட மனச்சோர்வு. 12) நடத்தையில் மித மிஞ்சிய நிலை. 13) சூழ்நிலைகளை அதிகப் பிரசங்கித்தனமாக கையாள்வது. 14) மாறுபாடும், குழப்பமுமான தகவல் பரிமாற்றங்கள்


தேவன் நமக்கு திருமணத்திற்கான வழிமுறைகளைக் கொடுத்திருக்கிறார். அதன்படி நாம் பின்பற்றினால் திருமண பந்தங்கள் பெலப்படுத்தப்படும், அவைகளில் சில: (1) திருமணத்தை ஒரு கூட்டாண்மையாக மாற்றுதல் (ஆதியாகமம் 2:18), (2) ஒருவருக்கொருவர் அக்கறை கொள்ளவேண்டும் (பிலிப்பியர் 2:4), (3) தன்னலமற்றவர்களாய் இருக்க வேண்டும் (I கொரி 13:5), (4) குடும்ப உறுப்பினர்களிடையே எரிச்சல் கூடாது (நீதிமொழிகள் 6:34), (5) சகிப்புத் தன்மையுடன் வாழவேண்டும் (மத்தேயு 7:3), (6) மனமகிழ்ச்சியுடனும், முகமகிழ்ச்சியுடனும் இருக்கவேண்டும் (நீதிமொழிகள் 15:13), (7) ஒரு காரியத்துக்கு பதிலளிப்பதற்கு முன்பாக அதை முழுமையாக கேட்கவேண்டும் (நீதிமொழிகள் 18:13), (8) ஏற்ற அல்லது பொருத்தமான வார்த்தைகளைப் பேசவேண்டும் (நீதிமொழிகள் 25:11), (9) ஒருவருக்கொருவர் மன்னிக்கிறவர்களாக இருக்க வேண்டும் (கொலோசெயர் 3:13).

எனவே, மகிழ்ச்சியற்ற திருமணங்கள் என்பது தேவனுடைய தவறல்ல. நாம் மகிழ்ச்சியாக வாழ்வதற்கான வழிமுறைகளை அவர் தந்திருக்கிறார். தேவன் தம்முடைய வாக்குத்தத்தங்களில் ஒருபோதும் தவறுவதில்லை, ஜனங்கள் தான் தவறிழைக்கிறார்கள், தவறி விழுகிறார்கள்.

✝

# சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வர தடைபண்ணாதிருங்கள்
# Forbid Not The Little Children

DEAN KELLY



அப்பொழுது, சிறு பிள்ளைகளின்மேல் அவர் கைகளை வைத்து ஜெபம்பண்ணும்படிக்கு அவர்களை அவரிடத்தில் கொண்டு வந்தார்கள்; கொண்டு வந்தவர்களை சீஷர்கள் அதட்டினார்கள். இயேசுவோ: சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள்: அவர்களைத் தடைபண்ணாதிருங்கள். பரலோக ராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது என்று சொன்னார். (மத்தேயு 19: 13, 14). நாங்கள் அமெரிக்காவிலுள்ள Highland என்னும் இடத்திலுள்ள ஒரு வீட்டுக்கு பத்துவருடங்களுக்கு முன்பாக குடியிருக்கச் சென்றபோது, எங்கள் இளைய குமாரனுக்கு 11 வயதாயிருந்தது. அங்குள்ள சபையில் குழந்தைகள் குறைவான எண்ணிக்கையில் இருந்தார்கள். "ஆனால், சிறு பிள்ளைகள் யாருமில்லை. இப்போது எங்கள் ஞாயிறு இரவு ஆராதனை மற்றும் புதன்கிழமை இரவு வேத வகுப்புக்கு பல குழந்தைகள் வருகிறார்கள். எங்கள் வகுப்புகள் வயது வாரியாக பிரிக்கப்படுகிறது. மிகப்பெரிய சபையிலிருந்து வருபவர்களுக்கு எங்கள் 50 என்னும் குழந்தைகளின் எண்ணிக்கை பெரிதாகத் தெரியாது. ஆனால், எங்களைப் பொறுத்தவரை இது நல்ல எண்ணிக்கைதான். எங்களிடத்தில் 9 மாதத்திலிருந்து 4 வயதுடைய குழந்தைகள் அதிகமாய் இருக்கிறார்கள். அதேபோல் 4 வயதிலிருந்து 10,11 வயதுடைய குழந்தைகள் கணிசமான எண்ணிக்கையில் உள்ளனர். இக்குழந்தைகள் வளர்வதைக் காண பரவசமாயிருக்கிறது".

சில வேளைகளில் சில குழந்தைகள் சிறிய அளவில் சத்தம் போடுகிறர்கள். ஒரு ஞாயிற்றுக்கிழமை 18 மாதத்திற்கு குறைவான சில பையன்கள் நல்ல நிலைமையில் இல்லை. அதை அவர்கள் எல்லோருக்கும் தெரியப்படுத்தினார்கள். ஒரு தாய் எங்களிடம் வந்து உங்கள் பிள்ளைகள் உங்களை விட இன்று நன்றாக பிரசங்கம் செய்தார்கள் என்று சென்னார்! கடந்த ஞாயிற்றுக்கிழமை சபையில் உள்ள சிறுபிள்ளைகளுள் ஒரு பெண் அவள் தாய் கொடுத்த 25

சென்ட்களை (அமெரிக்க நாணயத்தை) காணிக்கைத் தட்டில் இட்டாள். அவள் நல்ல சுருண்ட முடியுடைய அழகான பெண்ணாக இருந்தாள். அவளுடைய வயது எனக்குத் தெரியவில்லை ஆனால், அவள் நடக்க கற்றுக்கொண்டிருந்தாள். காணிக்கைத்தட்டு அவளுக்கு முன்பாக நீட்டப்பட்டபோது அவள் அந்த காசைப் போட்டுவிட்டு உரத்த சத்தமாக எனக்கு இந்த பைசா வேண்டும் என்று சொன்னாள். எல்லோரும் வயிறு குலுங்க சிரித்தார்கள். சபையில் உள்ள பெரியவர்களுக்கும் பெட்டியில் போட்ட காணிக்கையை திரும்ப வேண்டும் என்ற மனநிலைதான் இருக்கிறது. ஆனால், அதை நேர்மையான மனதோடு ஒத்துக்கொள்ள மாட்டார்கள் அல்லது காணிக்கையே கொடுக்கமாட்டார்கள். சில வேளைகளில் சிலர் என்னிடத்தில் வந்து சிறுபிள்ளைகள் கூச்சலிடும் போதோ அல்லது நகைச்சுவையாக எதையாவது செய்யும்போதோ அது உங்களை தொந்தரவு செய்யுமா? என்று கேட்பார்கள். அவர்களுக்கான என்னுடைய பதில் எனக்கு எந்தத் தொந்தரவுமில்லை என்பதாயிருக்கும். அது ஏன் என்பதற்கான சில காரணங்கள் இதோ:

1. குழந்தைகளைவிட நான் நன்றாக பிரசங்கிக்காவிட்டல் பிரசங்கத்தை விட்டுவிடுவது சிறந்ததாயிருக்கும் எ ன்று எப்போதுமே சொல்வேன். சிறு பிள்ளைகள் சபையில் கூச்சலிடுவதால் அதை ஒரு பெரிய விஷயமாக எடுத்துப் பிரச்சனை பண்ணுகிற நபர் நான் அல்ல.

2. சபையில் சிறு பிள்ளைகள் சத்தமிடும்போது சபையில் அவர்களுடைய பங்களிப்பு இருக்கிறது என்றும், சபை கூடிவருவதின் முக்கியத்துவத்தில் விசுவாசம் உள்ள பெற்றோர்கள் அங்கே இருக்கிறார்கள் என்றும் பொருள்படும். சிறுபிள்ளைகளின் கீச்சென்ற ஒவ்வொரு சப்தமும், சிரிப்பு அவர்கள் பிறந்த முதல் நாளிலிருந்தே அவர்களுக்கு போதிக்க வேண்டும் என்பதை உணர்த்துகிறது. அச்சிறிய கீச்சென்ற சத்தம் பின்பு மொழியாக உருவெடுக்கும், சிறுபிள்ளைகளும் அவர்கள் பிறந்ததிலிருந்தே தேவனுடைய வார்த்தை படிப்பதற்கென்றும், அவரை ஆராதிப்பதற்கென்றும் சபைகூடி வர வேண்டும் என்று போதிக்கப்பட்டு பெரியவர்களாக வளர்வார்கள்.

3. அவ்வப்போது ஒரு தாய் இவ்விதமாகச் சொல்வார்கள். நான் சில மாதங்களாகவே நல்ல பிரசங்கத்தைக் கேட்கவில்லை, அது எங்களுக்கு கவலையை அளிக்கிறது. நீங்கள் சிறு பிள்ளைகளின் சினுங்கல்கள் மற்றும் குறும்புகள் மற்றும் கீச்சென்ற சத்தம் போன்றவைகளிலிருந்து கற்றுக்கொள்ளும் காரியங்கள் சரியாக சிந்திப்பவர்களின் மரியாதையை உங்களுக்குப் பெற்றுத்தரும்.மேலும், இது ஒரு குழந்தை வளரும்போது ஆராதனையின் அர்த்தத்தை அது அறிந்துகொள்ளும். அதேபோல் குழந்தைகள் நமக்கு கற்றுத்தரும்

பாடங்களினால் உந்தப்பட்டு நாம் செய்யும் பிரசங்கங்கள் இழந்துபோன ஆத்துமாக்களை இரட்சிக்கும்.

4. இளம் பெற்றோர் மீது தேவனுடைய ஆசீர்வாதங்கள் வருஷிக்கப்படவேண்டுமென்று நான் விண்ணப்பிக்கிறேன். ஒவ்வொரு நாளும் நீங்கள் உங்கள் குழந்தையின் வருங்காலத்தின் மீது தாக்கத்தை ஏற்படுத்தும் தீர்மானங்களை எடுப்பீர்கள் என்று எனக்குத் தெரியும். உங்கள் பிள்ளைகள் தேவனுக்கு சேவை செய்ய அவர்களை கட்டி எழுப்பும் காரியங்களைச் செய்யும்போது உங்களை சோர்விழக்கச் செய்ய யாரையும் அனுமதிக்க வேண்டாம். சிறுபிள்ளைகளை நீங்கள் ஆராதனைக்கு அழைத்து வருவதினால் அதைக் குறித்து ஒருபோதும் வருத்தப்படமாட்டீர்கள். அது மாத்திரமல்ல, என் பிள்ளைகள் என் கைமீறி போய்விட்டார்கள் என்று சொல்லும் சூழ்நிலை ஒருபோதும் ஏற்படாது. நாங்கள் உங்களை நேசிக்கிறோம், உங்களுக்காக ஜெபிக்கிறோம் அதே நேரத்தில் குழந்தைகளை வளர்க்கும் முக்கியமான அருமையான காரியத்தில் உங்களை உற்சாகப்படுத்த விரும்புகிறோம்.

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை சபைக்குக் கூட்டி வருவதிலும், வேதபாட வகுப்பிலும் இன்னும் இதர ஆவிக்குரிய காரியங்களிலும் ஈடுபட ஊக்கப்படுத்தும்படி நாங்கள் பெற்றோர்களை உற்சாகப்படுத்துகிறோம். நாம் எல்லோரும் இயேசு கிறிஸ்துவைப் போல சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருவதற்கு இடங் கொடுங்கள்: அவர்களை தடை பண்ணாதிருங்கள் என்று சொல்வோமாக. சிறு பிள்ளைகள் நாம் தேவனிடத்திலுருந்து பெற்றுக்கொண்ட ஆசீர்வாதமாகவும், சுதந்திரமாகவும் இருக்கிறார்கள் ✝

சபை அங்கத்துவம் என்பது அந்நாட்களில் சபை பதிவேட்டில் இடம்பெற்ற ஒன்றாக இருக்கவில்லை. மாறாக, அது ஒவ்வொருவரும் மற்றவர்களுக்கு உதவும் அலாதி அனுபவமாக இருந்தது. அந்த அனுபவத்தை நாம் இன்று பெற்றிருக்கிறோமா?

## கிறிஸ்தவ இல்லம்

# ஒரு நபரா அல்லது வெறுமனே ஒரு பாகமா ?
# A Person or Just a Part ?

Victor M. Eskew

**பொ**துவாக, கருக்கலைப்பு பிரச்சனையானது கருவில் இருக்கும் சிசு உயிரோடிருக்கும் நபரா அல்லது வெறுமனே தாயின் ஒரு பாகமா ? என்பதை மையாமாகக் கொண்டே சுழன்று வருகிறது. அது ஒரு நபராக இருந்தால் கருக்கலைப்பு செய்வது சிசுக் கொலையாகும். ஆனால், அது தாயின் ஒரு பகுதியாக இருந்தால், கருக்கலைப்பு என்பது ஒரு செயல்முறைதான். மேற்சொல்லப்பட்ட இரு கருத்துக்களுக்கிடையே மிகப்பெரிய இடைவெளி காணப்படுகிறது.

கேள்விகள் :

- ★ சரீரத்தின் ஒரு பாகம் ஒரு முழு மனிதனைப் போலிருக்குமா ?
- ★ சரீரத்தின் ஒரு பாகத்திற்கு இருதயம் இருக்கிறதா?
- ★ சரீரத்தின் ஒரு பாகத்திற்கு மூளை இருக்கிறதா ?
- ★ சரீரத்தின் ஒரு பாகத்திற்கு சிறிய முகம் இருக்கிறதா?
- ★ சரீரத்தின் ஒரு பாகம் அது நீக்கபட்டப்பிறகும் வாழ்கிறதா?
- ★ சரீரத்தின் ஒரு பாகத்திற்கு ஆத்துமா இருக்கிறதா?
- ★ சரீரத்தின் ஒரு பாகத்திற்கு ஆவி இருக்கிறதா?
- ★ சரீரத்தின் ஒரு பாகம் தாயின் கர்ப்பப் பையில் இருக்கும் போதே எட்டி உதைக்கிறதா?
- ★ சரீரத்தின் ஒரு பாகம் கரு வளர்ச்சிப் பரிசோதனையின் போது மனித உருவத்தை பிரதிபலிக்கிறதா?
- ★ சரீரத்தின் ஒரு பாகம் "அம்மா" என்று கதறுகிறதா?
- ★ சரீரத்தின் ஒரு பாகம் சரீரத்தை விட்டு வெளியே வந்து தாயின் கையைப்பிடித்துச் செல்கிறதா?
- ★ சரீரத்தின் ஒரு பாகத்திற்காகவா லட்சக்கணக்கான மக்கள் அதன் வாழ்வுரிமைக்காக போராடிக் கொண்டிருக்கிறார்கள் ?

மேற்காணும் கேள்விகளுக்கு யார் நேர்மையாக பதில் அளித்து விட்டு கருக்கலைப்பு மூலமாக தாயின் கர்ப்பப் பையிலிருந்து அகற்றப் படும் ஒரு சிசு (குழந்தை) சரீரத்தின் ஒரு பகுதிதான் என்று சொல்ல முடியும் ? இது ஒரு பச்சைப் பொய் என்பது எல்லாருக்கும் தெரியும் !

கர்ப்ப பையில் இருக்கும் ஒரு குழந்தை எப்படி ஒரு கழுகு குஞ்சு முட்டையில் இருக்கும் போதே கழுகாகத்தான் இருக்கிறதோ அதேப் போல் குழந்தையாகத்தான் இருக்கிறது. இருந்தபோதிலும், நாம் கழுகு முட்டைகளைப் பாதுகாக்க ஒரு சட்டத்தையும், சிறு பிள்ளைகளை கொலை செய்ய அனுமதிப்பதற்கு மற்றொரு சட்டத்தையும் இயற்றுகிறோம். இச்சட்டங்களை இயற்றுகின்ற நம்மால் தெரிந்து கொள்ளப்பட்ட அரசு அதிகாரிகளும், இச்சட்டத்தை ஆதரிக்கிறவர்களும் வெட்கப்பட வேண்டும். கருக்கலைப்பில் ஈடுபட்டு சிறு பிள்ளைகளைக் கொலைசெய்கின்ற மருத்துவர்களும் செவிலியர்களும் வெட்கப்பட வேண்டும். தன் கருவைக் கலைக்கின்ற எந்த ஒரு தாயும் வெட்கப்பட வேண்டும்.

நாம் குழப்பமடைந்த பொல்லாத தேசமாக இருக்கிறோம். நாம் இந்த தேசிய அவமானத்திலிருந்து மனந்திரும்பி வயிற்றில் வளரும் பச்சிளங்குழந்தைகளின் வாழ்வுரிமைக்காக போராட வேண்டும்.

நான் பிரமிக்கத்தக்க அதிசயமாய் உண்டாக்கப்பட்டபடியால், உம்மைத் துதிப்பேன். உமது கிரியைகள் அதிசயமானவைகள், அது என் ஆத்துமாவுக்கு நன்றாய்த் தெரியும். நான் ஒளிப்பிடத்திலே உண்டாக்கப்பட்டு, பூமியின் தாழ்விடங்களிலே விசித்திர விநோதமாய் உருவாக்கப்பட்டபோது, என் எலும்புகள் உமக்கு மறைவாயிருக்கவில்லை. என் கருவை உம்முடைய கண்கள் கண்டது, என் அவயவங்களில் ஒன்றாகிலும் இல்லாதபோதே அவைகள் அனைத்தும், அவைகள் உருவேற்படும், உமது புத்தகத்தில் எழுதியிருந்தது. (சங்கீதம் 139:14-16). ✝

---

## உங்கள் குழந்தை...

- உங்கள் குழந்தை நீங்கள் ஜெபிப்பதைக் கேட்கத் தகுதி பெற்றிருக்கிறது.
- உங்கள் குழந்தை உங்களோடு ஆராதனைக்கும் வேதபாட வகுப்புகளுக்கும் வரத்தகுதி பெற்றிருக்கிறது
- உங்கள் குழந்தை நீங்கள் கர்த்தருக்காகத் தியாகம் பண்ணுவதைக் காணத் தகுதி பெற்றிருக்கிறது
- உங்கள் குழந்தை நீங்கள் கிறிஸ்துவைப் பற்றி மற்றவர்களிடம் சொல்லுவதைக் கேட்கத் தகுதி பெற்றிருக்கிறது

# ஏழாம் நாளின் தெய்வீக பரிசுத்த மார்க்கம்

# The Divine Sanctification of The Seventh Day

Ronald D. Reeves

கிறிஸ்தவ மனம் கொண்ட பெரும்பாலான ஆண்களும், பெண்களும், வாரத்தின் முதல் நாளாகிய ஞாயிற்றுக்கிழமைகளில் கூடும்படி கிறிஸ்தவ காலத்தில் ஒதுக்கிவைக்கப் பட்டிருக்கிறது என்பதை ஒழுங்காக ஒத்துக் கொள்வார்கள். ஆனால், எதிர்மறையாக சிலர் ஓய்வுநாளாகிய ஏழாம்நாள் தான் இந்த கிறிஸ்தவ காலத்திலும் தொடர வேண்டுமென்று அதற்கு ஆதரவாகப் பேசி வருகிறார்கள். மேலும், தேவனாகிய கர்த்தர் முதல் ஏழாம் நாளிலேயே ஏழாம் நாளை பரிசுத்தமாக்கினார் என்று ஆணித்தரமாகச் சொல்கிறார்கள். இன்னும் கூடுதலாக, இவர்கள் இது இக்கிறிஸ்தவ காலத்திலும் கூட ஏழாம் நாளை ஓய்வு நாளாக ஆசரிக்கத் தங்களுக்கு அதிகாரம் கொடுப்பதாக அறிவித்து வாரத்தின் முதல் நாளாகிய ஞாயிற்றுக்கிழமை ஆராதனை நாளாக இருக்க முடியாது என்னும் பிரச்சாரம் செய்து வருகிறார்கள் “ தேவன் தாம் சிருஷ்டித்து உண்டு பண்ணின தம்முடைய கிரியைகளையெல்லாம் முடித்தபின்பு அதிலே ஓய்ந்திருந்தபடியால் தேவன் ஏழாம் நாளை ஆசீர்வதித்து, அதைப் பரிசுத்தமாக்கினார்” (ஆதியாகமம் 2:3). கீழ்காணும் காரியங்களைக் குறித்து ஆழ்ந்து சிந்தியுங்கள்.




1. ஏழாம் நாள் வாரத்தின் மற்றொரு நாளாக மற்ற ஆறு நாட்களோடு வகைபடுத்தப்பட்டிருந்தது (ஆதியாகமம் 1:3–2:3)

2. ஆதியாகமம் 2:3 தெய்வீக பரிசுத்தமாக்குதல் என்னும் உண்மையை அறிவிக்கிறது. ஆனால், ஏழாம் நாளை பரிசுத்தமாக்க வேண்டுமென்று கட்டளை எதுவும் கொடுக்கப்படவில்லை. அதேபோல், தேவன் அந்த ஏழாம் நாளை பரிசுத்தமாக்கியது எப்போது என்றும் அறிவிக்கப்படவில்லை.

3. ஆதியாகமம் 2:3 வசனப்பகுதியில் ஏழாம் நாள் எப்போது பரிசுத்தமாக்கப்பட்டது என்பதற்கான ஒரே அறிகுறி தேவன் ஓய்ந்திருந்தார் என்னும் கடந்தகால வினைச்சொல்லில் காணப்படுகிறது. இங்கே வினையின் காலத்தை உற்றுப் பார்த்தால்

ஓய்ந்திருந்தார் என்று கடந்த காலத்தில் இருக்கிறபடியால் தெய்வீக பரிசுத்தமாக்கப்படுவதற்கு முன்பே கிரியை முடிந்து விட்டது என்பது நமக்கு புலப்படுகிறது. ஆகவே, தேவன் ஏழாம் நாளை பரிசுத்தமாக்கியது தேவன் ஓய்வெடுத்த பின்புதான் என்பது தெளிவாகிறது. மேலும், இவ்வசனப்பகுதி இவ்விரு சம்பவங்களுக்கும் இடைப்பட்ட கால அளவை விவரமாக, குறிப்பாக பதிவு செய்யவில்லை.

4. தேவன் " ஏழாம் நாளை பரிசுத்தமாக்கினார் என்னும் வாக்கியம் [ஆதியாகமம் 2:3] சிருஷ்டிப்பு முடிந்து 2500 ஆண்டுகளுக்குப் பிறகு எழுதப்பட்டது. அதாவது, மோசேயின் காலத்தில்" எழுதப்பட்டது கி.மு [1571 – 1451].

5. ஓய்வு நாள் என்பது ஆதியாகமம் புத்தகத்தில் குறிப்பிடவில்லை. ஓய்வு நாள் முதன் முதலில் [யாத்திராகமம் 16:22–23] வசனங்களில் குறிப்பிட்டிருக்கிறது. இது தேவனால் மோசேக்கு பத்து கட்டளைகள் கொடுக்கப்படுவதற்கு 13 நாட்கள் முன்பாக நடந்த நிகழ்வாகும் [யாத்திராகமம் 20:1–17] அதில் ஓய்வு நாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக என்னும் கட்டளை எபிரெய ஜனங்களுக்கே பொருந்தும்.

6. ஓய்வு நாளை பரிசுத்தமாய் ஆசரிப்பாயாக என்னும் கட்டளை சீனாய் பர்வததில் கொடுக்கப்பட்டது, அதற்கு முன்பாக அல்ல. உமது பரிசுத்த ஓய்வு நாளை அவர்களுக்குத் தெரியப்படுத்தி, உமது தாசனாகிய மோசேயைக் கொண்டு அவர்களுக்குக் கற்பனைகளையும், கட்டளைகளையும் நியாயப்பிரமாணங்களையும் கற்பித்தீர்.

7. மோசேயின் காலத்தில் ஓய்வு நாள் பிரமாணம் புதிதாகத்தான் இருந்தது என்பது அதை மீறியவர்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்பதை மோசே அறியாதிருந்தார் என்பதிலிருந்து தெளிவாகிறது. மேலும், மோசேயின் பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு 2500 ஆண்டுகளுக்கு முன்பே தேவன் ஓய்வுநாளை பரிசுத்த மாக்கியிருந்தால் ஆயிரக்கணக்கான வருடங்கள் பழமை வாய்ந்த ஓய்வுநாள் பிரமாணத்தை மீறியவர்களுக்கு என்ன தண்டனை கொடுக்க வேண்டியிருந்திருக்கும் தண்டனையைக் குறித்த விசாரிப்பே அவசியமில்லாமல் இருந்திருக்குமே [எண்ணாகமம் 15:32–36].

8. இந்த வசனப்பகுதி அதாவது [ஆதியாகமம் 2:3] வருங்காலத்தில் நடக்கப் போகிற ஒரு செயலை நிகழ்காலத்திலேயே நடந்துவிட்டது போல அடையாளப்படுத்தும் ஒரு முறையை அறிமுகப்படுத்துகிறது. இம்முறையில் வெவ்வேறு காலக்கட்டத்தில் நிகழும் சம்பவங்கள் ஒன்றாக இணைக்கப்பட்டு ஒரே வாக்கியத்தில் சொல்லப்படுகிறது.

இதற்கு வேறு சில உதாரணங்களையும் நாம் காணமுடியும். [ஆதியாகமம் 3:20;4:20, மற்றும் மத்தேயு 10:4]. எனவே, தேவன் ஏழாம் நாளில் ஓய்ந்திருந்து வேறு காலகட்டத்தில் ஏழாம் நாள் ஓய்வு நாள்காரர்கள் சொல்வதுபோல் சிருஷ்டிப்பின் நாட்களிலேயே தேவன் ஏழாம் நாளில் ஓய்ந்திருந்து அந்த நாளை பரிசுத்தமாக்கவில்லை [யாத்திராகமம் 20:1-17]

9. வருங்காலத்தில் நடக்கப்போகிற ஒரு செயலை நிகழ்காலத்திலேயே நடந்துவிட்டது போல அடையாளப்படுத்தும் முறைக்கான மற்றுமொரு உதாரணம் [ரோமர் 9:10-13] வசனங்களில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. ரோமர் 9:12 ஆதியாகமம் 25:23 யை ஆதாரமாகக் கொண்டதாகும் [கி.மு 1836]. ஆனால், ரோமர் 9:13, மல்கியா 1:2-3 வசனங்களை ஆதாரமாகக் கொண்டதாகும் [கிமு. 445]. எனவே, ரோமர் 9 : 12, 13 வசனங்களில் இடம்பெற்றிருக்கும் சம்பவங்கள் அடுத்தடுத்து நடந்ததுபோல் இருந்தாலும் இரு சம்பவங்களுக்கும் இடையேயான கால இடைவெளி [400 வருடங்களாகும். அதேபோல்தான் ஆதியாகமம் 2:3 பதிவு செய்யப்பட்டிருக்கும் சம்பவத்துக்கும், ஏழாம் நாளை தேவன் பரிசுத்தமாக்கின சம்பவத்துக்கும் இடையேயான கால அளவு 2500 வருடங்களாகும்.

10. அதேபோல் இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்தை விட்டு வெளியேறுவதற்கு முன்பாக ஓய்வு நாளை பரிசுத்தமாய் ஆசாரித்தார்கள் என்பதற்கும் எந்த வசன ஆதாரமும் இல்லை.

நாம் செய்து கொண்டிருக்கிற இந்த விவாதம் ஏழாம் நாள்காரர்களின் மிகப்பெரிய சூழ்ச்சியை ஒன்றுமில்லாமல் செய்தது போல் அவர்களுடைய மற்ற யுக்திகளையும் நாம் இக்கட்டுரையில், ஒன்றுமில்லாமல் செய்து விடமுடியும் என்று நிச்சயித்துக் கொள்ளலாம். எனவே, இக்கிறிஸ்தவ காலத்தில் தேவனை ஆராதிப்பதற்காக வேதாகமத்தால் ஒதுக்கப்பட்டிருக்கிற நாள் வாரத்தின் முதல் நாளாகிய ஞாயிற்றுக்கிழமைதான். இதற்கு ஆதாரமாக பல வேதாகம உதாரணங்கள் உண்டு [I கொரிந்தியர் 16:2; அப்போஸ்தலர் 20:7]. வாரத்தின் முதல் நாள்தான் தேவனை ஆராதிப்பதற்காக நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிற நாள் என்பதற்கு தீவிரமாக ஆதரவு அளிக்கும் நாம் கிறிஸ்தவ ஆராதனை நாளான வாரத்தின் முதல் நாளிலே சபைக்கடுத்த காரியங்களில் ஆக்கப்பூர்வமாக ஈடுபடுவதன் மூலமாகவும் நம் தீவிர ஆதரவைக் கொடுக்க வேண்டும். கிறிஸ்துவின் சபையார் வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம் அல்லது வாய்ப்பை ஏற்படுத்திக்கொண்டு வாரத்தின் முதல் நாளிலே தேவனை ஆராதிக்க சபை கூடிவர வேண்டும். ✝

# ஒலிபெயர்ப்பா அல்லது மொழிபெயர்ப்பா?

# Transliterated or Translated?

David R. Kenney

சிலரால் மொழிபெயர்க்கும் ஒரு மொழியின் சொற்களை மற்றொரு மொழியின் எழுத்துக்களால் எழுதுவதற்கும் உள்ள வித்தியாசத்தை கண்டறிய முடியாது. ஆனால், அது ஒரு முக்கியமான விஷயமாகும். பொதுவாக மொழி பெயர்ப்பு என்பது ஒரு மொழியிலிருந்து ஒரு வார்த்தையை தெரிந்தெடுத்து மற்றொரு மொழியில் அதற்கு இணையான வார்த்தையில் மாற்றுவதாகும். சிலவேளைகளில், பெரும்பாலான மொழிபெயர்ப்பாளர்கள் என்ன காரணத்திற்கென்று தெரியவில்லை மொழிப்பெயர்ப்பு செய்வதைவிட ஒரு மொழியின் சொற்களை மற்றொரு மொழியின் எழுத்துக்களால் எழுதுவதையே விரும்புகிறார்கள் அல்லது தெரிந்து கொள்கிறார்கள். ஒரு வேளை அதற்கு காரணம் ஒரு மொழியிலிருந்து மற்றொரு மொழிக்கு மொழிபெயர்க்கும் போது அந்த மொழியில் அதற்கு இணையான வார்த்தை இல்லாமலிருப்பதாக இருக்கலாம். அத்தகைய சூழ்நிலையில் அவர்கள் ஒரு மொழியின் சொற்களை அப்படியே மற்றொரு மொழியின் எழுத்துக்களால் எழுதிவிட்டுப் போய்விடுவார்கள். இந்த செயல்முறையை நாம் பல மொழிகளில் காணலாம். உதாரணமாக, தமிழில் ஞானஸ்நானம் என்பதற்கு ஆங்கிலத்தில் Baptism என்பதை நாம் அறிந்திருக்கிறோம். ஆனால், இந்த Baptism என்பது ஒரு ஆங்கில வார்த்தை அல்ல. மாறாக, இது ஒரு கிரேக்க வார்த்தையாகும். Baptizo என்னும் கிரேக்க வார்த்தைக்கு இணையான வார்த்தை ஆங்கிலத்தில் இல்லாதபடியால் அதே கிரேக்க சொற்களை அப்படியே ஆங்கில எழுத்துக்களில் Baptism என்று எழுதிவிட்டார்கள் [லேவியராகமம் 4:5–7] வசனப்பகுதியில் இடம் பெற்றுள்ள மூன்று செயல் கவனியுங்கள்.

“அப்பொழுது அபிஷேகம் பெற்ற ஆசாரியன் அந்தக் காளையின் இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து, அதை ஆசாரிப்புக் கூடாரத்தில் கொண்டு வந்து, தன் விரலை இரத்தத்தில் தோய்த்து பரிசுத்த ஸ்தலத்தில் திரைக்கு எதிரே கர்த்தருடைய சந்நிதியில் ஏழுதரம் தெளிக்கக்கடவன். பின்பு, ஆசாரியன் அந்த இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து, ஆசாரிப்புக்கூடாரத்திலே கர்த்தருடைய சந்நிதியில் இருக்கும் சுகந்த தூபப்பீடத்துக் கொம்புகளின் மேல் பூசி, காளையினுடைய மற்ற இரத்தம் முழுவதையும் ஆசாரிப்புக்கூடார வாசலுக்கு முன்பாக இருக்கிற தகன பலி பீடத்தின் அடியிலே ஊற்றிவிட்டு” [லேவியராகமம் 4:5-7].

மேற்சொல்லப்பட்ட வசனப்பகுதியில் மூன்று வித்தியாசமான செயல்கள் செய்யப்பட்டிருக்கின்றன ; ஆனால் அங்கே அந்த செயல்களுக்கு ஒரே விதமான வார்த்தைகள் பயன்படுத்தப்படவில்லை. அதாவது, முழுக்குதல், தெளித்தல், ஊற்றுதல் போன்ற பதங்கள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. சிலர் ஞானஸ்நானம் என்பது கழுவுதல் என்னும் பொதுவான அர்த்தத்தைத்தான் கொடுக்கிறது. அதை நாம் தெளித்தல், ஊற்றுதல், முழுக்குதல் என பல்வேறு முறைகளில் நிறைவேற்றலாம் என்று வாதாடுகிறார்கள். மேலும், அவர்கள் பொதுவான அர்த்தத்தில் குறிப்பிடுவது காலப்போக்கில் நடந்த ஒரு நிகழ்வு அல்லது காலத்தின் விளைவு என்று வாதாடுகிறார்கள். புதிய ஏற்பாட்டில் ஊற்றுதலுக்கான உதாரணத்தை நாம் காண முடியும் [மத்தேயு 26:7-12 ; மாற்கு14:3 ; லூக்கா 10:34]. ஆனால், இவைகள் கிரேக்கப் பதமான " Baptizo " லிருந்து மொழி பெயர்க்கப்படவில்லை. அதேபோல் நாம் தெளித்தலுக்கான உதாரணத்தை புதிய ஏற்பாட்டில் காணமுடியும் [எபிரெயர் 9:19 -21 ;10:22]. ஆனால், இதுவும் கிரேக்கப் பதமான Baptizo லிருந்து மொழி பெயர்க்கப்படவில்லை. நம் தமிழ் வேதாகமத்தில் ஞானஸ்நானம் அல்லது ஞானஸ்நானப்படுத்துதல் என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிற வார்த்தைகள் எல்லாமே Baptizo என்னும் கிரேக்க பதத்திலிருந்து மொழி பெயர்க்கப்பட்டதுதான். Baptizo என்னும் பதம் ஒருபோதும் தெளித்தல் அல்லது ஊற்றுதல் என்று மொழிபெயர்க்கப்படவில்லை. [ரோமர் 6:3 -4] வசனங்களில் அப்போஸ்தலனாகிய பவுல் ஞானஸ்நானம் என்பது கிறிஸ்துவோடு அடக்கம் பண்ணப்படுதல் என்று அழகாக படம் பிடித்துக் காட்டுகிறார் "கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும், பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு அவருடைய மரணத்திற்குள்ளாக்கு ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனே கூட அடக்க பண்ணப்பட்டோம்". இங்கே ஞானஸ்நானம் பெறுதல் எல்லாம் ஒரே பொருள்களைத்தான் கொடுக்கிறது.

கழுவப்படுதல் என்னும் பதம் ஞானஸ்நானத்தை குறிக்கும் விதமாகப் பயன்படுத்தப்படுவதைக் குறித்து நாம் பார்க்கும்போது இவ்விரு பதங்களுமே [அப்போஸ்தலர் 22:16] ல் இடம் பெற்றிருப்பது சுவாரஸ்யமாயிருக்கிறது. "இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு ஞானஸ்நானம் பெற்று உன் பாவங்கள் போகக் கழுவப்படு என்றான்". இங்கே சவுல் " கழுவப்படுவதற்கும்" (apolouo) [ஞானஸ்நானம் பெறுவதற்கும் கட்டளையிடப்பட்

டார். இங்கே சவுல் முழுக்கு ஞானஸ்னாத்தின் மூலமாக தன் பாவங்களை கழுவ வேண்டுமென்பது கட்டளையாக இருந்தது. இச்சம்பவத்தில் கழுவப்படுதல் என்னும் பதம் பயன்படுத்தப்பட்டிருந்தாலும் அது எப்படி செய்யப்பட வேண்டும் என்பதற்கான முறை குறிப்பாக சொல்லப்பட்டிருக்கிறது. ஞானஸ்நானம் என்பது பொதுவான அர்த்தத்தில் சொல்லப்பட்டிருந்தால், ஒருவர் இச்சம்பவத்திற்கு என்ன விளக்கம் கொடுப்பார்?

பெரும்பாலான மொழிப்பெயர்ப்புகள் தெளித்தல், ஊற்றுதல் போன்ற கள்ள உபதேசங்களை நீட்டிப்பதற்காக Baptizo என்னும் கிரேக்க பதத்தை சரியாக மொழி பெயர்க்காமல் மனித இனத்துக்கு வெகு தீமை இழைத்துவிட்டார்கள். 1611 ல் King James Version என்னும் ஆங்கில வேதாகம மொழிபெயர்ப்பு குழுவினர் இங்கிலாந்து சபைக்கு எதிராக எழும்பிய ப்ரோடஸ்டன்ட் இயக்கத்தின் அங்கத்தினர்கள் Baptisma என்னும் கிரேக்க பதத்தை கழுவுதல் என்று மொழி பெயர்த்ததை மாற்றி அமைத்தனர். ஆனால், துரதிஷ்டவசமாக King James Version குழுவினர் Baptism என்னும் பதத்தை மொழி பெயர்க்காமல் அப்படியே Baptism என்று அச்சிட்டு விட்டார்கள். அதைத் தொடர்ந்து பல நூற்றாண்டுகளாக Baptism என்னும் வார்த்தையே எல்லா ஆங்கில வேதாகமங்களிலும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ஞானஸ்நானத்தின் இரண்டாம் பாகம் அதன் அடையாளமாகிய தண்ணீரில் மூழ்குவதாகும். அதாவது, கிரேக்க மொழியில் Baptizo என்றால் தண்ணீருக்குள் அமிழ்த்துகிறேன் அல்லது மூழ்கடிக்கிறேன் என்றும், Baptisma என்றால் மூழ்குதல் என்றும் பொருள்படும்.

சிலர் இக்காரியங்களை சிறியதாக்குவதற்கு முயற்சி செய்வார்கள். ஆனால், நீங்கள் ஆழ்ந்து சிந்திக்கும்படியாக கேட்கிறேன். நீங்கள் கிறிஸ்துவுக்கு முன்பாக நிற்கும்போது தெளிக்கப்பட்டவராக, ஊற்றப்பட்டவராக நிற்பீர்களாக அல்லது கிறிஸ்துவுக்குள் மூழ்கடிக்கப்பட்டவராக நிற்பீர்களா? (கலாத்தியர் 3:27). ஒருவர் கிறிஸ்து கட்டளையிட்டவைகளுக்கு கீழ்ப்படிய விரும்பினால், சரியான பதில் ஒன்று மாத்திரமே உண்டு.

✝

# சுத்திகரிக்கும் பொருள் மற்றும் செயல்படுத்தும் பொருள்

**சரீரம்** + செயல்படுத்தும் பொருளில்லாமல் [தண்ணீர்] சுத்திகரிக்கும் பொருளால் [சோப்] வேலை செய்ய முடியாது. = சுத்தமாயிருக்கிறதா? சுத்தமாக இல்லையா

**சரீரம்** + **+** தண்ணீர் = சுத்தமாயிருக்கிறது

**ஆத்துமா** + **+** தண்ணீர் = சுத்தமாயிருக்கிறது

| **பாவம் = உலகத்தின் அசுத்தம்** | **இரத்தம் = சுத்திகரிக்கும் பொருள்** | **தண்ணீர் = செயல்படுத்தும் பொருள்** |
|---|---|---|
| நியாயப்பிரமாணத்தை மீறுகிறதே பாவம் [I யோவான் 3:4] | அவருடைய மரணத்தில் சிந்தப்பட்டது யோவான் 19:33-34 | ஞானஸ்நானம் = ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு மனப்பூர்வமாய் கீழ்ப்படிவது நீதிக்கு அடிமையாவது ரோமர் 6:16-18 |
| எல்லாரும் பாவஞ்செய்து தேவ மகிமையற்றவர்களாகி [ரோமர் 3:23] | இரத்தஞ்சிந்துதல் இல்லாமல் பாவ மன்னிப்பு இல்லை [எபிரெயர் 9:22] | கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெறுதல் கலாத் 3:27. |
| பாவஞ்செய்கிறவன் எவனும் பாவத்துக்கு அடிமையாயிருக்கிறான் [யோவான் 8:34] | இயேசுவின் இரத்தம் இரட்சிக்கிறது ரோமர் 5:9; வெளி 1:5 ; எபிரெயர் 9:22-28 | ஞானஸ்நானம் இப்போது இரட்சிக்கப்படுகிறது [I பேதுரு 3:21] |
| பாவத்தின் சம்பளம் மரணம் [ரோமர் 6:23] | கிறிஸ்துவின் மரணத்துள்ளாகவும் அவருடைய மரணத்தின் சாயலிலும் ஞானஸ்நானம் ரோமர் 6:1- 5 அடக்கம் பண்ணப்படுதல் /மூழ்கடிக்கப்படுதல் மட்டும். | கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெறும்போது அவருடைய இரத்தத்தால் பாவங்கள் கழுவப்படுகிறது [அப்போஸ்தலர் 22:16] |

# ஸ்தேவானுக்கு தேவன் தேவைப்பட்டபோது அவர் எங்கே இருந்தார்?

## Where Was God When Stephen Needed Him?

Royce Frederick



ஸ்தேவானுடைய இடத்தில் உங்களை வைத்து சற்று கற்பனை செய்து பார்க்க முடியுமா? எருசலேம் பட்டணத்தில் ஆயிரக் கணக்கான கிறிஸ்தவர்கள் இருந்தாலும் கூட எருசலேம் சபையின் அங்கத்தினர்கள் ஸ்தேவானையும் இன்னும் ஆறு பேரையும் விசேஷித்த சேவைக்காக தெரிந்து கொண்டர்கள் [அப்போஸ்தலர் 6:1–6]. அப்போஸ்தலர்களே இந்த ஸ்தேவானை உதவிக்காரருள் ஒருவராக நியமித்தார்கள். மற்ற ஆறு பேரோடு சேர்ந்து ஏழை விதவைகளுக்கு அன்றாடம் உணவு வழங்குவது ஸ்தேவானுடைய பொறுப்பாக இருந்தது. அந்த வேலையை அவர் எல்லோருக்கும் சமமாக, நியாயமாக செய்ய வேண்டியிருந்தது. இப்பணியில் ஸ்தேவனிடமிருந்த உண்மைத்தன்மை அப்போஸ்தலர்களின் பாரத்தை வெகுவாகக் குறைத்தது. இது அப்போஸ்தலர்கள் தேவனுடைய வார்த்தையை போதிப்பதிலும், பிரசங்கிப்பதிலும் கவனம் செலுத்த உதவியது. அதன் விளைவாக தேவ வசனம் விருத்தியடைந்தது. சீஷருடைய தொகை எருசலேமில் மிகவும் பெருகிற்று. [அப்போஸ்தலர் 6:7].

சத்தியத்தின் சத்துருக்குள் ஸ்தேவானை நகரத்துக்குப் புறம்பே தள்ளி அவரைக் கல்லெறிந்தார்கள் [அப்போஸ் 7:57–59]. அது கடுமையான வேதனையை உண்டாக்கியது. அவர் மரணத்தை நெருங்கினார். ஸ்தேவான் மற்றவர்களுடைய பாடுகள் நீங்கிப் போகும்படியாக தேவனிடம் மன்றாடினார். ஆனால், இந்த துன்மார்க்கமான மனிதர்களின் கைகளினால் ஸ்தேவான் பாடுபடவும், மரணத்தை ருசி பார்க்கவும் தேவன் அனுமதித்தார், அவரை தேவன் தப்புவிக்கவில்லை.

ஒருமுறை ஒரு கிறிஸ்தவனைப் பார்த்து நாத்தீகன் ஒருவன் கடவுள் ஒருவர் இருந்தால், ஸ்தேவானின் சத்துருக்கள் அவரைக் கல்லெறிந்து கொலை செய்யும்போது ஏன் உதவிச் செய்யவில்லை? அதற்கு அந்த கிறிஸ்தவன் ஸ்தேவான் தன்னைக் கொலை செய்தவர்களுக்காக ஜெபம் பண்ணுவதற்கு அவருக்கு கிருபை அளித்ததன் மூலமாக உதவி செய்தார் என்றார்.

தேவன் கிறிஸ்தவர்களை எல்லாம் பிரச்சனைகள் வேதனைகளிலிருந்தும் முழுவதுமாக பாதுகாப்பதாக எங்குமே வாக்குத்தத்தம் செய்யவில்லை. சில வேளைகளில், பிரச்சனைகளிலிருந்து நம்மை விடுவிக்கிறார். மற்ற நேரங்களில் பிரச்சனைகள் இருக்கும்படி அனுமதித்துவிட்டு அந்த வேதனைகளை தாங்கத்தக்கதாக கிருபையை நமக்கு அளிக்கிறார் [II கொரிந்தியர் 12:9].

சத்துருக்களின் கற்களால் ஸ்தேவானின் சரீரத்தைத்தான் அழிக்க முடிந்தது. ஆனால், அவருடைய விசுவாசத்தையும், அன்பையும் அழிக்க முடியவில்லை. ஸ்தேவான் மரிக்கும் தருணத்தில் கூட முழங்காற்படியிட்டு ஆண்டவரே இவர்கள் மேல் இந்தப் பாவத்தைச் சுமத்தாதிரும் என்று மிகுந்த சத்தமிட்டுச் சொன்னான். இப்படிச் சொல்லி நித்திரையடைந்தான் [அப்போஸதலர் 7:60].

தேவன் ஸ்தேவானை கைவிடவில்லை. உலகத்தின் முடிவின்போது தேவன் ஸ்தேவானை மரணத்திலிருந்து எழுப்பி பரலோகத்திலுள்ள தன் வீட்டில் என்றென்றுமாய் வாழ அழைத்துச் செல்வார். இயேசுவானவர் மரித்து பின்பு எழுந்திருந்தாரென்று விசுவாசிக்கிறோமே. அப்படியே இயேசுவுக்குள் நித்திரையடந்தவர்களையும் தேவன் அவரோடேகூட கொண்டு வருவார் [I தெசலோனிக்கேயர் 4:14]. தேவன் பரலோகத்தில் கிறிஸ்தவர்களை முழுமையாக பாதுகாப்பதாக வாக்குத்தத்தம் செய்கிறார். அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்; இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை; முந்தினவைகள் ஒழிந்து போயின என்று விளம்பினது [வெளிப்படுத்தின விசேஷம் 21:4].

✝

# பர்னபாவைப் போலிருங்கள்

## Be a Barnabas

Patrick Morrison

பர்னபா மிகச்சிறந்த வேதாகம கதாபாத்திரங்களுள் ஒருவராக இருக்கிறார். இந்த பர்னபா ஆறுதலின் மகனாக இருந்த படியால் அதைப் பிரதிபலிக்கும் வகையில் அப்போஸ்தலர்கள் யோசே என்றிருந்த இவரது பெயரை பர்னபா என்று வைத்தார்கள் (அப்போஸ்தலர் 4:36). எந்தச் சம்பவத்திலெல்லாம் நாம் பர்னபாவைப் பற்றி வாசிக்கிறோமோ அங்கெல்லாம் அவர் சகோதரர்களுக்கு ஆறுதல் அளிக்கிறவராக நாம் காண்கிறோம். முதல் நூற்றாண்டு சபைக்கு எத்தனை மதிப்புள்ள சொத்தாக அவர் இருந்திருக்கிறார். அநேகர் பர்னபாவைப் போல் இருக்க பிரயாசப்படால் இன்று சபை எப்படி இருக்கும்? சகோதர சகோதரிகளை விமர்ச்சிப்பது, அவர்களை குற்றம் கண்டுபிடிப்பது நம் தோல்விகளையும், குறைகளையும் மறைப்பது போன்ற வலையில் விழுவது எளிதானதாகும். நாம் நம்முடைய சகோதர, சகோதரிகளை தரக்குறைவாக விமர்சிக்காமல் அவர்களை உற்சாகப்படுத்தியிருந்தால் ஊக்குவித்திருந்தால் எத்தனை ஆத்துமாக்கள் கிறிஸ்துவுக்காக ஆயத்தப்படுத்தப்பட்டு கிறிஸ்துவுக்குள் கட்டுப்பட்டிருப்பார்கள். எது பர்னபாவை மகத்தான ஆறுதலின் மகனாக மாற்றியது? இன்று நாம் அவரைப் பின்பற்றத்தக்க அவர் என்னச் செய்தார் என்பதை கவனியுங்கள்.

தேவையில் உள்ள ஒருவரை கண்டறிந்து அவருக்கு பொருளாதார உதவிகளைச் செயயுங்கள். முதல் நூற்றாண்டில் புதிதாக மனமாற்றமடைந்தவர்களுக்கு திடீரென ஒரு தேவை ஏற்பட்டபோது பர்னபாவும், அதே ஆவியை உடைய சிலரும் ஒருங்கிணைந்து தேவையை சந்தித்தார்கள். பர்னபா தனக்கு உண்டான நிலத்தை விற்று, அதின் கிரயத்தைக் கொண்டு வந்து, அப்போஸ்தலருடைய பாதத்திலே வைத்தான் (அப்போஸ்தலர் 4:37). இந்த உதாரணத்துவ செயல் அந்நாளின் உள்ளத்தால் உலகத்தால் உற்று கவனிக்கப்பட்டு தேவனுடைய குடும்பத்தின் அங்கமாக அவர்களை கவர்ந்தது. பர்னபா தனக்கு உண்டானவைகளை விற்று பிறருக்கு பகிர்ந்தளிக்காமல் தானே வைத்திருந்தால் என்னவாயிருக்கும்? சபை மிகப்பெரிய வளர்ச்சியை அடைந்திருக்குமா?

தனியாக இருக்கும் ஒருவரை உங்களோடு சேர்த்துக் கொள்ளுங்கள். தர்சு பட்டணத்து சவுல் கர்த்தருக்கு மிகப்பெரிய சத்துருவாக இருந்து சபையைப் பாழாக்கிக் கொண்டிருந்தான் (அப்போஸ்தலர் 8:3).

கிறிஸ்துவுக்கு எதிராக இருந்த இந்த சவுல் மனம் மாறி கிறிஸ்துவுக் குள் வந்தார். ஆரம்பத்தில் சகோதரர்கள் இவரைச் சேர்க்க விருப்பமில் லாமல் இருந்த இந்த போது பர்னபாதான் பவுலின் மனமாற்றத்தின் உண்மைத் தன்மையை நம்பி தன்னிடம் சேர்த்துக் கொண்டார். அது மட்டுமல்லாமல் பர்னபா பவுலை அப்போஸ்தலர்களுள் ஒருவராக ஏற் றுக் கொள்ளத்தக்க பவுலை அவர்களிடம் அழைத்துச் சென்றார் (அப் போஸ்தலர் 9:27). பர்னபா பவுலை ஏற்றுக் கொள்ளாமலிருந்தால் என்ன வாயிருந்திருக்கும்? சபை மிகப்பெரிய ஊழியக்காரரை இழந்திருக்கு மோ?



விழுந்து போன ஒருவரைக் கண்டுபிடித்து அவரை பழைய நிலைக்கு கொண்டு வாருங்கள். பவுலும், பர்னபாவும் முதல் சுவிசேஷப் பயணத்தை முடித்த பிறகு அவர்கள் புறஜாதிகள் மத்தியில் எப்படி ஊழியஞ் செய்தார்கள் என்பதைக் குறித்து அறிக்கை சமர்ப்பிப்ப தற்காக திரும்பினார்கள். அப்படி அவர்கள் ஊழியத்திற்கு திரும்ப ஆயத்தமாகிக் கொண்டிருந்த போது மாற்கு என்னும் பேர் கொண்ட யோவானையும் தங்களோடு அழைத்துச் செல்லும்படியான தன் விருப் பத்தை பவுலிடம் பர்னபா தெரிவித்தார். ஆனால், பவுல் கடுமையாக அதை எதிர்த்தார். (இதைப்பற்றி அவர்களுக்குள்ளே கடும்கோப மூண் டபடியினால் அவர்கள் ஒருவரையொருவர் விட்டுப் பிரிந்தார்கள் (அப்போஸ்தலர் 15:39). இதற்கு முன்பு மாற்கு பவுல் மற்றும் பர்னபா வோடு ஊழியத்திற்குச் சென்றார். ஆனால், ஏதோ காரணத்திற்காக மாற்கு வேண்டாம் என்று பவுல் கடுமையாக அதை எதிர்த்தார். ஆனால் ஏதோ காரணத்திற்காக மாற்கு அவர்களை விட்டுப் பிரிந்து சென்றுவிட் டார். பர்னபா அந்த வாலிபனுக்கு ஒரு வாய்ப்பு இன்னும் ஒரு முறை கொடுக்க விரும்பினார். இருந்த போதிலும், அப்போஸ்தலனாகிய பவுல் மாற்கு மீது மரியாதையை இழந்துவிட்டார். பிற்பாடு ஊழியத்தில் தனக்குப் பிரயோஜனமுள்ளவன் என்று பவுலை சொன்னதை நாம்

வாசிக்க முடியும் [II தீமோத்தேயு 4:11]. மாற்கு தவறு செய்ததன் காரணமாக இனிமேல் ஒரு போதும் அவர் திருந்தவே மாட்டான் என்று பர்னபா நினைததிருந்தால் என்னவாயிருக்கும்? மாற்குவுக்கு யாருமே மற்றுமொரு வாய்ப்பு கொடுக்காமல் இருந்திருந்தால் என்னவாயிருக்கும்?

தேவன் தம்முடைய அளவில்லா ஞானத்தால் இந்த மாபெரும் மனிதனாகிய பர்னபாவின் வாழ்க்கையின் ஒரு பகுதியை பதிவு செய்ய தெரிந்துகொண்டமைக்காக தேவனுக்கு நன்றி செலுத்துகிறேன். நமக்கு வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் நம் சகோதர, சகோதரிகளை உற்சாகப்படுத்த நாடுவோம். நமக்கு மாபெரும் பிரசங்கியார்களாக அல்லது வேத பாட ஆசிரியர்களாக ஊழியம் செய்யும் திறமை இல்லாமல் இருக்கலாம். ஆனால், ஆறுதலின் மகனாகிய பர்னபாவைப் போல் இருக்கும் ஆற்றல் பெற்றிருக்கிறோம்!

## நன்றியுணர்வு

கர்த்தாவே! எப்பொழுதும் ஜெபத்தின் மூலமாக உம்மிடம்
கிட்டிச்சேர வாய்ப்பு தந்தமைக்காக என்றென்றும்
உமக்கு நன்றிகளை எறெடுக்கிறேன்!

உம்முடைய சிங்காசனத்திற்கு முன்பாக முழங்கால்படியிடும்
போதெல்லாம் என்னை என்றும் காண்கிறீரே
உமக்கு நன்றிகளை ஏறெடுக்கிறேன்!

இப்போதும் கூட இந்த நள்ளிரவில் வெள்ளி நிலவின்
வெளிச்சத்தில் உம் சமூகத்தை நோக்கிப் பார்ப்பதால்
உமக்கு நன்றிகளை எறெடுக்கிறேன்


வேதாகம கேள்விகள்

# புதிய வானங்களும், புதிய பூமியும்

# New Heavens and a New Earth

Louis Rushmore

**தா**மதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத் தத்தத்தைக் குறித்து தாமதமாயிராமல் ஒருவரும் கெட்டுப் போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார். கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும்; அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்றுபோம். பூதங்கள் வெந்து உருகிப்போம், பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம். இப்படி இவைகளெல்லாம் அழிந்து போகிறதாயிருக்கிறபடியால் நீங்கள் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும் தேவ பக்தியும் உள்ளவர்களாயிருக்க வேண்டும். தேவனுடைய நாள் சீக்கிரமாய் வரும்படிக்கு மிகுந்த ஆவலோடே காத்திருங்கள் : அந்த நாளில் வானங்கள் வெந்து அழிந்து, பூதங்கள், எரிந்து உருகிப்போம். அவருடைய வாக்குத்தத்தத்தின்படியே நீதி வாசமாயிருக்கும் புதிய வானங்களும், புதிய பூமியும் உண்டாகுமென்று காத்திருக்கிறோம். ஆகையால், பிரியமானவர்களே இவைகள் வரக் காத்திருக்கிற நீங்கள் கறையற்றவர்களும், பிழையில்லாதவர்களுமாய் சமாதானத்தோடே அவர் சந்நிதியில் காணப்படும்படி ஜாக்கிரதையாயிருங்கள் (II பேதுரு 3:9–14) வசனப்பகுதி உலகத்தின் முடிவைப் பற்றிய வசனப்பகுதியாகும். இப்பூமியும், ஒட்டுமொத்த பிரபஞ்சமும் தற்காலிகமானது தான். அவைகள் முற்றிலுமாக அழிக்கப்படும். பூதங்கள் வெந்து உருகிப்போம், பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம். இருந்தபோதிலும், இப்பூமிதான் தற்காலத்துக்கு மனிதனுடைய வாசஸ்தலமாயிருக்கிறது.



இப்பூமியும் பிரபஞ்சமும் அழிந்துபோன பிறகு – மனிதனுடைய தற்கால வாசஸ்தலம் ஒழிந்துபோன பிறகு – மனித இனத்துக்கு ஒரு மாற்று வாசஸ்தலம் அவசியப்படும். நீதிமான்கள் வாசஞ்செய்யும் இடத்தைப் பற்றி பேதுரு ஆசிரியர் விவரிக்கும்போது அவருடைய வாக்குதத்தத்தின்படியே நீதி வாசமாயிருக்கும் புதிய வானங்களும் புதிய பூமியும் உண்டாகுமென்று விவரிக்கிறார்.

தற்கால இப்பூமி மாம்சமும், இரத்தமும் உள்ள மனித இனம் வாசம் செய்வதற்குத் தான் உகந்தது. ஆனால், மனிதர்களாகிய நாம் ஆவிக்கு

ரிய பக்கமாகப் பார்த்தால் அழியாத ஆத்துமாவையும் பெற்றிருக்கிறோம் [எபிரெயர் 10:39; யாக்கோபு 5:20; I பேதுரு 2:11]. "இவ்விதமாய் மண்ணானது தான் முன்னிருந்த பூமிக்குத் திரும்பி, ஆவி தன்னைத், தந்த தேவனிடத்திற்கு மறுபடியும் போகாததற்கு முன்னும் அவரை உன் வாலிபப்பிராயத்திலே நினை" [பிரசங்கி 12:7]. இவ்வுலகத்தின் முடிவின் போது ஆவிக்குரிய, பரலோகத்திற்கேற்றபடி நம் அற்பமான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார்.

மண்ணானவன் எப்படிப்பட்டவனோ மண்ணானவர்களும் அப்படிப்பட்டவர்களே : வானத்துக்குரியவர் எப்படிப்பட்டவரோ, வானத்துக்குரியவர்களும் அப்படிப்பட்டவர்களே. மேலும், மண்ணானவனுடைய சாயலை நாம் அணிந்திருக்கிறதுபோல, வானவருடைய சாயலையும் அணிந்து கொள்வோம். சகோதரரே, நான் சொல்லுகிறதென்னவெனில், மாம்சமும், இரத்தமும் தேவனுடைய ராஜ்யத்தை சுதந்தரிக்க மாட்டாது; அழிவுள்ளது அழியாமையைச் சுதந்தரிப்பதுமில்லை. இதோ, ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன்; நாமெல்லாரும் நித்திரையடைவதில்லை; ஆகிலும், கடைசி எக்காளம் தொனிக்கும் போது ஒரு நிமிடத்திலே, ஒரு இமைப்பொழுதிலே நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம். எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள்; நாமும் மறு ரூபமாக்கப்படுவோம். அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளும்போது, மரணம் ஜெயமாக விழுங்கப்பட்டது என்று எழுதியிருக்கிற வார்த்தை நிறைவேறும். மரணமே! உன் கூர் எங்கே ? பாதாளமே! உன் ஜெயம் எங்கே மரணத்தின் கூர் பாவம், பாவத்தின் பெலன் நியாயப்பிரமாணம் [I கொரிந்தியர் 15:48–56].

நம் சரீரங்கள் ஆவிக்குரிய சரீரங்களாக மாற்றமடையப் போகிற படியால், நமக்கு சரீரப்பிரகாரமான ஒரு வாசஸ்தலம் அவசியப்படாது. புதிய வானங்களும், புதிய பூமியும் என்று அப்போஸ்தலனாகிய பேதுருவால் உருவக நடையில் குறிப்பிடப்படும் இப்பூமிக்கு மாற்றான வாசஸ்தலம் நம் ஆவிக்குரிய சரீரங்களுக்கு பொருத்தமான ஓர் இடமாகும். வேறு சில பழைய ஏற்பாட்டு மற்றும் புதிய ஏற்பாட்டு வசனப்பகுதிகளும் புதிய வானங்கள் மற்றும் புதிய பூமி என்னும் பதங்களை உருவக நடையில் தான் பயன்படுத்தியிருக்கின்றன [ஏசாயா 65:17; 66:22; வெளிப்படுத்தின விசேஷம் 21:11].

✝




## நீதிமொழிகள் மூலமாக தேடுதல் வேட்டை

REBECCA RUSHMORE

1. எது ஞானத்தின் ஆரம்பம்?

2. நாம் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து அவரை நினைத்துக் கொண்டால் அவர் என்ன செய்வார்?

3. ஞானத்தின் ஆரம்பம் என்ன?

4. எது ஜனத்தை உயர்த்தும்? எது ஜனத்துக்கு இகழ்ச்சி?

5. எது அமளிப்பண்ணும்? அதினால் மயங்குகிறவன் யார்?

6. சண்டைக்காரியோடே, ஒரு பெரிய வீட்டில் குடியிருப்பதைப் பார்க்கிலும் எங்கே தங்கியிருப்பதே நலம்?

7. திரளான ஐசுவரியத்தைப் பார்க்கிலும், பொன் வெள்ளியைப் பார்க்கிலும் எது நல்லது?

8. நம் சத்துரு பசியாயிருந்தால், தாகமாயிருந்தால் எப்படி நடத்த வேண்டும்?

9. நீதிமான்கள் எந்த தைரியமான மிருகத்தோடு ஒப்பிடப்படுவார்கள்?

10. தேவனுடைய வசனங்களோடு காட்டுகிறவர்கள் யார்?

# கிறிஸ்துவின் சபையின் தெரிந்து கொள்ளுதல்

## The Church of Christ's Choice

R.C. Lupo

கிறிஸ்து தம்முடைய ராஜ்யத்தை ஸ்தாபிப்பதை மரணம் கூட தடுக்க முடியவில்லை [மத்தேயு 16:18] சபையை யாரும் அசைக்க முடியாது [எபிரெயர் 12:28]

ராஜ்யம் அல்லது சபை மார்க்கப் பிரிவினை சபைகள் தோன்றுவதற்கு முன்பாகவே இருந்து வருகிறது. கர்த்தருடைய சபை பெந்தேகொஸ்தே நாளன்று ஸ்தாபிக்கப்பட்டது [அப்போஸ்தலர் 2]. இவ்வுலகில் மிகப் பழமையான சபை என்று கருதப்படுகிற சபை கூட இயேசு கிறிஸ்து வாக்குத்தத்தம் பண்ணி கட்டின ஒன்றான மெய் சபையோடு ஒப்பிடும்போது மிக இளமையான சபையாகத்தான் இருக்கும் [மத்தேயு 16:18]. மனிதர்கள் நம்மைப் பார்த்து "நீங்கள் விரும்புகின்ற சபையில் சேர்ந்து கொள்ளுங்கள்" என்று சொல்லலாம். ஆனால், இப்படிப்பட்ட காரியங்களை இயேசு கிறிஸ்து ஒருபோதும் அங்கீகரித்ததில்லை. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு மாத்திரமே தம்முடைய சபையில் ஆத்துமாக்களை சேர்க்க அதிகாரமுண்டு. தேவனுடைய வார்த்தைகளை சந்தோஷமாக ஏற்றுக்கொண்டு [விசுவாசித்து] ஞானஸ்நானம் பெற்றவர்கள் இரட்சிக்கப்பட்டார்கள். [அப்போஸ்தலர் 2:47;41;மாற்கு 16:15-16].

சபை கிறிஸ்துவின் ராஜ்யமாக இருக்கிறது : சபை அதே நாளில் அதே இடத்தில் ஸ்தாபிக்கப்பட்டது [ஏசாயா 2:2-3; அப்போஸ்தலர் 2:1-47] ராஜ்யத்தில் பிரவேசிப்பதற்கும், சபையில் பிரவேசிப்பதற்கும் நிபந்தனைகள் ஒன்றுதான் - ராஜ்ஜியம் [யோவான் 3:3-5] சபை [அப்போஸ்தலர் 2:38-47]. கர்த்தருடைய பந்தி இரண்டிலும் [ராஜ்யம் மத்தேயு 26:29] சபை [I கொரிந்தியர் 11:20- 27]. இரண்டிலும் கைக்கொள்ளப்படுகிறது.

சபை முக்கியமானது : இயேசு கிறிஸ்து தம்முடைய சுய ரத்தத்தினாலே சபையை விலைக்கு வாங்கினார் [அப்போஸ்தலர் 20:28]. சபை முக்கியமல்ல என்று சொல்வதற்கு ஒரு மனிதனுக்கு எப்படித் துணிச்சல் வரும்? ஒருவர் எந்த மார்க்கப் பிரிவினை சபையைச் சேர்ந்தவர் என்பது முக்கியமல்ல.... மனிதனால் உண்டாக்கப்பட்ட எல்லா சபைகளும், போதனைகளும் வேரோடே பிடுங்கப்பட்டு அழிக்கப்படும் [மத்தேயு 15:13].

கிறிஸ்துவின் சபை வேத வாக்கியங்களில் பதிவு செய்யப்பட்டிருக்கிற சபைக்கான மாதிரியைப் பின்பற்றுகிறது [II தீமோத்தேயு 1:13;தீத்து1:9; I தெசலோனிக்கேயர் 5:21].

உபதேசத்திற்காக (II தீமோத்4:1–4)

ஆளுகைக்காக (I தீமோத்தேயு 3:1–13 ;தீத்து 1:1 ; பிலிப்பியர் 1:1)

ஜீவனுக்காக (பிலிப்பியர் 1:21 ; I தீமோத்தேயு 4:1–12)

ஆராதனைக்காக (யோவான் 4:23,24 ; அப்போஸ்தலர் 2:42 ; I கொரி 16:1–2)

எச்சரிப்புக்காக (ரோமர் 16:17–18 ; I தீமோத் 6:3 ; வெளி 22:18–19).

சபை தேவனை ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்கிறது (யோவான் 4:23–24; மத்தேயு 15:8–13; அப்போஸ்தலர் 2:42 ; கொலோ 3:16–17 ; I 16:1–2).

சபை கிறிஸ்துவால் இரட்சிக்கப்படுகிறது: எபேசியர் 5:23 கிறிஸ்து சரீரமாகிய சபைக்கு இரட்சகராயிருக்கிறார் என்று போதிக்கிறது (எபேசியர் 1:22–23). ஒருவர் அவருடைய சபையில் இல்லை என்றால், அவரால் இரட்சிக்கப்பட முடியாது (I பேதுரு 1:3–5).

✝

---

**தேவனுடைய பணிக்கு எதிரான தடைகள்:**

- உலகக் கவலை தேவ பணிக்கு எதிரான மிகப்பெரிய தடையாக இருக்கிறது ( மத்தேய 13:22)

- மாம்ச இச்சை தேவ பணிக்கு எதிராண மிகப்பெரிய தடையாக இருக்கிறது (I யோவான் 2:15–17)


- சுயம் தேவ பணிக்கு எதிரான தடையாக இருக்கிறது (மத்தேயு 16:24,25)

- பொருளாசை தேவ பணிக்கு எதிரான மிகப்பெரிய தடையாக இருக்கிறது ( லூக்கா 12:15)

# காலங்களின் இரகசியம்

## The Mystery of the Ages

Betty Burton Choate



நித்திய காலங்களின் இரகசியமான இயேசு கால ஓட்டத்தில் ஒரு திருப்புமுனையாக அமைந்தார். அவர் பிலாத்தினாலும், ஆலோசனை சங்கத்தை ஆளுகை செய்தவர்களாலும் பெருங்கூட்டத்தினாலும் எந்தவிதத்திலும் அங்கீகரிக்கப்படவில்லை. பாவப் பாரத்தாலும், ஆக்கினையாலும் அமிழ்த்தப்பட்டு இயேசு உரத்த சத்தமிட்டுக் கதறி மரித்தார்.

இரட்சிப்புக்கான விலை கொடுக்கப்பட்டபோது அந்த கொடூரமான வேளைகளில் யாரெல்லாம் அவரோடு இருந்தார்கள் அழுதுகொண்டே அவருடைய அன்னையும், யோவானும் அவரை விசுவாசித்த சில ஸ்திரீகளும் அவிசுவாசத்தில் அவரை பரிகாசம் செய்தவர்களும் இருந்தார்கள். ஆனால், அவரைச் சுற்றிலும் எப்போதுமிருந்தவர்கள் அங்கே இல்லை. அவருடைய சகோதர, சகோதரிகளும் கூட அவரைப் புரிந்து கொள்ளவில்லை.

அவரோடிருந்தவர்களும் கூட காலத்தைக் கடந்த உயிர்த்தெழுந்த இயேசுவை, மனித மீட்புக்கான பரிசுத்த ஆட்டுக்குட்டியை பிற்பாடுதான் அறிந்தும், புரிந்தும் மகத்துவத்தை உணர்ந்தும் உலகெங்கும் உன்னத இயேசுவின் உபதேசத்தை எடுத்துச் சென்றார்கள். நாம் பாவத்திற்கு மரித்து நீதிக்கு பிழைத்தால் அந்த அருமை இரட்சகரோடு என்றென்றும் வாழலாம்.

# தேவனுடைய வார்த்தை

## God`s Word

Greg Tidwell

அவர் பிரதியுத்தரமாக, மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே என்றார் (மத்தேயு4:4). நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வனாந்திரத்தில் பிசாசினால் சோதிக்கப்பட்ட போது, தொடர்ச்சியாக பிசாசுக்கு பதிலடி கொடுப்பதற்கு வசனங்களை ஆயுதமாகப் பயன்படுத்தினார். நம் கர்த்தரே தீய சக்திகளை எதிர் கொண்டாரென்றால், நாம் அனுதினமும் தீயசக்திகளை, சோதனைகளை எதிர் கொள்ள வேண்டியதாயிருக்கிறது. நாம் உயிர் வாழ வேண்டுமென்றால், நாம் கர்த்தருடைய முன் மாதிரியை நம் இருதயத்தில் பதிக்க வேண்டும். நாம் சரீரப்பிரகாரமான காரியங்களை மையப்படுத்தினால், உண்மையாகவே வாழ முடியாது. இவ்வுலகில் நாம் ஆகாரத்தினால் மாத்திரம் உயிர் வாழ முடியாது. நமக்கு இன்னும் சில காரியங்கள் தேவை.

பரலோகத்திலிருக்கிற நம் தேவன், நம் தேவைகளை அறிந்து நம்மை பராமரித்துப் போஷிக்கிறார். ஆனால், கிறிஸ்து மத்தேயு 6:33ல் நமக்கு போதிக்கிறபடியே தேவன் நம் தேவைகளை சந்திப்பார் என்னும் விசுவாசத்தில், **முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும், அவருடைய நீதியையும் தேட வேண்டும்.** ஆனால், தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும், நாம் எப்படித் தேடுகிறோம்? இவ்வுலகில் மனித உயிர் சரீர ஆகாரத்தினால் மாத்திரம் நீடிக்கப்படுவதில்லை. தேவனுடைய வார்த்தையில் காணப்படும் போஷாக்கினாலும் அது நீடிக்கிறது.

தேவன் பேசியிருக்கிறார். அவருடைய வார்த்தை நித்திய ஜீவனுக்கு வழிவகுக்கிறது. தேவனுடைய வார்த்தை நம் விசுவாசத்தைக் காட்டுகிறது. நாம் கீழ்ப்படிய நமக்கு போதிக்கிறது. தேவனுடைய வார்த்தையில் நாம் இவ்வுலகில் முழுமையாக, நிறைவாக வாழத் தேவையான தகவல்கள் தரப்பட்டுள்ளன. எனவே, நாம் நம் வாழ்வை அவருடைய சித்தத்திற்கு இசைவாக அமைத்துக் கொள்வோம்.

# முன்னானவைகளை நோக்குதல்

# Looking Forward


J.C. Choate

**வா**ழ்வதற்கு என்ன ஒரு பரவசமான காலம் இது! ஒரு நூற்றாண்டில் சில வருடங்கள் வாழ்ந்து, அடுத்த நூற்றாண்டிலும் சில வருடங்கள் வாழ்வது எத்தனை அலாதியானது! ஒரு சபையாக நாம் இருபதாம் நூற்றாண்டில் சில நஷ்டங்களையும், சில லாபங்களையும் அனுபவித்தோம். பல தவறுகள் இழைக்கப்பட்டன. ஆம் உலகத்தை சுவிசேஷ மயமாக்குகிற காரியத்தில் நாம் போதுமான அளவு நம் பங்க ளிப்பை அளிக்கவில்லை.

நடந்தவைகளைப் பற்றி நாம் எதுவும் செய்ய முடியாது. ஆனால், எது நடந்திருக்கலாம் என்று நம்மால் சிந்தித்துப் பார்க்க முடியும். அதற்கு நாம் அப்போஸ்தலனாகிய பவுலின் மனப்பான்மையைக் கொண்டிருக்க வேண்டும். "சகோதரரே அதைப் பிடித்துக் கொண்டே னென்று நான் எண்ணுகிறதில்லை; ஒன்று செய்கிறேன், பின்னான வைகளை மறந்து, முன்னானவைகளை நாடி, கிறிஸ்து இயேசுவுக் குள், தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருள்ளுக்காக இலக்கை நோக்கி தொடருகிறேன் [பிலிப்பியர் 3:13,14].

நாம் இப்போது 21 அம் நூற்றாண்டில் இருக்கிறோம். நாம் மிகுந்த எதிர்ப்பார்ப்புடனும் நம்பிக்கையுடனும் இந்நூற்றாண்டை எதிர்நோக்கி யிருக்கிறோம். இயேசு தம்முடைய ஜனமாகிய சபையைப் பார்த்து, "நீங் கள் உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிர சங்கியுங்கள்" என்று கேட்டுக்கொண்டார் [மாற்கு 16:15,16] இம்மாபெ ரும் பணியை நிறைவேற்ற அவர் நமக்கு உதவி செய்வதாக வாக்குத் தத்தம் பண்ணியிருக்கிறார் [ மத்தேயு 28:19-20] நம்முடைய இலக்கு தீர்மானத்தோடு அவருக்கு கீழ்ப்படிவதாகத்தான் இருக்கவேண்டும். நம்மால் செய்யமுடியாது என்று அவர் அறிந்திருக்கும் ஒன்றை செய் யும்படி நம்மை கேட்டுக்கொள்ள மாட்டார் என்பதை நிச்சயித்துக் கொள்ள முடியும். ஆகையால், நாம் நம்பிக்கையோடே முன்னோக்கிச் செல்ல முடியும். இவ்வுலகிலேயே மிகச்சிறந்த செய்தி நம்மிடம் தான் இருக்கிறது என்பது நமக்குத் தெரியும். அதாவது, நாம் நித்திய ஜீவ னின் நம்பிக்கையைப் பெற்றுக் கொள்ளும்படி இயேசு கிறிஸ்து நமக் காக மரித்தார் என்பது தான் அந்த நற்செய்தி. அது ஆண்களையும், பெண்களையும், குடும்பங்களையும், தேசங்களையும் சுருக்கமாக பார்த் தால் இவ்வுலகத்தையே மாற்றும். இவ்வளவு வேதாகம ஆதரவும் நமக் கிருக்கும் போது நம்மால் பிரதான கட்டளையை நிறைவேற்றுகிற காரி யத்தில் எப்படி தோல்வி அடைய முடியும்? அந்த இலக்கை நம்மால் அடைய முடியும் என்பதற்கு அநேக காரணங்கள் உண்டு.

## திருமறை தியானம்



**தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்**

நம்பிக்கை TV செவ்வாய் காலை 6:30 - 7:00 மணி

நம்பிக்கை TV வெள்ளி காலை 7:30 - 8:00 மணி

**மாத இதழ் : திருமறை ஆசான்**

## அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

**வேதாகம** அஞ்சல்வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம் ஆம், வேதாகமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு **7** பகுதிகளாப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட **100** பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

தொடர்புக்கு
இயக்குநர், அஞ்சல் வழி வேதாகமக் கல்வி
த.பெ. எண் 27, காங்கேயம் 638 701.
தமிழ்நாடு, இந்தியா.

பரிசுத்த வேதாகமத்தின் தெளிவான உபதேசத்தை வெளிப்படுத்தும் பல்வேறு தலைப்புகளில் வெளியிடப்பட்டுள்ள பல வண்ணங்களில் ஆன கைப்பிரதிகள் (Tracts) வேண்டுவோர் எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்

E.Z.S. ராஜநாயகம் : 98427 30382
P.R. சுவாமி : 098440 70763
P.C. பிலேமோன் ராஜா: 9244204420
B. அர்ஜுனன் : 994435 58041

## சத்திய வழி


பேச்சாளர் : **சகோ. P.R. சுவாமி**

நிகழ்ச்சி : வேதாகமக் கல்வி & அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

<u>தொடர்புக்கு</u> : சத்திய வழி, அஞ்சல் பெட்டி 8405, பெங்களூர் – 560084.

போன் : 080-25463507, செல் : 098440 70763

## கிறிஸ்துவின் வசனம்



பேச்சாளர் : **சகோ. B. அர்ஜூனன்**

தமிழன் TV : செவ்வாய் மாலை 6:00 – 6:30 மணி

நம்பிக்கை TV : வெள்ளி 8:00 – 8:30 மணி


மாத இதழ் : கிறிஸ்துவின் வசனம்

<u>ஆவிக்குரிய புத்தகங்கள் கிடைக்குமிடம்</u> ;

கிறிஸ்துவின் சபை, தபால் பெட்டி 5, வத்லகுண்டு – 624 206.

திண்டுக்கல் மாவட்டம். போன் : 04543 263278 செல் : 94435 58041

## கிருபையுள்ள வார்த்தை



பேச்சாளர் : **சகோ. P.C. பிலேமோன் ராஜா**

தமிழன் : ஞாயிறு காலை 6:45 காலை 7.00 மணி

அடிப்படை மற்றும் மேல்நிலை தபால் பாடங்கள்

நம்பிக்கை TV : ஞாயிறு மாலை 3:30 காலை 4.00 மணி

**Good News TV** : செவ்வாய் இரவு 7:30 – 8.00 மணி

பைபிள் பாடங்கள் : அடிப்படை மற்றும் மேல்நிலை தபால் பாடங்கள்

பார்வையற்றோருக்கு THE VOICE OF TRUTH ப்ரைல் இதழ் (தமிழ் / English)

தமிழ் மாதப் பத்திரிக்கை : கிருபையுள்ள வார்த்தை

**English Quaterly Magazine** : THE VOICE OF TRUTH INTERNATIONAL

**J.C. School of Evangelism** : கிறிஸ்தவர்களுக்கான சுவிசேஷப் பள்ளி

<u>தொடர்புக்கு</u> : தபால் பெட்டி 15, அரசரடி, மதுரை – 625 016.

செல் : 92 4421 4424, 92 4431 4431, 92 4420 4420

## ‘ சத்தியத்தின் குரல் ‘ சந்தா விண்ணப்பம்

“சத்தியத்தின் குரல்” காலாண்டு இதழுக்கு நான் சந்தாதாரராக இருக்க விரும்புகிறேன். இத்துடன் ரூ. 100 ( 4 இதழ்கள் ) (அ) ரூ. 200 ( 8 இதழ்கள் ) க்கான காசோலையை இத்துடன் இணைத்துள்ளேன். என் விலாசம் கீழே உள்ளது.

“சத்தியத்தின் குரல்” காலாண்டு இதழுக்கு என்னுடைய .............................................. முன்னிட்டு ஒருதரம் வெகுமதி (A Gift) கொடுக்க விரும்புகிறேன். அதற்கான ரூ. ...................... காசோலையை இத்துடன் இணைத்துள்ளேன் என் விலாசம் கீழே உள்ளது.

“சத்தியத்தின் குரல்” நூலை காலாண்டு தோறும் 25 பிரதிகள் பெறுவதற்காக ரூ. 500 அனுப்ப விரும்புகிறேன். அல்லது ஒவ்வொரு வருடமும் ரூ. 1500 அனுப்பி நான்கு காலாண்டுகளுக்கு 25 பிரதிகள் பெற்றுக்கொள்ள விரும்புகிறேன். (சபையார் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திப் பயன்பெறுங்கள்)

**(இந்தப் படிவத்தை உங்கள் காசோலையுடன் இணைத்து அனுப்புங்கள்)**

கடிதங்களும், காசோலைகளும், வரைவோலைகளும் அனுப்ப வேண்டிய முகவரி

**E.Z.S. ராஜநாயகம்**

“சத்தியத்தின் குரல்” காலாண்டு இதழ்

**288, தாராபுரம் ரோடு, காங்கேயம் – 638 701.**

**Ph : 04257 230030, Cell : 98427 30382, 99655 30385**

**E-mail : rajarichal@yahoo.co.in**

பெயர் : ____________________

தெரு / ரோடு : ____________________

நகரம் : ____________________ பின் கோடு : ____________________

மாநிலம் : ____________________

# 5 நிமிட வேத பாடம்

## தேவ ஞானம்

**Paula Bates**

1. "அன்றியும், அவர் அவர்களை நோக்கி, இங்கே .................... சிலர் தேவனுடைய .................... பலத்தோடே வருவதைக் காணு முன் .................... ருசிபார்ப்பதில்லையென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்" [ மாற்கு9:1]

2. "இருளின் அதிகாரத்தினின்று நம்மை .................... தமது அன்பின் குமாரனுடைய .................... உட்படுத்தின வருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்திரிக்கிறோம்" [கொலோ 1:13]

3. "ஆதலால், அசைவில்லாத .................... பெறுகிறவர்களாகிய நாம் .................... பக்தியோடு தேவனுக்கு பிரியமாய் ஆராதனை செய்யும்படி .................... பற்றிக்கொள்ளக்கடவோம்" [எபிரேயர்

4. "தேவனுடைய .................... இயேசு கிறிஸ்துவினுடைய நாமத்துக்கும் ஏற்றவைகளைக் குறித்து, பிலிப்பு .................... அவர்கள் விசுவாசித்த போது, புருஷரும் ஸ்திரீகளும் ...................."

5. "நம்மிடத்தில் அன்புகூர்ந்து, தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களற நம்மைக் கழுவி, தம்முடைய பிதவாகிய தேவனுக்கு முன்பாக நம்மை .................... ஆசாரியர்களு மாக்கின அவருக்கு மகிமையும் .................... என்றென்றைக்கும் உண்டாயிருப்பதாக. ஆமென்" [வெளி 1:6]

6. "உங்கள் .................... இயேசு கிறிஸ்துவினிமித்தம் வருகிற உபத்திரவத்திற்கும் அவருடைய .................... அவருடைய பெருமைக்கும் உங்கள் உடன் பங்காளனுமாயிருக்கிற யோவானாகிய நான் தேவ வசனத்தினிமித்தமும், இயேசு கிறிஸ்துவைப் பற்றிய சாட்சியினிமித்தமும் .................... என்னும் தீவிலே இருந்தேன்" [வெளி 1:9]

For Further Information, Please Contact :

# சத்தியத்தின் குரல்




## இந்நூலை நீங்கள் இவ்விதங்களில் பயன்படுத்தலாம்

* காலை, இரவு குடும்ப ஜெப நேர தியானத்திற்காக
* சபை கூட்டங்களில் வேத ஆராய்ச்சிக்காக
* புதிய ஆத்துமாக்களோடு சத்தியத்தைப் படிப்பதற்காக
* மாத இதழ்களில் கட்டுரைகள் வெளியிடுவதற்காக
* பிறருக்குக் கொடுக்கத்தக்கவர்களுக்குக் கொடுப்பதற்காக
* பக்தியில் வளர்ந்து சத்தியத்தில் ஊன்றக் கட்டப்படுவதற்காக
* கிறிஸ்துவுக்குள் திருமுழுக்குப் பெற்றவர்களுக்குக் கொடுப்பதற்காக
* சிறைச்சாலை ஊழியங்களில் பயன்படுத்துவதற்காக
* பள்ளி, கல்லூரி விடுதிகளில் வைப்பதற்காக
* மருத்துவமனை ஊழியங்களுக்கு கொண்டு செல்வதற்காக
* பிறரோடு சேர்ந்து வேதாகமத்தின் காரியங்களைக் கற்றுக்கொள்வதற்காக
* தொலைதூரப் பயணங்களில் படிப்பதற்காக

**பயன்படுத்தப்படாமல் வெறுமனே**
**ஒரு மூலையில் கிடக்க அனுமதிக்காதீர்கள்**

**வீணாகப் போடப்படும் எதுவும் எதையும் எப்போதும் சாதிக்காது!!**

எங்கள் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பாருங்கள்

நம்பிக்கை தொலைக்காட்சியில்
வெள்ளி காலை 7:30 - 8.00 மணி

தமிழன் தொலைக்காட்சியில்
சனி காலை 7.00 - 7.30 மணி

எங்கள் மாத இதழ்களைப் படியுங்கள்

'திருமறை ஆசான்'
'கிருபையுள்ள வார்த்தை'
'வோர்டு ஆப் கிரைஸ்ட்'

மேலும் விபரங்களுக்கு : E.Z.S. **ராஜநாயகம்,** தபால் பெட்டி 27, தாராபுரம் ரோடு, காங்கயம் – 638 701.
போன் : 04257 230030, செல் : 98427 30382, 99655 30385